283

# ண்டூசி

ஜனவரி 53....எட்டு அணா



ஜனவரி 1ந் தேதி முதல்

சென்னை பிரபாத் • சித்ரா • திருமகள்

நடைபெறுகிறது




மற்றும் 27—12—52 முதல் தமிழ்நாடெங்கும்

நடைபெறுகிறது


அன்றலர்ந்த மலர்போல்
புதுமையாகவும் மோகன
காந்தியுடனும் விளங்குங்கள்...
ஹமாம்
டாய்லட் ஸோப்பு
உபயோகியுங்கள்
HAMAM
TOILET SOAP
ஹமாம் புதிய
வாசனை பொருந்தியது...
அதிக நாள் வரவும்
செய்கிறது!
தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
A TATA PRODUCT
டாடா தயாரிப்பு
TS 6929
டாம்கோ சேல்ஸ் டிபார்ட்மென்ட், த. பெ. நீர். 31, சென்னை—1.
27 JAN 1953




அவர் இந்தியா பிலிம்ஸ், மதராஸ்-17

# குண்டூசி

ஜனவரி 1953

## இந்த ஊசியில்


நீதியும் நக்ஷத்திரங்களும் தலையங்கம் 5
உள்ளது உள்ளபடி ... 'ஜடாயு' 6
பண்டரிபாய் வாழ்க்கை வர்ணனை 8
குண்டூசியைக் கேளுங்கள்—பதில்கள் 14
பண்டரி பாய் ... மூவர்ணப் படம் 21
வி. என் ஜானகி ... ஆர்ட் படம் 22
ஜூபிடர் இரட்டையர் —'குதூகலன்' 24
ரேடியோ-சினிமா யுத்தம்! செய்தி 30
பொன் வயல் ... படக் காட்சிகள் 31
நுனிப்புல் ... 'வெட்டுக்கிளி' 35
பொதுஜனம் பேசுகிறார் ... 40
கீதா பலி ... ரேடியோ பேட்டி 45
வீரத்தேவன் கோட்டை ... 'லக்ஷ்மி' 51
சென்னையில் கோலாகலம் செய்தி 61
சென்னை வீதிகளில்
சினிமா நக்ஷத்திரங்கள்! ... 62
நாகேஸ்வர ராவ், சாவித்திரி
... ... ஆர்ட் படம் 63
லதா மங்கேஷ்கர் ஆர்ட் படம் 64
அமெரிக்க சினிமாத் தொழில் பேட்டி 65
கிராம மோஹினி-ரத்னு! சிறு கதை 73
இது செய்தி ... ... செய்திகள் 80
பிரம்மலோகம் ... ஸ்டுடியோச் செய்திகள் 82
குண்டூசி டைரி ... தினக் குறிப்பு 84



வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9


தனிப் பிரதி:

இந்தியா 8 அணு; வெளிநாடு 12 அணு; இலங்கை 50 சதம்.


குறிப்பு :—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.




# முதியோருக்கு மட்டும்தான்!




சிறுவர்களுக்குக் காட்டக் கூடாதென சில சினிமாப் படங்களுக்கு தணிக்கை போர்டார் பிறப்பித்த உத்தரவு இதுமாதிரிதான் அமுல் செலுத்தப்பட்டு வந்தது.

# குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

ஜனவரி, 1953

பட்டை—6 ஊசி—4 பிரதி—64


## நிதியும் நக்ஷத்திரங்களும்

இரண்டாவது உலக மஹா யுத்த காலத்தில், எதிரிகள் வருவதை அறிவிக்க அபாயச் சங்குகள் அலறின. எதிரிகள் வராத சமயங்களிலும் சில தடவை பரீக்ஷார்த்தமாக ஊதி, எதிரிகள் குண்டு வீசினால் ஜனங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், கூறை தலை மீது இடிந்து விழும்போது என்ன பாதுகாப்புகளைச் செய்துகொள்ள வேண்டும் என்பதையும் அதிகாரிகள் நமக்கு பயிற்சி செய்து வைத்தனர்.

மேலே சொன்னதெல்லாம் செயற்கையாய் ஏற்பட்ட ஆபத்துகளும், பாதுகாப்புகளும் ஆகும். ஆனால், இயற்கையாய் ஏற்படும் ஆபத்துகளை எச்சரிக்க அபாயச் சங்கு அலறாது; அதிலிருந்து தப்புவதற்கு நமக்கு முற் பயிற்சியும் கிடையாது அல்லவா? இது மாதிரி ஒரு சம்பவம் தான் சில தினங்களுக்கு முன் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் உயிருக்கும் பொருளுக்கும் படு சேதத்தை விளைவித்திருக்கிறது. உயிருடன் இருப்பவர்களோ ஆடையின்றியும், அன்னமின்றியும், வசிக்க வீடின்றியும் தவித்துத் தத்தளிக்கிறார்கள்.

நம் முதல் மந்திரி புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், மக்களையும் நேரில் பார்த்த போது, "ஒரு புயலுக்கு இவ்வளவு நாசசக்தி இருக்கும் என்பதை நேரில் பார்த்த பிறகு தான் தெரிகிறது" என்று கூறியிருக்கிறார். வெளியூர்க்காரர்களால் ஊகித்து அறிய முடியாத அளவுக்கு புயல் படுநாசம் விளைவித்திருக்கிறது என்பதில் சந்தேகமே யில்லை.

பஞ்சத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்னம், ஆடை, இருக்க வீடு எல்லாமே ஏராளமாய் வேண்டியிருக்கிறது. உங்களால் என்ன முடியுமோ அதையும், முடியாததைக் கூட கொஞ்சம் முயற்சி செய்தும் கூடுமான உதவியளிக்க வேண்டிய சந்தர்ப்பம் இது.

சென்னையில் இதற்காக கவர்னரால் ஒரு நிதி திரட்டப்பட்டு வருகிறது. ராயல சீமையில் ஏற்பட்டுள்ள பஞ்ச நிவாரணத்திற்காக ஜி. வரலக்ஷ்மி, என். டி. ராமராவ் முதலியவர்கள் தெருக்களில் பிச்சை எடுத்து ஏராளமான நிதி திரட்டிக்கொடுத்தார்கள். அது போலவே இப்போது தமிழ்ப் பட நக்ஷத்திரங்களும், பட முதலாளிகள் முதலானோரும் தெருக்கள், கடைகள், குதிரைப் பந்தய மைதானம் முதலிய இடங்களில் நிதி வசூலித்துத் தரமுன் வந்திருப்பது ரொம்பவும் பாராட்டத் தக்க செய்கையாமாகும்.

லக்ஷாதிபதிகளான நக்ஷத்திரங்கள் பிச்சை எடுக்க வருகிறார்கள் என்றால் அவர்களைப் பார்க்க நீங்கள் ஆவலுடன் கிளம்புவீர்கள் என்பது நிச்சயம். ஆனால் ஒன்று சொல்லுகிறேன்: நக்ஷத்திரங்களைப் பார்க்கும் ஆவலில் நீங்கள் நிதிக்கு உதவி அளிக்க மறந்துவிடக் கூடாது. உங்கள் பையில் உள்ளதை உடனே கொடுத்து உதவவேண்டும். பையில் இல்லாததைப் பிறகு கட்டாயம் இந்த நிதியில் சேருங்கள்.

# உள்ளது உள்ளபடி



'ஜடாயு'

சென்ற மாதம் பூராவும் சென்னையில் எந்த இடம் திரும்பினாலும், ஒன்று ''ஆளவந்தார் கொலை வழக்கு'', அல்லது ஆந்திர மாகாணம்பற்றிய பேச்சு—இவை தான் காதில் விழுந்துகொண்டிருந்தன. பொட்டி ஸ்ரீராமுலுஎன்ற ஐம்பத்தோறு வயதான ஆந்திரத் தியாகி ஐம்பத்தெட்டு நாள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு—விண்ணுலகேகினார். காந்திஜி உண்ணாவிரதம் இருந்தார்; உலகமே கொந்தளித்து எழுந்தது; அவர் தம் லக்ஷியத்தில் வெற்றி பெற்றார். ஆனால், ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்தார்; யாருக்காக அவர் உண்ணாவிரதம் இருந்தாரோ அந்த ஜனங்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களே—ஒருமுகமான முடிவிற்கு வந்து அவரது உயிரைக் காக்கத் தவறிவிட்டனர். ஆந்திர மாகாணப் பிரிவினைக்காக ஸ்ரீராமுலு உண்ணாவிரதமிருந்தது தவறுதான்; சென்னையையும் சேர்த்துக் கேட்டது அதனிலும் பெரிய தவறுதான். ஆனால், இது காரணமாக, தமிழர்கள் ஸ்ரீராமுலு முன்பு நம் தேச விடுதலைக்காக செய்துள்ள தியாகங்களை மறந்தார்களானால் அதைவிட மாபெருந் தவறு இருக்கவே முடியாது.

## இதோ ஆந்திர மாஹாணம்!

ஸ்ரீ. ஸ்ரீராமுலுவின் மறைவிற்குப் பிறகு, சென்னையில்லாத ஆந்திர மாகாணத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கான தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சில மாதங்களிலேயே தனி ஆந்திர மாகாணமும் ஏற்பட்டுவிடக் கூடும். இப்பொழுது பிரகாசம்காருகூட இந்த ஏற்பாடுகளை எதிர்க்கவில்லை; அதற்குப் பதில் ஆந்திரர்கள் மட்டுமன்றி—தமிழர்கள்கூட ஒத்துக்கொள்ளக்கூடிய ஏதோ புதிய யோசனை தம்மிடம் இருப்பதாக இப்பொழுது அறிக்கை விட்டிருக்கிறார். அட, பாவமே! இந்தப் புது யோசனை ஸ்ரீ. ஸ்ரீராமுலு உயிருடன் இருந்தபோதே பிரகாசம்காருவின் மூளையில் தோன்றியிருக்கக் கூடாதா!

## பிரிவினை வேண்டாம்!

அரசியல் வட்டாரங்களில் ஆந்திர மாகாணக் கூச்சல் எவ்வளவுக்கு வலுவடைந்துள்ளதோ அவ்வளவுக்கு தென்னாட்டுப் படஉலகில் ஆந்திர—தமிழ் ஒற்றுமை ஆச்சரியப்படவேண்டிய அளவுக்கு வலுத்துப் போயிருக்கிறது. அதுவும், சென்ற ஐந்து வருஷங்களுக்குள் தமிழ்ப் படத் தொழிலும் தெலுங்குப் படத் தொழிலும் பிரபல ''ஸயாமிஸ் இரட்டைக் குழந்தைகள்'' போல பிரிக்க முடியாதபடி ஒன்று கலந்துவிட்டன. 'எங்கே ஆந்திர மாகாணம் ஏற்பட்டு, தென்னாட்டு சினிமாத் தொழில் இரண்டு பிரிவாகிவிடுமோ' என்ற பீதி தமிழ் தெலுங்கு இரு பாஷைப் பட முதலாளிகளையுமே பீடித்திருக்கிறது.

## சினிமாவில் ஆந்திரஸ்தான்?

இப்பொழுது தெலுங்குப் படமுதலாளிகள் தமிழ்ப் படம் தயாரிக்கின்றனர்; பதிலுக்கு தமிழ்ப் பட முதலாளிகளும் தெலுங்குப் படங்களை தயாரிக்கின்றனர். ஆந்தர நக்ஷத்திரங்கள் அத்தனை பேரும் தமிழ் நக்ஷத்திரங்களாகி விட்டனர். சில தமிழ் நக்ஷத்திரங்களும் ஆந்திர நக்ஷத்திரங்களாக மாறியிருக்கின்றனர்.

படமுதலாளிகள் குறைந்த செலவில் இரண்டு படங்களைத் தயாரிப்பதற்கும், அப்படி எடுத்த படங்களை அதிகமான இடங்களில் காட்டி ஏராளமான வசூலைப் பெறுவதற்கும், இன்னும் இதுபோல எத்தனையோ விதங்களிலும் சௌகரியமாயிருக்கிறது இந்த ''இரட்டைப் படமுறை.'' இதற்கு மாறாக, தெலுங்கர்கள் படத் தொழிலைப் பிரித்துக்கொண்டு போனால் பாகிஸ்தான் படத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் கதிதான் தங்களுக்கும் ஏற்படும் என்பதை ஆந்திரப் பட முதலாளிகளும், மிகுந்த சங்கடங்களும் நஷ்டமும் ஏற்படும் என்பதை தமிழ்ப் படமுதலாளிகளும் உணர்ந்துள்ளனர்.

நம்படத்தொழிலினர் ஏதாவது ஒருபிரிவினையை ஆதரிக்கிறார்கள் என்றால், அது பணத்தை ஜனங்களிடமிருந்து பிரித்துத் தங்கள் பெட்டிக்குள் குவித்துக் கொள்ளும் 'பிரிவினை'தான்! எந்தப் பட்டணத்தை யார்கொண்டுபோனால் அவர்களுக்கு என்ன கவலை!

# அகில இந்திய
# காதி, ஸ்வதேசி, கைத்தொழில் பொருட்காட்சி

காங்கிரஸ் மைதானம், தேனாம்பேட்டை, மதராஸ்.

1952 டிஸம்பர் 18 தேதிமுதல் ஆரம்பமாகி, வெற்றிகரமாக நடைபெறுகிறது

பிரசித்தி பெற்ற

## நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியாரின்

நாடகங்கள்

வசீகரமான பல்வேறு இதர காட்சிகள்

ஜெயன்ட் வீல், மெர்ரி-கோ-ரவுண்ட், சேரோ-பிளேன், கிணற்று வியூகத்தில் பிராணாபாயமான ஸைக்கில் சவாரி, மெழுகு மாடல், மற்றும், பேசும் பொம்மைகள்.

— புதிய அம்சம் —

கே. ஜி. எப். சுரங்க மாடல் காட்சி.

கலை, பண்பு, பண்டைய ஆராய்ச்சிப் பொருள்களைப் பற்றிய அபூர்வக் காட்சி.

பிரவேசக் கட்டணம்: அணா 5.

காட்சி நேரம்: தினசரி மாலை 2 மணிமுதல்—இரவு 9 மணிவரை.

ஞாயிற்றுக் கிழமைகளில், விடுமுறை நாட்களில்:
காலை 9 முதல் 11 வரை,—மாலை 2 முதல் 9 மணிவரை.

ஆர்கனைஸர்: என். எஸ். ராமபத்ரன் பி.ஏ., பி.எல்.

# பண்டரி பாய்



சினிமாவிலோ, நாடகங்களிலோ சேர்ந்து முன்னணிக்கு வருவதற்காகப் பல வருஷங்கள் பல விதமான கஷ்டங்களை அனுபவித்துள்ள நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வரலாறுகளை நீங்கள் நிறையப் படித்திருக்கிறீர்கள். கலை ஆர்வம் ஒரு பக்கம் உந்த, அதற்கு மாறாக முட்டுக்கட்டையாய் ஒரு தகப்பனாரோ, கணவரோ குறுக்கே நிற்க—இப்படியாக அவர்கள் விவரணைக்கு மேற்பட்ட அவஸ்தைகளையெல்லாம் பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் தங்கள் எதிர்காலத்திற்காகத் தாங்களே



"கண்கள்" நாடகத்தில் பண்டரி பாய், சகஸ்ரநாமம்

# வாழ்க்கை வர்ணனை

போராடியவர்கள். பிரபல நடிகை மாலதியைப் போல "பராசக்தி" பண்டரிபாயும் பிறரிடையே நிகழ்ந்த யுத்தத்தின் சமாதானச் சின்னமாக-நாடகத்தின் வழியாக — சினிமாவில் நுழைந்தவர். அவருக்காக தகப்பனும் மகனும் நேர்மாருகப் 'போரி'ட்டார்களே! அப்படியாவது பண்டரிக்கு நடிப்புக் கலேயில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சமாவது உண்டா? அது தானில்லே! அவரது தமையன் மட்டும் 'போர்' தொடங்கியிராமலிருந்தால், பண்டரிபாய் தம் இஷ்டப் பாதையிலேயே சென்று, முடிவில், ஒரு ஆஸ்ரமத்தில் சதா ஹரிபஜனே செய்துகொண்டிருக்கும் சன்யாசினியாக இன்று விளங்கியிருக்கக் கூடும்! ஆனல் விதியின் விளேயாட்டு விந்தை மிக்கது அல்லவா? பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டிருக்க வேண்டிய பண்டரிபாய்— பனிரண்டே வருஷங்களுக்குள் பூராவாக மாறிப்போய் விட்டதோடு—பக்தியையே பரிகஸிக்கும் ஒரு படத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் படியாகியிருக்கிறதல்லவா!



வட கன்னட ஜில்லாவிலுள்ள பட்கல் என்ற ஊரில் வசித்து வந்த டிராயிங் மாஸ்டர் ரங்கராவ்—அவரது மனேவி, உபாத்தியாயினி காவேரி பாய் — இவர்களது பத்துக் குழந்தைகளுள் ஒன்ருய் (1930ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில்) பிறந்தவரே நம் பண்டரி பாய். அவரது மற்ற நான்கு சகோதரிகளில் ஒருவரான மைனுவதியும் சமீபத்தில், ஒரு சினிமா நடிகை ஆகி, "பொன் வயல்", "கண்கள்" ஆகிய படங்களில் நடித்து வருகிருர். வட கன்னடப் பிரதேசத்தில் வசித்து வந்தபோதிலும் பண்டரிபாய்க்கு மங்களூர்தான் சொந்த ஊர். இவர்கள் சாரஸ்வத பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள். காவேரி பாய் சமீப காலம் வரையில் உபாத்தியாயினியாகவே வேலே பார்த்து வந்தார். ஆனல் தகப்பனுரோ டிராயிங் மாஸ்டர் உத்தியோகத்தைப் பல வருஷங்களுக்கு முன்னரே உதறிவிட்டார். இதற்குக் காரணம் அவருக்கு நாடகத் துறையில் இருந்தஆசை




னான். உத்தியோகத்திலிருந்து விலகிய தும், அவர் "அம்பா பிரஸாதிகா நாடக மண்டலி" என்ற ஒரு சொந்த நாடகக் கம்பெனியை ஆரம்பித்து நாடகங்களை நடத்த முற்பட்டார். இந்த நாடகங்க ளில் அவர் மட்டுமன்றி அவரது புத்திரர் களும்கூட நடித்து வந்தனர்.


சிறிது காலத்திற்கெல்லாம் ரங்கராவ், இந்த நாடகக் கம்பெனியை வேறொரு வருக்கு விற்றுவிட்டு, சில மாதங்கள் சும்மா இருந்தார். ஆனால், நடிப்புக்கலை அவரை சும்மா இருக்கும்படி விட்டுவிட வில்லை. அவர் மீண்டும் முயற்சி செய்து "ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய நாடக சபா" என்ற பெயருடன் ஒரு புது நாடகக் கம் பெனியை ஆரம்பித்தார். நாடகங்களில் நடித்து வந்ததோடு அவர் (கதா கால க்ஷேபம் செய்வதற்கும் தேர்ச்சி பெற் றிருந்ததால்) அடிக்கடி கதா காலக்ஷே பங்களும் செய்து வந்தார்.

நாடகக் கம்பெனியோ சொந்தக் கம் பெனி; அவரும், அவரது புத்திரர்களும் அதில் நடிகர்கள்; இருந்த போதிலும் அவருடைய புத்திரிகளில் யாருமே நாட கத்தைப் பற்றிப் பேசக்கூட கூடாது! இது தகப்பனாரின் கடுமையான உத்தரவு.

அந்தக் காலத்தில், நாடக உலகைப் பற்றி மக்கள் கேவலமாகக் கருதி வந்ததால் குடும்ப ஸ்திரீகளுக்கு நாடக வாழ்க்கை உகந்ததே அல்ல என்று பிடி வாதமா யிருந்தார் பண்டரியின் தந்தை. இதற்குப் பதில் அவர் தம் புத்திரிக்கு கதா காலக்ஷேபம் செய்வதற்கு மட்டும் பயிற்சியளித்தார்.

பண்டரி பாய் பள்ளியில் படித்தபடி யே—10 வயது நிரம்புவதற்குள்—கதா காலக்ஷேபக் கச்சேரி செய்யும் திறமை யைப் பெற்று விட்டார். பிறகு இரண் டாவது பாரத்துடன் படிப்பை முடித் துக்கொண்டு, பல ஊர்களில் தொடர்ச்சி யாய் கதா காலக்ஷேபங்கள் செய்யப் புறப்பட்டார்.

பண்டரி பாய் கன்னடம், மராத்தி ஆகிய இரு பாஷைகளிலும் கதா காலக்ஷேபங்கள் செய்துவந்தார். அவரது கதா காலக்ஷேபங்களுள்





செல்லப் பிள்ளை



பராசக்தி

இவை "சுகன்யா", "புரந்தரதாஸ்" மிக பாராட்டப் பட்டவைகளாகும். முதலில், வட கன்னடப் பிரதேசங்களில் பல ஊர்களில் காலக்ஷேபம் செய்து விட்டுப் பிறகு, தெற்கே மைசூர் பிராந்தியங்களுக்கு வந்து சேர்ந்தார். வந்த இடத்தில் அவரது தமையன் "ஆதர்ஸ நாடக சபா" என்ற ஒரு நாடகக் கம்பெனியை



செல்லப் பிள்ளை




ராஜ விக்கிரமா

Parthan



ஆரம்பித்தார். அவர் எவ்வளவோ முயன்றும், அவரது நாடகங்களில் முக்கிய ஸ்திரீ பார்ட்டாக நடிப்பதற்கு சரியான நபர் கிடைக்கவில்லே. கடைசியில், அவர் யோசித்தார்: "வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவார்களா; தங்கை பண்டரி இருக்கையில் தேடியலேவானேன் ஊரெல்லாம். பண்டரி நாடகங்களில் நடித்தால் என்ன கெட்டு விடும்?'' என்று.

தந்தையின் போக்கு மகனுக்குத் தெரியாதா! அதனுல் நயமாக அவரிடம் விஷயத்தைச் சொல்லிப் பார்த்தார். ஆனுல், கடுமையாய் சீறி விழுந்தார் தந்தை. 'அந்தப் பேச்சையே பேசக் கூடாது' என்று உத்தரவு பிறப்பித்தார். ஆனுல், புத்திரர் அதோடு விட்டு விடவில்லே. "ஏன் கூடாது?'' என்று கேட்டுக் கொஞ்சம் அழுத்தமாகவே வாதித்தார். வாக்குவாதம் முற்றி இருவரிடையேயும் மனஸ்தாபம் கூட ஏற்பட்டுவிட்டது. ஆனுல் என்ன வந்தாலும் சரி என்ற துணிவுடன் தமையன் தன் சகோதரி (பண்டரி)யை மேடையில் ஏற்றி நடிக்கச் செய்துவிட்டார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு, தந்தையின்



பூங்கோதை



மனிதன்

கோபம் தணிந்து, அவர்களிடையே தோன்றிய மனஸ்தாபம் நீங்கியது. அது மட்டுமல்ல; தந்தையே மைந்தனின் நாடகக் கம்பெனியில் நாடகங்களில் நடித்தார்! மேலும், இந்த நாடகக் கம்பெனியில் புத்திரர்கள், புத்திரி அத்தனே பேரும் நடித்தது குறிப்பிடத் தக்கது. மேற்சொன்ன கம்பெனியார் நடத்தி வந்தது கன்னட

[தொடர்ச்சி 77ம் பக்கத்தில் பார்க்கவும்]



# “இது மெய்...

## ...நீங்களும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகைப்பெறலாம்”

## என்று கூறுகிறார் சுசீலா




நிச்சய பலனைத்தரும் ஒரு ஒழுங்கான அழகு பராமரிப்பு இதோ! சுசீலா கூறுவதாவது: “நான் லக்ஸ் டாய்லட் சோப்பின் நறுமணம் கொண்ட வெண்மையான நுரையை சருமத்தின் மேல் நன்ருகத் தேய்க்கிறேன். பிறகு கழுவி, மிருதுவான துண்டினல் துடைக்கிறேன். சருமம் புது அழகைப்பெறுகிறது.”

## லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 367-50 TM



# குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலை சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதிலளித்து, மேற்சொன்ன கலைகளை சீர்திருத்துவதே என்னுடைய நோக்கம் ஆகும்.

எம். ஆர். மெய்யநாதன் (சூரியகாந்தி)

எஸ். பாலசந்தர், டி. ஆர். மஹாலிங்கம், எஸ். ஏ. நடராஜன் இம்மூவருள் ஆங்கிலம் அதிகம் தெரிந்தவர் யார்?

எஸ். பாலசந்தர்தான். அவர் ஆங்கிலம் நன்கு கற்றவர் என்பதோடு நடையுடை பாவனைகளிலும் ஆங்கிலேயர் மாதிரி நடந்து கொள்ளுபவர்.

எல். திருமலைராஜ் (விக்ரமசிங்கபுரம்)

நான் சென்னைக்கு வந்தால் ஒரு ஸ்டுடியோவுக்குள் சென்று பார்க்க முடியுமா?

முடியாது. ஸ்டுடியோ ஒரு தொழிற்கூடம். வெளி மனிதர்களை யெல்லாம் வேடிக்கை பார்க்க அநுமதித்துக் கொண்டிருந்தால் அவர்கள் வேலை தடைப்படக்கூடும் அல்லவா?

பி. ஏ. சாமி (மங்கலக்குரிச்சி)

என் மைத்துனன் கல்யாணத்தின் போது நடனம் ஆடுவதற்கு குமாரி கமலாவை அழைத்தால் வருவாரா?

வராமலென்ன? இதுமாதிரி சந்தர்ப்பங்களுக்குப் பயன்பட வேண்டும் என்றுதானே அவர் நடனம் பயின்றிருக்கிறார்.

எஸ். கே. சேக்கமுத்து (சிங்கப்பூர்)

வி. நாகய்யாவும், டி. வி. ரத்தினமும் உடன் பிறந்தவர்களா?

இல்லை. கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் என்ன சம்பந்தமோ அதே சம்பந்தம்தான் இவர்களுக்கு!

எம். ஏ. லத்தீப்கான் (சிங்கப்பூர்)

"புயல்" படத்தில் நடிக்கும் ஜி. எம். குல்ஸார் ஜி. எம். பஷீருடைய சகோதரியா? அவருடைய விலாஸத்தைத் தெரியப்படுத்தவும்.

குல்ஸார் பஷீரின் மனைவி விலாஸம்:— திருச்சி ரோடு, கோயம்புத்தூர்.

கே. எம். ஜெயவீர (பலாங்கொட)

புஷ்பவல்லியின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

"ராமன் தெரு, தியாகராய நகர், சென்னை-17" என்று எழுதலாம்.

குமாரி (கிருட்டினகிரி)

ஜனவரி "குண்டூசி"யில் "வீரத் தேவன் கோட்டை"யை எழுதும் "லக்ஷ்மி" "ஆனந்த விகடனி"ல் கதை எழுதிய அதே "லக்ஷ்மி" தானா?

ஆம்; அவரேதான். இவரது "காஞ்சனையின் கனவு" கதைதான் "காஞ்சனா" படமாக வெளி வந்திருக்கிறது என்பது உமக்குத் தெரிந்திருக்கும்.

கே. எஸ். செல்லம் (ஈரோடு)

கல்யாணி குழந்தையைக் கொலை செய்து, தானும் தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக "பராசக்தி" படத்தில் போலீஸார் குற்றம் சாட்டுகின்றனர். குழந்தை ஆற்றில் எறியப்பட்டதைப் பார்த்த போலீஸார் விமலாவையோ, அவள் ஏறிவந்த பட்டகையோ ஏன் கவனிக்கவில்லை. அதேபோல், குழந்தை வந்து விழுந்



ஏவி.எம். விரைவில் வெளியிடப்போகும் ''செல்லப்பிள்ளை'' தமிழ்ப் படத்தில் கண்ணாம்பாவும், பி. ஆர். பந்துலுவும் தோன்றும் ஒரு 'கஷ்டமான' கட்டம்.

---

ததும், கல்யாணியையோ, போலீஸாரையோ விமலா ஏன் பார்க்கவில்லை? கருணாநிதி இதுமாதிரி நம்ப முடியாத வகையில் ஏன் கதையை எழுதினார்?

புராணக் கதைகளில் எவ்வளவோ நம்ப முடியாத விஷயங்களை ஜனங்கள் பார்த்து ரஸித்திருக்கிறார்களே; ஆதலால் தம் கதையிலுள்ள நம்ப முடியாத விஷயங்களையும் அவர்கள் சகித்துக் கொள்ளுவார்கள் என்ற தைரியம் போலும் அவருக்கு.

**எஸ். செல்லையா (சங்கரன்கோவில்)**

''ஹரிதாஸ்'', ''சந்திரலேகா'' இவ்விரண்டு படங்களில் எது சென்னையில் அதிக வாரங்கள் ஓடியது? எத்தனை வாரம்?

''ஹரிதாஸ்''தான் சென்னையில் அதிக காலம்—112 வாரங்கள்—ஓடிய படம்.

**வி. காதர் ராவுத்தர் (குத்தனூர்)**

டி. ஆர். மஹாலிங்கம் நடித்துள்ள படங்களுள் மிகச் சிறந்தது எது?

''நாம் இருவர்'', விடாடல் ''ஞான சௌந்தரி'' இரண்டையும் கூறலாம்.

**கே. நையன் (தென் மலபார்)**

எம். எஸ். சுப்புலக்ஷ்மி மீண்டும் சினிமாப் படங்களில் நடிப்பாரா?

நடிப்பார் என்ற நம்பிக்கையைக் காணோம். அப்படியே நடித்தாலும், அவரது ''வைதீகமான'' நடிப்பு தலைகீழ் நாகரீகமாக மாறிப் போயிருக்கும் தற்போதைய சினிமா உலகில் சோபிக்குமா என்பது சந்தேகமே.



நாகய்யா டி. ஆர். ராஜகுமாரிக்கு கிரிக்கெட் ஆடிக் காட்டுகிறார்—'அவர் இந்தியா பிலிம்ஸ் "என் வீடு" படத்தில்.

க. ராஜகோபால் (டெனியாய)

ஹொன்னப்ப பாகவதர் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

குப்பியின் கன்னட "குணஸாகரி", தமிழ் "சோதனை" இரண்டிலும் அவர் நடித்திருக்கிறார். கோவையில் தயாராகி வரும் "ஜீவகவி"லும் அவர் நடித்து வருகிறார்.

வி. ராமஸ்வாமி (கோடவாசல்)

"மாப்பிள்ளை" படத்தில் கதாநாயகனுக்கு லாட்டரியில் பிரைஸ் விழுந்திருப்பதை அறிந்த வில்லன் அதை அபகரிப்பதற்காக தன் மனைவியை கதாநாயகனுடன் உறவாடச் சொல்லுகிறானே! அவளும் ஆட்சேபியாமல் அப்படியே செய்கிறாளே! இதை என்னவென்று சொல்லுவது?

நாகரீகமான விபசாரம் என்று சொல்லலாம். அல்லது சில சினிமா கதாசிரியர்களின் கற்பனா சக்தி சாக்கடையில் அமிழ்ந்து போகும் தருணத்தில் உதயமாகும் "கருந் தாமரை" மலர்கள் என்றுகூடச் சொல்லலாம்!

* * *

"பராசக்தி" பாட்டுப் புத்தகத்தில், கதைச் சுருக்கத்தில், "தென்றலுக்குப் பின் புயலும், புயலுக்குப் பின் தென்றலும்"—என்று காணப்

படுகிறதே. "புயலுக்குப்பின் அமைதி" என்று பிரபல ஆசிரியர் காண்டேகர் எழுதியிருக்கிருர். எது சரி?

'புயலுக்குப் பின் தென்றல் வீசியதா இல்லையா?' என்று நாகப்பட்டினம் நண்பர் ஒருவருக்கு எழுதிக் கேட்டுப் பார்த்துவிடலாமே நீர்.

**டி. எம். ஏ. சையிது**
**(கிண்ணியா, இலங்கை)**

"குண்டூசி"யைக் கையில் எடுத்தால் குத்திக் காயப்படுத்துகிறதே! காரணம்?

நீர் அதனுடன் "தவருன முனை"யில் உறவாடியிருப்பீர்!

**வீர அளகப்பன் (கண்டனூர்)**

"புது முகங்கள் தேவை" என்று சில காலத்திற்கு முன் மாடர்ன் தியேட்டர்ஸார் பல பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்களே. சமீபத்தில் அவர்கள் எடுத்த படங்களில் எத்தனை புதிய முகங்களை அறிமுகப் படுத்தியிருக்கிருர்கள்?

ஒருவேளை பரிசீலனை செய்து தீர்க்க முடியாத அளவுக்கு புதுமுக விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவோ, என்னவோ! அதனுல் அவர்கள் சினிமாவுக்குப் புதிதான முகங்களுக்குப் பதில், தம் ஸ்டுடியோவுக்குப் புதிதான சில முகங்களை அறிமுகப் படுத்தியிருக்கிருர்கள்.

**வி. ஆர். சுப்ரமண்யம்**
**(வெலிமடை, இலங்கை)**


புஷ்பவல்லிக்கு கல்யாணம் ஆகிவிட்டதா? எனின், கணவர் பெயரென்ன? குழந்தைகள் உண்டா?

ரங்காச்சாரி என்பவரின் மனைவியாகவும், ஒரு புத்திரனுக்குத் தாயாகவும் அவர் விளங்குகிருர்.

---

ஜுபிடர்-மேகலா தயாரிப்பான "நாம்" தமிழ்ப் படத்தில் எம். ஜி. ராமச்சந்திரனும், வி. என். ஜானகியும் கவலையின்றி காதல் புரியும் காட்சியைக் காணலாம்.





''பணம்'' தமிழ்ப் படத்தில் பி. ஆர். பந்துலு, பத்மினி, டி. ஏ. மதுரம் நடிக்கும் இக்காட்சியைக் காணலாம்.

**கே. எஸ். ஏ. பரமசாமி (சென்னை-1)**

இப்போதெல்லாம் நடிகர் நடிகைகள் அரசியல் மேடையில் ஏறிப் பேசத் தொடங்கி விட்டார்களே, காரணம் என்ன?

'திரையில்தான் ஜனங்கள் பார்க்க மறுக்கிறார்களே, அதனால் நேரிலேயே (அரசியல்) மேடையில் தோன்றியாவது ஆதரவு தேடுவோம்'—என்ற எண்ணந்தான்!

**அ. தமீம் (யாழ்ப்பாணம்)**

''மாப்பிள்ளை'' படத்தில் பி. கே. சரஸ்வதியே தான் பாடுகிறாரா? அல்லது இரவல் குரலா?

இரவல் குரல்தான்; சரஸ்வதிக்குப் பாடத் தெரியாது.

**எஸ். ஏ. வேதகிரி செட்டி (கிருஷ்ணகிரி)**

'பாய்ஸ் கம்பெனி' எந்த ஊரில் இருக்கிறது? நான் பாய்ஸ் கம்பெனியில் சேர விரும்புகிறேன்.

நீர் எந்த பாய்ஸ் கம்பெனியைப்பற்றிக் கேட்கிறீர்! உமது கேள்வி விளக்கமாயில்லை. ஆனால், நான் விளக்கமாக உமக்கு ஒன்று கூறமுடியும். அதாவது, பாய்ஸ்களே (பையன்களே) பூராவாக நடிக்கும் கம்பெனி ஒன்றுகூடக் கிடையாது என்று.

**அ. அங்கமுத்து (உளுந்தூர்பேட்டை)**

வெற்றி பெறும் ஒரு படத்தின் முழுப் பெருமையையும் பெறத் தக்கவர் யார்? டைரெக்டரா? நடிகர்களா? வசன கர்த்தாவா?

''குண்டூசி'' தீபாவளி மலரில் வெளிவந்திருக்கும் டைரெக்டர் ராமனின் கட்டுரையை இன்னொரு முறை படியும். எல்லோருடைய உழைப்பும் ஒருங்கே பரிமளிக்கும் போதுதான் ஒரு படம் சிறந்த வெற்றி பெறுகிறது.

எம். கே. ராஜகோபாலன் (நவனகிரி)

நீங்கள் முதன் முதலில் பார்த்த படம் எது?

ஒரே காட்சியில் காட்டப்பட்ட ''கஜேந்திர மோக்ஷம்'' என்ற இந்தியப் படமும், ''வானிஷிங் ரைடர்'', என்ற மேனாட்டு மௌனப் படமும்தான்.

மு. கணேசன் (குற்றாலம்)

நான் இதற்கு முன் பல தடவை கேள்விகள் கேட்டிருந்தும் நீங்கள் பதில் சொல்லாததேன்? நான் அவ்வளவுக்குப் பாவம் செய்தவனா?


அட, பாவமே! இதோ நீர் புண்ணியம் செய்தவராகா மாறிக் கொண்டிருக்கிறீரே! உம் கேள்விக்குப் பதில் கிடைக்காமற்போனதற்கு: (1) முன்பே சில தடவை பதில் சொல்லப்பட்டதாக, அல்லது (2) பதில் சொல்லுவதற்கு அருகதையில்லாததாக, அல்லது (3) ஆபாசமானதாக உம் கேள்விகள் இருந்திருக்கலாம். நான் இப்பகுதியில் ஹாஸ்யச் சுவையுடனே புத்திசாலித்தனமான பதில்களையே வெளியிட விரும்புவதால், ஹாஸ்யச் சுவையும் புத்திசாலித்தனமுமான கேள்விகளுக்கே முதலிடம் கொடுக்கிறேன்.

முத்து வெங்கடாசலம் (புதுச்சேரி)

நடிகைகள் எப்பொழுது பொய் சொல்லுவார்கள்?

சிலர் வயதைப்பற்றிக்கேட்கும்போது; வேறு சிலர் முந்தின வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும்போது; மற்றும் சிலர் ஜாதியைப் பற்றிக் கேட்கும் போது; இன்னும் சிலரோ தகப்பனைரைப்பற்றிக் கேட்கும்போது!

கே. ஆர். ராமசாமிக்கு, பி. டி. சம்பந்தம் ஏதோ 'டோஸ்' கொடுக்கிறார் போலிருக்கிறது!—ஏவி. எம்.மின் புதுத் தயாரிப்பான ''செல்லப் பிள்ளை'' தமிழ்ப் படத்தில்.





கணவன் 'வரவில்லை' என்று கடிதம் எழுதி விட்டார் போலிருக்கிறது. விநோதா பிக்சர்ஸின் ''தேவதாஸ்'' தமிழ்ப் படத்தில் சாவித்திரி.

நம் சினிமா நடிகைகள் ரஸிகர்களைக் கண்டால் பயந்து ஓடுகிறார்களாமே? உண்மையா?

இதில் ஓரளவு உண்மை உண்டு. இதோடு, கண்டால் "ரஸிகர்கள் பயந்தோடக்கூடிய" சில நடிகைகளும் இருக்கிறார்கள் என்ற உண்மையையும் நீர் கொஞ்சம் தெரிந்து கொள்ளும்!

* • •

என். எஸ். கிருஷ்ணனின் "ரகசியம்" என்ன ஆயிற்று?

ரகசியத்திற்கும் அவருக்கும் வெகு தூரம். சொந்த விஷயங்களைக்கூட அவரால் ரகசியமாய் வைத்துக் கொள்ள முடிவதில்லையே!

டி. ரமணி (மதுரை)

டி. ஆர். மஹாலிங்கம், என். டி. ராமராவ், எம். என். நம்பியார் ஆகிய மூவருள் பைத்தியமாக நடிப்பதில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

அந்தப் ''பைத்தியக்காரப் பட்ட''த்தை ராமராவுக்கு அளிக்கலாம்!

ஆர். வி. எஸ். (ஆரணி)

வைஜயந்திமாலா தற்போது தன் தாயிடத்தில் இருக்கிறாரா? தகப்பனிடத்தில் இருக்கிறாரா?

வைஜயந்தியும், அவரது தகப்பனாரும், அவரது பாட்டியுடன் கூட இருக்கிறார்கள் என்று சொல்லுவது மேலும் பொருத்தமாய் இருக்கும்.

பிரதாபன் (மதுரை)

எம். கே. டி. பாகவதர் நடித்த ''ஹரிதாஸ்'' வருஷக் கணக்கில் ஓடியதே. அதன் மர்மம், அவர் சிறை சென்றது தானா? அல்லது சிறந்த நடிப்பும் பாட்டுமா?

இப்படத்தின் வெற்றியில் பாதியளவு சிறை சென்ற காரணத்தை ஒட்டியதாகும்.

டி. எஸ். அங்கமுத்து (மணிமூணார்)


லலிதா—பத்மினியை நான் சந்திக்க முடியுமா?

தாராளமாய் சந்திக்கலாம். அடுத்தபடியாக, "எங்கு, எப்படி?" என்று கேட்க நினைக்கிறீரோ?......அதற்கு, ''அவருடைய கச்சேரியில்—சில கஜ தூரங்களுக்கு அப்பாலிருந்து'' என்று பதில் கூறவேண்டியிருக்கும்!

''ரோஹிணி'' (மதுரை)

''ஏழை படும் பாடு'', ''தாய் உள்ளம்'', ''அபூர்வ சகோதரர்கள்'', ''கன்னியின் காதலி'', ''திகம்பர சாமியார்'' — இந்த ஐந்து படங்களில் எதை முதன்மையாகக் கூறலாம்? காரணம் என்ன?


கதை, வசனம், நடிப்பு, பாட்டு, டைரெக்ஷன் முதலான எல்லா அம்சங்களையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் ''ஏழைபடும் பாடு'' படத்திற்கே முதல் ஸ்தானம் அளிக்கவேண்டும்.



பண்டரி பாய்



ஜூபிடர் - மேகலா தயாரிப்பான
“நாம்” தமிழ்ப் படத்தில் வி. என்.
ஜானகி “பழம் வேண்டுமா?”
என்று கேட்கிறார் போலிருக்கிறது!



# லலிதா

காலை வேளைக்குரிய லலிதா ராகத்தின் உருவகப்படத்தை மேலே காணலாம். மிகுந்த வேதனையுடன் காதலர்கள் பிரிவதையும் இரவும் பகலும் பிரிவதையும் சங்கேத பாஷையில் அது வெளியிடுகிறது.

பருவங்களுடனும் பகல் - இரவின் குறிப்பிட்ட நாழிகைகளுடனும் இசைந்து வருவது இந்திய ராகங்களின் தனிச் சிறப்பு. ஒவ்வொரு ராகமும் அந்தந்த வேளையின் ரஸம் அல்லது பாவத்தை வெளியிடும் சாதனமாகும்.

தினசரி இரவிலும் பகலிலும் அந்தந்த நாழிகைக்கு ஏற்ப ராகங்கள் உருவகப்படுத்தப்படுகின்றன. அகாலத்தில் பாடும் ராகங்களுக்கு ஜீவன் போய்விடுமாம்.

# தேனீர்

இரவு பகல் எந்த வேளையிலும், எந்த நிலையிலும் தேனீர் உற்சாகம் அளிக்கிறது.

சென்ட்ரல் 'டீ' போர்டாரால் வெளியிடப்பட்டது

CTB 103

# ஜூபிடர் இரட்டையர்

# சோமு, மொஹிதீன்

நமது படத்தொழிலின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டைகளாக இருப்பவைகளுள் பரஸ்பர ஒற்றுமை யின்மை முக்கிய காரணமாக இருந்து வருகிறது. ஒற்றுமை மட்டும் இருந்து விட்டால் எத்தனையோ அற்புதமான காரியங்களையெல்லாம் சாதித்து விட முடியும். ஆனல் அந்த அம்சம் தானே பூஜ்யமாக இருக்கிறது. சாதாரணமாக, தொடர்ந்தாற் போல சில வருஷங்கள் இருவர் நெருங்கிய நண்பர்களாக இருப்பதே கஷ்டம்; அதுவும் பணப் புழக்கம் உள்ள ஒரு இடத்தில் அப்படிப் பட்ட ஒற்றுமையைக் காண்பது துர்லபம். லக்ஷக்கணக்கான ரூபாய்கள் புறளும் ஒரு ஸ்தாபனத்தில் இருவர் மிக ஒற்றுமையாக இருந்து, பாகஸ்தர்களாக நிர்வகித்து வெற்றிமாலை சூடி வருகிறார்கள் என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? அப்படிப்பட்ட வியக்கத் தக்க பிரமுகர்கள் தாம் சோமு—எஸ். கே. என்று அழைக்கப்படும் "ஜூபிடர் இரட்டையர்"களான எம். சோமசுந்தரமும்-எஸ். கே. மொஹிதீனும்.

**'குதூகலன்'**

அவர்களிடையே உள்ள ஒற்றுமை சாதாரண ஒற்றுமையா? ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை. பிறர் கண்டு பிரமிக்கும் வகையில்—மற்றவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய வகையில் இருக்கிறது அவர்களுடைய நட்பு. அவர்களுடைய நட்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அந்த நட்புக்கு வயது முப்பதாகி விட்டது. ஆனல் அவர்கள் நட்பு இன்றும் பசுமையாகவே இருக்கிறது. அது மட்டு மல்ல, அவர்கள் சினிமாத் தொழில் மூலம் நண்பர்களாக வில்லை. வியாபாரத் துறையில் ஆரம்பித்த அவர்கள் நட்பு விருத்தியாகி வியாபித்து விட்டிருக்கிறது.

குமரனால் புகழ் பெற்ற திருப்பூரைத் தம் சொந்த ஊராகக் கொண்டவர் சோமு. சிறு பிராயம் முதலே வியாபாரத் துறையிலே ஊக்கம் கொண்டவர். வாலிபப் பருவத்தை அடைந்ததும், சோமு துவரை, உளுந்து இப்படியாக தானிய வியாபாரத்திலே முனைந்தார். மொத்தமாக ஒரே வியாபாரிக்கு தம் சரக்குகளைக் கொடுத்து வந்தார்.

அதே மொத்த வியாபாரியிடம் தான், பழனி தாலுகாவிலுள்ள கீரனூரைச் சேர்ந்த, எஸ். கே.யும் தானிய வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது தான் சோமுவுக்கும்—எஸ். கே.யுக்கும் பரிச்சயம் ஏற்பட்டது. சாதாரணமாக ஏற்பட்ட பரிச்சயம், ஒருவர் பால் மற்றவருக்கு ஏற்பட்ட நம்பிக்கை அபிமானம் காரணமாக சிறந்த நட்பாக மாறி 1924ம் வருஷத்தில் இருவரும் பாகஸ்தர்களாக ஆனார்கள்.

1924ம் வருஷம் இருவரும் கூட்டாகச் சேர்ந்து தாங்களே தானிய மொத்த வியாபாரத்தை ஆரம்பித்து நடத்தலானார்கள். 1933ம் வருஷம் திருப்பூரில் அவர்கள் இருவரும் சேர்ந்து ரைஸ் மில் ஒன்றையும் ஆரம்பித்தார்கள். அந்தப் பக்கங்களில் முதன் முதலில் 'ரைஸ் மில்' ஆரம்பித்தது இவர்கள்தான். கூடவே அதே வருஷம் 'ரிப்பன் சோடா பாக்டரி' என்ற ஒரு ஸோடா பாக்டரியை ஆரம்பித்தார்கள். இவை தவிர, எலெக்ட்ரிக் சாமான்கள் வியாபாரமும் நடத்தி வந்தனர். முன் இரண்டும் இன்றுகூட திருப்பூரில் நன்றாக நடைபெற்று வருகின்றன. தாங்கள் பிரமாதமான நிலையை அடைந்து விட்டோம் என்பதற்காக அவைகளை அவர்கள் மூடி விடவில்லை. 'அவைகளினால் ஒரு சில குடும்பங்கள் பிழைப்பதைக் கெடுப்பானேன் என்ற நல்ல எண்ணம் தான் அதற்குக் காரணம்.

கோவை, பரமேஸ்வர் ஸவுண்ட் பிக்சர்ஸார் படம் தயாரிப்பதற்கு இவர்கள் பெருமளவு உதவி செய்தார்கள். நவாப் கம்பெனிக்கு இவர்கள்தான் எலெக்ட்ரிக் சாமான்கள் சப்ளை செய்து வந்தார்கள். அதன்மூலம் அக்கம்பெனியாரிடம் இவர்களுக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டிருந்தது. 1934ம் வருஷம் அவர்கள் ஒரு படம் தயாரிக்க விரும்பிய போது, நவாப் ராஜ

மாணிக்கம் கம்பெனியாரை "பக்தராமதாஸ்" படத்திற்கு இவர்கள் தான் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அது முதலே இருவருக்கும் படத்தொழிலிலும் தாங்கள் ஈடுபட்டு அந்தக் கலைக்கு பாடுபட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது.

கலை உள்ளம் படைத்த சோமு, 1935ம் வருஷ ஆரம்பத்தில் சென்னைக்கு வந்தார். அப்பொழுது சென்னையில்





நடைபெற்று வந்த — எம். கே. ராதா நடித்துவந்த — "மேனகா" நாடகத்தை அவர் பார்க்க நேர்ந்தது. அந்தக் கதையை எப்படியாவது படமாக்கி விடுவதென்ற முடிவுடன் ஊர் திரும்பிய அவர் எஸ். கே.யுடன் கலந்து ஆலோசித்தார். வேறு சிலபாகஸ்தர்களையும் சேர்த்துக் கொண்டு "ஸ்ரீ ஷண்முகானந்தா டாக்கி கம்பெனி" என்ற படக் கம்பெனியை ஆரம்பித்தார்கள். "மேனகா" கதையைப் படமாக்கும் உரிமையை ஐநூறு ரூபாய் கொடுத்து, அதன் பிரசுரகர்த்தர்களிடமிருந்து பெற்றார்கள். பிறகு டி. கே. எஸ். சகோதரர்களை ஏற்பாடு செய்து கொண்டு, பம்பாய் ரஞ்சித் ஸ்டுடியோவில் அதைப் படமாகத் தயாரித்தார்கள். அதே வருஷம், டிஸம்பர் மாதம் 7ம் தேதி "மேனகா"வைத் திரையிட்டார்கள். அப் படத்தில் சோமு இன்ஸ்பெக்டராகவும், மொஹிதீன் டாக்டராகவும் நடித்திருக்கிறார்கள். இதுதான் அவர்களது பட உலகப் பிரவேசம். முதன் முதலில் வெற்றி பெற்ற சமூகப் படம் "மேனகா" என்பதுடன், 1936ம் வருஷத்தில் நடைபெற்ற பிலிம் தேர்தலில் அதுவே சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதுமாகும்.

அப்படத்தின் மூலம், கம்பெனி பாகஸ்தர்களுக்கு நல்ல லாபம் கிடைத்தது.



சென்னை ஆழ்வார் பேட்டையில் கட்டப்பட்டிருக்கும் ஸ்ரீ. சோமுவின் "ஜூபிடர் ஹவுஸ்" மாளிகை.

என்றாலும், மற்ற பாகஸ்தர்கள் குற்றம் குறை கூறுவதிலேயே கண்ணுய் இருக்கவே, உழைப்பாளிகளான சோமுவும்—எஸ். கே.யும் அதிலிருந்து பிரிந்தனர்.

அக் கம்பெனியிலிருந்து இரட்டையர்கள் பிரிந்தார்களே தவிர, அவர்களிடை ஏற்பட்ட நேசம் மேலும் பலப்பட்டது. இருவரும், சிறிதும் தளர்ந்து விடாமல் அடுத்த வருஷமே (1936ம் வருஷத்தில்) வேறு இருபது பாகஸ்தர்களைச் சேர்த்துக் கொண்டு "ஜூபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்" என்ற படக் கம்பெனியை ஆரம்பித்தார்கள். அக் கம்பெனியின் முதல் படமாக "சந்திரகாந்தா" தயாரிக்கப்பட்டது. முதல்வருஷம் "மேனகா" படத்தை வெளியிட்ட அதே டிஸம்பர் 7ம் தேதியே இப் படத்தையும் திரையிடும் வைராக்கியத்துடன் பாடு பட்டார்கள். அதே தேதியில் திரையிட்டிருக்கவும் முடியும். ஆனல், சென்ஸார் தொந்தரவு காரணமாக படம் டிஸம்பர் மாதம் 19ம் தேதியன்றே திரையிடப்பட்டது. அப் படத்திற்கு அமோக ஆதரவும் வசூலும் கிடைத்தன.

"சந்திரகாந்தா" திரையிடப் பட்டவுடனேயே மற்ற பாகஸ்தர்களுக்கும் இரட்டையர்களுக்கும் மனஸ்தாபம் ஏற்படவே, இரட்டையர்கள் பொறுப்பான வேலைகளிலிருந்து விலகிக் கொண்டனர். "சந்திரகாந்தா" படப் பிடிப்பு சமயம், எஸ். கே. ஒரு விபத்தில் சிக்கி படுத்த படுக்கையாய் இருந்தார். இதற்கிடையில் ஜூபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்டிலும் தகராறு ஏற்படவே, சோமு, எல். ஆர். ஜி. நாயுடு என்ற ஒருவரைச் 'சேர்த்துக் கொண்டு, ஒலிம்பிக்பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியை ஆரம்பித்து, "மைனர் ராஜாமணி" என்ற படத்தைத் தயாரித்தார். அது ஒரு படுதோல்வியாக முடிந்தது. அதிலும் எஸ். கே.க்கு பங்கு உண்டு.

இதற்குள்ளாக ஜூபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்டின் மற்ற பாகஸ்தர்களுக்கு சோமு, எஸ். கே. இருவரின் அருமை தெரியவே அவர்களையே பொறுப்பு ஏற்கும்படி அழைத்தார்கள். அதற்கிணங்க அந்தக் கம்பெனிக்காக "அனாதைப் பெண்" என்றபடத்தை சோமு தயாரித்துக் கொடுத்தார். இப்படமும் தோல்வியாக முடிந்து பாகஸ்தர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படவே அக் கம்பெனி மூடப் பட்டது.

எஸ். கே. சிறிது காலம் இத்துறையிலிருந்து ஓய்வு பெற எண்ணினர். 1937ல் 'தேவி டீ ப்ராடக்ட்ஸ்' என்ற ஒரு புதுக் கம்பெனியை திருப்பூரில் ஆரம்பித்து, அதையும் ரைஸ் மில்லையும் தம் மேற்பார்வையில் வைத்துக்கொண்டார். ஆனல் கலை உணர்ச்சி கொண்ட சோமுவால் சினிமாத் தொழிலிலிருந்து ஒதுங்கி விடவோ, அதை மறந்து விடவோ முடியவில்லை. "விஜயமாருதி பிக்சர்ஸ்" "சேலம் ஷண்முகா பிலிம்ஸ்" இவைகளின் கூட்டுறவுடன் "பூலோக ரம்பை" படத்தைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தினர். அந்தப் படம் பிரமாதமான வெற்றியாய் முடிந்தது. அதில் எஸ். கே. சம்பந்தப் படவில்லையானுலும் அவருக்கும் அந்தக் கம்பெனியில் பங்கு இருந்தது.


இரட்டையர்களின் வாழ்க்கையிலேயே 1941ம் வருஷம்தான் ஒரு மறக்க முடியாத வருஷம். அந்த வருஷம் ஜூலை மாதம் முதல் தேதியன்றுதான் எஸ். கே.—சோமு இவ்விருவரையும் மட்டுமே பாகஸ்தர்களாகக் கொண்ட "ஜூபிடர் பிக்சர்ஸ்" ஆரம்பிக்கப்பட்டது. ஜூபிடரின் முத்திரை தாங்கி வெளிவந்த முதல்

படம் ''கண்ணகி''. *1942*ம் வருஷம் திரையிடப்பட்ட அந்த முதல் படமே முத்தான படமாக அமையவே பாகஸ்தர்களுக்கு மகிழ்ச்சியும் துணிவும் ஏற்பட்டன. அடுத்த இரண்டு வருஷ காலத்தில் ''குபேர குசேலா''வும், ''மஹாமாயா''வும் தயாரித்து வெளியிடப்பட்டன. இம்மூன்று படங்களையும் நியூடோன் ஸ்டுடியோவில் தயாரித்தார்கள்.

பல காரணங்களை முன்னிட்டு, 1944ம் வருஷம் தங்களது முகாமை இவர்கள் கோயமுத்தூருக்கு மாற்றிக் கொண்டார்கள். அங்கு, தங்கள் படங்களைத் தயாரிக்கவென சென்ட்ரல் ஸ்டுடியோவை நீண்ட கால ஒப்பந்தத்தில் குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள். அங்கு அவர்கள் தயாரித்த முதல் படம் ''என் மகன்''. கடைசியாகத் தயாரித்தது ''ஜமீன்தார்'' *(1944 முதல் 1952க்குள்)* எட்டு வருஷங்களுக்குள் பதினன்கு படங்களைத் தயாரித்துத் திரையிட்டிருக்கிறார்கள். அவைகளில் ''ஜமீன்தார்'' ஒன்று மட்டுமே சங்கிதா பிக்சர்ஸ் ஜுபிடர் கூட்டுத் தயாரிப்பாகும்.

''ராணி'' படத்தின் சில பகுதிகள் கோவையில் தயாரிக்கப்பட்டது என்றாலும் பெரும் பகுதி சென்னை நெப்டியூன் ஸ்டுடியோவில்தான் தயாரிக்கப்பட்டவை. 1951ம் வருஷமே நெப்டியூனில் ஜுபிடர்ஸார் புகுந்து கொண்டார்கள் என்றாலும், கம்பெனி பூராவும் நிரந்தரமாக, சென்ற வருஷம் ஜுலை மாதம்தான் சென்னைக்குத் திரும்பி வந்தது. சென்ற வருஷம் ஜுலை மாதத்தில், தங்கள் குத்தகைக் காலம் முடிய சில மாதங்களுக்கு முன்பே, சென்ட்ரல் ஸ்டுடியோவை வேறு ஒருவருக்கு இவர்கள் குத்தகைக்கு விட்டுவிட்டு சென்னைக்கே திரும்ப வந்துவிட்டார்கள்.

நெப்டியூன் ஸ்டுடியோ ஒரு லிமிடெட் ஸ்தாபனம். அதன் பங்குகளில் முக்கால் பகுதியை ஜுபிடர் பிக்சர்ஸார் வாங்கியுள்ளனர். அத்துடன் ஸ்டுடியோ நிர்வாகத்தையும் தாங்களே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது நிர்வாகத்தின் கீழ் ஸ்டுடியோ இப்பொழுது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே உள்ள விஸ்தீரணமான இடத்துடன்கூட 'சமீபத்தில்' இரண்டு லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள இடத்தையும் வாங்கி ஸ்டுடியோவை விஸ்தரித்திருக்கிறார்கள். இப்பொழுதைய ஸ்டுடியோவின் மொத்த விஸ்தீரணம் கிட்டத்தட்ட எட்டு ஏக்கராவாகி யிருக்கிறது. அதிக ஆடம்பரமில்லாமலும், அதே சமயத்தில் கண் கவரும் முறையிலும் ஸ்டுடியோவை மாற்றி யிருக்கிறார்கள்.



மதுரை ஜில்லாவிலுள்ள கீரனூரில் அமைந்திருக்கும் ஸ்ரீ. எஸ். கே. மொஹிதீனின் மாளிகை.

படம் பிடிக்கும் கொட்டகைகள் நான்கு இருக்கின்றன. ஒளி, ஒலிப் பதிவு கருவிகள் இரண்டு இரண்டு இருக்கின்றன. படம் போட்டுப் பார்க்க தியேட்டர் போன்ற வசதியும் இருக்கிறது. திரன்தாஸ் குப்தாவின் லெபரெட்டரியையும் இவர்கள் விலைக்கு வாங்கி ''ஜுபிடர் லாபரடரி'' என்று பெயரை மாற்றியிருக்கிறார்கள். அதற்கென புதுப் புது இந்திரங்களைத் தருவிக்கப் போகிறார்கள். இப்பொழுது ஸ்டுடியோவில் இடைவிடாது படப் பிடிப்பு வேலைகள் நடந்து வருகின்றன. ஒரே சமயத்தில் இரண்டு படங்களின் வேலைகள்கூட சில சமயங்களில் நடக்கின்றன.

ஜுபிடரின் சொந்தப் படங்களான ''இன்ஸ்பெக்டர்'', ''அழகி'', ஆகிய இரு படங்களும் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் இப்பொழுது இங்கு



**ரோஹினி பிக்சர்ஸின் "வஞ்சம்" தமிழ்ப் படத்தில் சாவித்திரி முன் சாரங்கபாணி நடனம் ஆடுவதைப் பார்க்கலாமாம்.**

தயாராகி வருகின்றன. இவை தவிர மனோஹர் பிக்சர்ஸ் "மனோஹரா" (தமிழ்-தெலுங்கு-ஹிந்தி) மூன்று பாஷைகளிலும், ஜூபிடர்-லாவண்யா கூட்டுத் தயாரிப்பான "மனிதன்", ஜூபிடர்-மேகலா கூட்டுத் தயாரிப்பான "நாம்" சுகுமார் புரொடக்ஷன்ஸின் "உலகத்தில் நாம்", மனோஹர்-பரிமளாவின் "சொர்க்க வாசல்" ஆகிய படங்களும் இங்குதான் தயாராகி வருகின்றன. ஜூபிடர்-ஒளவை புரொடக்ஷன்ஸின் "ரத்த பாசம்" படப் பிடிப்பும் இங்கு விரைவில் ஆரம்பமாக விருக்கிறது. பெல் பிகசர்ஸாரின் படமும் இங்குதான் தயாரிக்கப் பட விருக்கிறது.

ஜூபிடர் பிச்சர்ஸார் தமிழ்ப் படங்கள் தவிர மூன்று ஹிந்திப் படங்களையும் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். "மர்மயோகி"யை "ஏக்-தா-ராஜா" என்ற பெயரிலும், "ராணி"யை அதே பெயரிலும் "கிருஷ்ண விஜய"த்தை "கிருஷ்ண கன்ஹய்ய" என்ற பெயரிலும் வெளியிட்டிருக்கிறார்கள். முதல் படத்திற்கு நல்ல பெயரும் ஆமோகமான வசூலும் கிடைத்தன. "ராணி"க்கு வசூல் அவ்வளவாக இல்லையென்றாலும் ரொம்பவும் நல்ல பெயர் வடநாட்டிலே. மூன்றாவது படம் வடநாட்டின் பல நகரங்களில் இப்பொழுது நடைபெற்று வருகிறது.

தங்கள் முதல் மூன்று படங்களை மட்டுமே இவர்கள் சௌத் இந்தியா பிக்சர்ஸ் மூலம் விநியோகித்து வந்தார்கள். அதன் பிறகு **1944**-ம் வருஷம் ஜூபிடர் பிக்சர்ஸ் ஸர்க்யூட் என்ற விநியோகக் கம்பெனியைத் ஆரம்பித்து அதன் மூலம் தங்கள் படங்களைத் தாங்களே விநியோகித்து வருகிறார்கள். இந்த விநியோகக் கம்பெனியிலேயே, தங்களது பட விளம்பரங்களைக் கவனிப்பதற்கென "ஜூபிடர் அட்வர்டைஸிங் ஸர்வீஸ்" என்ற விளம்பர ஸ்தாபனத்தையும் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள்.

ஜூபிடர் நிர்வாகத்திலே—ஸ்டுடியோ, படத் தயாரிப்பு, விநியோகம். விளம்பரம்—இந்தத் துறைகளிலே, இன்று மொத்தம் ஐநூறு பேர்களுக்கு அதிகமாகவே வேலை செய்து வருகிறார்கள். ஸ்டுடியோ அடையாற்றிலும், தயாரிப்புக் கம்பெனி மயிலாப்பூரிலும், விநியோகக் கம்பெனி ராயப்பேட்டையிலும் இருக்கின்றன. ஸ்டுடியோவையும், படத் தயாரிப்பையும் சோமு கவனித்து வருகிறார். விநியோக விஷயங்களை எஸ். கே. கவனித்து வருகிறார். படத் தயாரிப்பு விஷயத்தில் இருவரும் கலந்து யோசித்து காரியத்தில் இறங்குகிறார்கள்.

பல படங்களுக்கு தயாரிப்பாளராக இருந்திருக்கும் சோமு, படங்களின் டைரெக்டராகவும் இருந்திருக்கிறார்.

"கண்ணகி", "ஸ்ரீ முருகன்", "அபிமன்யு" ஆகிய படங்களுக்கு சோமு கூட்டு டைரெக்டராக இருந்திருக்கிருர். இப்பொழுது அவகாச மின்மையினல் டைரெக்ஷன் துறையில் நேரிடையாக ஈடுபடவில்லையாளுலும், அவர், தம் கம்பெனி படங்களின் தயாரிப்புகளை அவ்வப்பொழுது கவனித்து யோசனைகள் கூறி வருகிருர்.

இந்த 'இரட்டையர்'கள் ஐம்பது வயதைத் தாண்டி விட்டவர்கள். ஆனல், அவர்களது சலியாத உழைப்பையும், தளராத முயற்சியையும், அவர்களது சுறுசுறுப்பான வேலைத் திறனையும் கவனிக்கும் யாருமே ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாது. ஞாயிற்றுக்கிழமைகளில்கூட அவர்கள் சோம்பலாகப் பொழுது போக்குவது கிடையாது. பொதுஜன ரஸனையை அவ்வப்பொழுது அறிந்து அவைகளைத் தங்கள் படங்களில் சேர்த்து படங்களைத் தயாரிப்பதில் அவர்கள் அதிக கவனம் செலுத்துகிருர்கள். அவர்களது வெற்றிக்கு இது ஒரு முக்கிய காரணம்.

இவர்கள் அதிருஷ்டத்தினலோ, சந்தர்ப்பத்தினலோ முன்னுக்கு வந்தவர்கள் அல்ல; அனுபவம் என்ற கல்லூரியிலே அடிபட்டு, வெற்றியின் ரகஸியத்தை அறிந்து, அந்தப் பாதையிலே சென்று புகழும், செல்வமும் சேர்த்தவர்கள். "இத்துறையின் மூலம் பல ஆயிரக் கணக்கானவர் வாழ்க்கை நடத்த முடிகிறது. நம்மால் ஆனது, சில நூறு பேர்களாவது பிழைக்கட்டுமே" என்ற நல்ல எண்ணத்தையும், "சிறந்த சீர்திருத்தக் கதைகளை எடுத்து நாட்டிற்குத் தங்களாலான சேவையைச் செய்ய வேண்டும்" என்ற லட்சியத்தையும் அவர்கள் கொண்டிருக்கிருர்கள்.

---

'அனர்க்கலி'

டாக்டர் வி. ராமமூர்த்தியின் தயாரிப்பாக 'அனர்கலி' என்ற சரித்திர நாடகம் சென்னையில் பிப்ரவரி மாதம் இரு தினங்கள் நடைபெறப் போகிறது. ராமமூர்த்தி கதையை நாடக ரூபமாக்கி யிருக்கிருர். அவரும் அவரது கோஷ்டியாரும் நடிப்பார்கள். நாடகத்தின் வசனங்களை டி. கே. கோவிந்தன் எழுதியிருக்கிருர்.

---

பொங்கல் வெளியிடான அவர் இந்தியா பில்ம்ஸாரின் "என் வீடு" தமிழ்ப் படத்தில் நடிக்கும் புதுமுகம் வித்யாவதி.



# ரேடியோ-சினிமா யுத்தம்!

## சினிமாச் சட்ட திருத்த மசோதாவுக்கு பிலிம் சேம்பர் ஆட்சேபம்

**1952-ம்** வருஷத்திய சினிமாச் சட்டத்தில் குறைபாடுகள் இருப்பதாக அரசாங்கம் கருதுவதால், அவற்றைப் போக்கும் உத்தேசத்துடன் மேற்படி சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யக் கோரும் மசோதா ஒன்றை நவம்பர் மாத இறுதியில் மத்திய சட்டசபையில் செய்தி அறிவிப்பு இலாகா மந்திரி பி. வி. கேஸ்கர் கொண்டுவந்தார். 1952ம் வருஷத்திய சட்டத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட ஷரத்தினால் சட்ட நிர்வாகத்தில் வீண் காலதாமதம் ஏற்படுகிறது என்றும், அதைத் திருத்த வேண்டும் என்றும் மசோதா கோருகிறது. சினிமாப் படம் ஒன்றைக் காட்டுவதற்கு அத்தாட்சிப் பத்திரம் அளிக்கப்படுவது சம்பந்தமான விதிகளை மீறி நடக்கும் பக்ஷத்தில் அவருடைய அத்தாட்சிப் பத்திரம் ஏன் ரத்து செய்யப்படகூடாது எனவிளக்கம்கேட்டு 15 நாள் நோட்டீஸ் தரவேண்டுமென்று தற்போது சட்டத்தில் ஒரு ஷரத்து உள்ளது. இந்த ஷரத்தினால் பிரயோசனம் ஏதுமில்லை என்றும், இதனால் அத்தாட்சிப் பத்திரத்தை ரத்து செய்யும் நோக்கமே ஈடேற முடியாமல் வீண் காலதாமதம் ஏற்படுவதாகவும், ஆகவே இந்த ஷரத்தை ரத்து செய்து விடலாமென்றும் முடிவு செய்யப் பட்டது. அதன் விளைவாகவே தற்போது திருத்த மசோதா கொண்டுவரப் படுகிறது.



சென்ற மாதம் வெளிவந்துள்ள "பணம்" தமிழ்ப் படத்தில் இன்ஸ்பெக்டராகவரும் டி. கே. ராமச்சந்திரன்.


திரையிடுவதற்கு சர்க்கார் அனுமதித்து சர்டிபிகேட் வழங்கிய பின் ஒரு படத்தில் ஏதேனும் புதிய காட்சிகள் சேர்க்கப்பட்டிருந்தால் அதன் உரிமையாளருக்கு மூன்று மாதம் சிறை தண்டனை அல்லது ரூ. 1000 அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என்று அடுத்த திருத்தம் கூறுகிறது. குற்றத்தைத் தொடர்ந்து செய்துகொண்டேயிருந்தால் அவ்விதம் செய்யும் தினங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1000 வீதம் அபராதம் மட்டுமே விதிக்கப்படுகிறது.

### சினிமாக்காரர்களின் ஆட்சேபம்


சினிமாத் தொழில் விஷயத்தில், குறிப்பாக சினிமாப் பாட்டுக்களை ரேடியோ ஒலிபரப்பும் விஷயத்தில் இந்தியா சர்க்கார் செய்தி விளம்பர இலாகா பின்பற்றும் கொள்கையை ஆட்சேபித்து தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைக் கமிட்டி நவம்பர் மாதம் 28ந் தேதி நடந்த ஒரு கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. ரேடியோ நிகழ்ச்சிகளில் சினிமாத்தொழில்காரர்கள் கலந்துகொள்ளக்கூடாதென்றும், ரேடியோ ஒலிபரப்பு ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ள வேண்டும் என்றும், ரேடியோ சஞ்சிகைகளுக்கு விளம்பரம் கொடுக்கக் கூடாதென்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தின் அங்கத்தினர் பொதுக் கூட்டம் விரைவில் நடத்தப்படும். பார்லிமென்டில் சினிமோடோகிராப் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதற்கு பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. கௌரவ காரியதரிசி ஸ்ரீ. டி. வி. சுந்தரம் டில்லியில் இதுபற்றி அதிகாரிகளைக் கண்டு பேசுவார்.


ஜெயந்தி
புரொடக்ஷன்ஸ்...
பொன் வயல்
படக் காட்சிகள்





‘‘கல்கி’’யின் ‘பொய்மான் கரடு’—‘‘பொன் வயல்’’ என்ற பெயரில் தமிழ் - தெலுங்கு இரு பாஷைகளில் திரைப்படமாகி வருகிறது. இது ஜெயந்தி புரடக்ஷன்ஸ் தயாரிப்பு.









ஏ. டி. கே.யின் டைரெக்‌ஷனில், வாஹினி ஸ்டுடியோவில் துரிதமாகத் தயாராகிவரும் "பொன் வயல்" மதராஸ் பிக்சர்ஸார் வெளியீடாகும்.


டி. ஆர்.
ராமச்சந்திரன்
கே. சாரங்கபாணி
மனோஹர்
பி. டி. சம்பந்தம்
அஞ்சலி தேவி
மைனாவதி
முத்துலக்ஷ்மி
ஆகியோர் இதில்
நடிக்கின்றனர்.


# நுனிப்புல்

வெட்டுக்கிளி


சென்றமாத குண்டூசி இதழில் வைடமின் "ப" இல்லாத குறையினால் சினிமாத் தொழிலில் மந்தம் ஏற்பட்டிருப்பது குறித்து விவரித்திருந்தேன். "இப்பொழுதுள்ள நிலைமையை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டிவிட்டீர்களே"—என்று, அந்தத் துறையிலுள்ள பலரும் என்னை நேரிலும், கடிதங்கள் மூலமும் பாராட்டி விட்டார்கள். அப்படிப் பாராட்டியவர்களில் சில பட முதலாளிகளும் இல்லாமல் போகவில்லை. கடந்த நான்கைந்து மாதங்களில் பட உலகப் பிரமுகர்கள் பலரைச் சந்தித்துப் பேசியதிலும், பல இடங்களுக்கு நான் போய்வந்த சந்தர்ப்பத்திலும், வைடமின் "ப" இல்லாமல் போனமையால் பல வேடிக்கையான சம்பவங்களைப் பற்றிக் கேட்கவும் காணவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த சம்பவங்களை நினைத்தால் "ஐயோ, பாவம்" என்று சம்பந்தப்பட்டவர்கள்மீது பச்சாத்தாபம்தான் ஏற்பட்டது. அப்படிப்பட்ட சம்பவங்களில் தமாஷான சிலவற்றைப் பற்றி மட்டும் இங்கு கூறுகிறேன்.

• • •

**நா**ன் அடிக்கடி, ஒரு பழைய காலதது, ஆனால் அதிகப் பிராபல்யம் இல்லாத ஒரு 'ஸினி காமெடியனை' (சினிமா ஹாஸ்ய நடிகன்) சந்தித்து அவரது யோக க்ஷேமங்களை விசாரிப்பது வழக்கம். மூன்று மாதங்களுக்கு முன் நான் அவரை சந்தித்தபோது, "ஏதாவது புதுப் படங்கள் உண்டா?" என்று கேட்டேன். ஒரு பிரபல ஹாஸ்ய நடிகரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் தயாரித்து வரும் படத்தில் நடித்து வருவதாகச் சொன்னார். "அவர் படத்திலா நடிக்க ஒப்புக்கொண்டீர்? பைசாப் பெயராதே" என்று சொன்னேன். அவ்வளவுதான். அந்த ஸினி காமெடியன் பொரிந்து தள்ளிவிட்டார். "அதென்ன ஸார், அப்படிச் சொல்லிவிட்டீர்கள். ஷூட்டிங்கிற்குப் போனால் என்ன உபசாரம் நடக்கிறது தெரியுமா? இட்லிக்கு நெய் போடுகிறார்கள், ஸார், நெய்! காப்பி கிடையாது. அதற்குப் பதில் எல்லோருக்கும் ஓவல்டின்தான்' என்று பெருமையாகச் சொன்னார். "தின்னதுதான் மிஞ்சப் போகிறது பாரும்" என்று எச்சரித்தேன் அப்பொழுது. மீண்டும் சென்ற மாத இறுதியில் அவரைச் சந்தித்தேன்? முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்திருந்தார்? என்னைப் பார்த்ததும், "உங்க வாய்க்கு சர்க்கரைதான் போடணும். என் பணத்திற்காக இன்று பத்தாவது தடவையாகப் போய்விட்டு ஏமாந்து திரும்புகிறேன்" என்றார். அவரைப் பார்க்கவே உண்மையில் பரிதாபமாக இருந்தது. அப்பொழுது அந்தப் பக்கமாக வந்த பழங்கால நாடக நடிகர் ஒருவர் எங்கள் சம்பாஷணையின் சாரத்



பெல் பிக்சர்ஸார் வெளியிடப் போகும் "வேலைக்காரி மகள்" தமிழ்ப் படத்தில் நடிக்கிறார் இந்தப் புதிய முகமான சலம்.



ஜுபிடர்-லாவண்யா தயாரிப்பான ''மனிதன்'' தமிழ்ப் படத்தில் டி. கே. ஷண்முகமும், மாதுரி தேவியும் சேர்ந்து நடிக்கும் ஒரு காட்சி இது.

தைத் தெரிந்துகொண்டார். ''அவன் கிட்ட ஏன் ஐயா பணத்திற்கு அலைகிறீர், வீண் வேலைதான் அது. 'கடவுள் இல்லை கடவுள் இல்லைன்'னு சொல்லி, அந்த ஆசாமிதான் இல்லாமேயே போயிட்டானே'' என்று ஒரு மணியான உண்மையை உதிர்த்துவிட்டுப் போனார் அவர்.

• • •

மூன்றும் வருஷம், காலஞ் சென்ற ஒரு பாடகி—நடிகையின் அபிமான கணவர் ஒரு படம் தயாரிக்கப் போவதாக அறிவித்தார். இன்றளவும் அது அறிவிப்பு அளவிலேயே நிற்கிறது. ஆனால் அவரது ஜபர்தஸ்து மட்டும் ஒன்றும் குறைந்ததாகத் தெரியவில்லை. தூய வெள்ளை மல் வேஷ்டியும், சதா கார் சவாரியும். 555 சிகரெட்டை புகைத்துத் தள்ளுவதும் தவறாமல், கொஞ்சமும் குறைவின்றி, நடந்து வருகின்றன. அவரது கம்பெனியில் வேலை பார்த்து வருகிற ('படம் தயாரிக்காத கம்பெனியில் என்ன வேலை ?' என்றுதானே யோசிக்கிறீர்கள். நேரம் தவறாது போய் உட்கார்ந்து விட்டு வருவதுதான்) ஒரு இளைஞனைச் சந்தித்தேன். ''என்னப்பா சம்பளம் கொடுக்கிறார் ?'' என்று விசாரித்தேன். ''என்ன சம்பளம் கொடுக்கிறாரா ! அவர் எங்களிடம் 'ஏதாவது பணம் இருக்கிறதா ?' என்று கேட்காமல் இருந்தாலே போறாதா?'' என்று பளிச்சென்று பதிலளித்தார்.

அவருடைய அறிவிப்புப்படி படம் வெளி வராததற்குக் காரணம் பணப் பிரச்னைதான் என்பதையும் அந்த இளைஞர் தெரிவித்தார். நான் அந்த இளைஞரிடம் சொன்னேன்: ''உங்களுடைய படத்திற்கே ''பிரச்னை'' என்று பெயர் வைத்துவிடுங்களேன்'' என்று. ''குடகு தனலக்ஷ்மி மாதிரி காற்றையே உண்டு ஜீவிக்கும் விசித்திரப் பிறவிகள்தான் அவரிடம் வேலை பார்க்க முடியும்'' என்று பல நபர்கள் சொல்லாமல் கொள்ளாமல், அவரிடமிருந்து சமீபத்தில் நழுவி விட்டார்கள்.

ஒரு படக் கம்பெனிக்கு தனிப்பட்ட ஒரே நபர் சொந்தக்காரராக இருப்பதை விட, கம்பெனிக்கு பல பாகஸ்தர்கள் இருப்பது, பலவிதத்தில் இடைஞ்சலாயிருந்தாலும் ஒருவிதத்தில் ரொம்ப ரொம்ப சௌகரியமாயிருக்கிறது. பல பாகஸ்தர்கள் இருந்தால் அவர்களுக்குள் அடிக்கடி மனஸ்தாபமும், அதனால் தகராறும் ஏற்படக்கூடும். ஆனால், பல பாகஸ்தர்கள் இருப்பது பணம் என்று கேட்டுக்கொண்டு வருகிறவர்களை தட்டிக் கழிக்க உதவியாக இருக்கிறது. பணத்திற்கு என்று ஒரு நடிகரோ, கதாசிரியரோ, ஸ்டுடியோக்காரரோ வருவதாக வைத்துக் கொள்ளுவோம். கம்பெனியின் ஒரு பாகஸ்தர் மற்றொருவரைக் கேட்கும்படி சொல்லுவார். அந்த மற்றொருவரைக் கேட்டாலோ மூன்றாமவரைக் கேட்கும்படி கூறுவார். வருகிறவர் தப்பித் தவறி, பாகஸ்தர்கள் அனைவரும் சேர்ந்திருக்கும் போது வந்துவிட்டால் மட்டும் கிடைத்து விடுகிறதா? அதுதான் இல்லை. அப்பொழுதும் தவணை சொல்லி அனுப்பிவிடுவார்கள். பாகஸ்தர்கள் பலர் இருக்கும் கம்பெனிகளில் எல்லாம் இப்படி நடக்கிறது என்று நான் சொல்லுவதாக அர்த்தம் இல்லை. ஒரு கம்பெனியில் நான் பார்த்து ரஸித்த காட்சியே இது.

• • •

ஒரு ஆந்திர நடிகர்—நக்ஷத்திரம்—மூன்றாம் வருஷ இறுதியில் பட முதலாளியானார். அவர் தமது படத் தயாரிப்புக் கம்பெனியை முதன் முதலில் ஒரு பாங்கின் மாடி மீதுள்ள கட்டடத்தில் ஆரம்பித்தார். தமக்கு தேவைப்படும்போது, சுலபமாக பாங்கியில் பணம் கடனாக வாங்கிக் கொள்ளலாம் என்ற அபிப்பிராயத்தில்தான் பாங்கி மாடியைப் பிடித்தாரோ என்னவோ? ஆனால், சீக்கிரமாகவே அந்த மாடியை விட்டு அவர் காலி செய்துவிட்டார்—காலி செய்ய வேண்டியதாகிவிட்டது! அவருக்கு வேறு ஒரு நல்ல இடம் கிடைத்தது அதற்குக் காரணம் அல்ல. பாங்கிக்காரர்களுக்கு, தாம் எடுத்திருந்த இடத்திற்கு வாடகை கொடுக்கமுடியாது போய்விட்டதுதான். அவர்கள் கிளப்புவதற்கு முன், மரியாதையாய் தாமே அந்த இடத்தைக் காலி செய்துவிட்டார் அந்த ஆந்திர நடிகர். ஆனால், பிறகு ஒரு தினுசாக சமாளித்துக் கொண்டு படத்தைத் தயாரித்து திரையிட்டு விட்டார்.

• • •

சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் தீபாவளி மலர் வேலையாக, வெளியே சுற்றியபோது, ஒரு ஆந்திர-தமிழ் நக்ஷத்திரத்தை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். அவர் சொந்தத்தில் படம் தயாரிக்கப் போவதாக பிரஸ்தாபித்தார்.



''மாமியார்'' டென்னிஸ் ஆடப் போகக்கூடாது என்கிறாரோ? ''மாமியார்'' தமிழ்ப் படத்தில் எஸ். வரலக்ஷ்மி.

,பணம் எல்லாம் ஏற்பாடு பண்ணிவிட்டீர்களா ?'' என்று கேட்டு வைத்தேன். ''பணமா ? நாலைந்து பேர்கள் பணம் தருவதாக முன் வருகிறுர்கள். அவர்களில் யாரிடம் பணம் வாங்கிக் கொள்ளுவது என்றுதான் புரியவில்லை '' என்று எனக்குத் தெரிவித்தார் நடிகை. ஆனல் அவரது சாயம் வெளுத்துப் போகும் என்பதை சிறுதுகூட அவர் சிந்திக்கவில்லை. அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பி, அடுத்தபடி ஒரு ஹாஸ்ய நடிகையிடம் வந்தேன். அந்த ஹாஸ்ய நடிகை பல படேபடே படத் தயாரிப்பாளர்களுக் கெல்லாம்கூடப் பணம் கடன் கொடுத்து உதவி வருகிறுர். இன்னின்னருக்கு இவ்வளவு பணம் கொடுத்திருக்கிறேன் என்று அவர் என்னிடம் கூறுவது உண்டு. அன்று பேச்சோடு பேச்சாக மேலே சொன்ன ஆந்திர-நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு, " அவர் படம் தயாரிக்கப் போகிறுராம். என்னிடம் பணம் கடன் கேட்கிறுர். கொடுக்கலாமா !'' என்று என்னிடம் கேட்டார்.

* * *

மேலே குறிப்பிட்ட ஹாஸ்ய நடிகை பல படத் தயாரிப்பாளர்களுக்கு பண உதவி செய்து வருவதாகச் சொன்னேனல்லவா ? மூன்று மாதங்களுக்கு முன்பு, அவருக்குத் தாமே ஒரு படம் பிடிக்கவேண்டும் என்ற ஆசையிருந்தது. சென்ற மாதம், அவர் சொந்தப் படம் விஷயமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறுர் என்பதை அறிந்து வரப் போயிருந்தேன். எடுத்த எடுப்பிலேயே அவர், ''சொந்தப் படம் தயாரிக்கும் யோசனையைத் தள்ளிப் போட்டாகி விட்டது'' என்று சொன்னதும், நான், அவரது திடீர் மாறுதலுக்கான காரணம் தெரிந்துகொள்ள முடியாது திகைத்தேன். அவரே விஷயத்தை விளக்கிச் சொன்னுர். ''இப்பொழுதுதான் வெளிவரும் படங்கள் எல்லாம் க்யூ வரிசையில் ஒன்றன் பின் ஒன்ருய் மண்ணைக் கவ்வி வருகின்றனவே. இந்த 'ஸீஸன்' ஒரு தினுசாக முடியட்டும். தவிர, படத்தை ஆரம்பித்துவிட்டு, 'நடிகைக்குத் தலைவலி வராமல் இருக்கவேண்டுமே' 'நடிகனுக்கு கிறுக்கு புத்தி வராமல் இருக்க வேண்டுமே' என்று யார் ஸார் கவலைப் பட்டுக் கொண்டிருப்பது ! மேலும், பிறருக்குப் பண உதவி செய்வதன் மூலமே எனக்கு மாதம் இரண்டாயிரம் கிடைத்து விடுகிறது, அதுவே போதும்'' என்ருர். அந்த ஹாஸ்ய நடிகையின் புத்திசாலித் தனத்தை என்னல் மெச்சாமல் இருக்க முடியவில்லை. அவரைப் பாராட்டி விட்டுத் திரும்பினேன் நான்.

• • •

மேலே ஒரு ஸினி காமெடியனைப் பற்றிச் சொன்னேனே, அந்த நடிகர் சொந்தப் படம் ஆரம்பிப்பதற்கு, சில வருஷங்களுக்கு முன்னல் 'பைனன்ஸர்' தேடிய படலம் ரொம்பவும் ரஸமானது. யாராவது ஒருவர் அவரிடம் போய், ''என்னிடம் ஐம்பதாயிரம் ரூபாய் முதல் போட ஒரு ஆசாமி இருக்கிறுன். இன்னெருவ ஆசாமி இருந்தால் படம் ஆரம்பித்துவிடலாம்'' என்று சொல்லிவிட்டால் போதும். அதை அப்படியே நம்பி வீணுக அலைச்சலாக அலைவார். அப்படிப்பட்ட கபடு சூது தெரியாத யதார்த்தவாதி அவர். இப்படிப் பட்டவரிடம், பல லக்ஷக் கணக்கான ரூபாய்கள மூலதனம் போடுவதாக ஒருவர் போய்ச சொன்னல் என்ன குதி குதித்திருப்பார் ! அப்படி ஒரு ஆசாமி இந்த ஸினி காமெடியனிடம் போனுன். ஹாஸ்ய நடிகருக்கு ஆசை வார்ததை காட்டியே, இரண்டு மாதங்களுக்கு அதிகமாகவே அவர் செலவில் சுகமாக காலந் தள்ளினன் அந்த ஆசாமி. இருவரும் பீச்சுக்குப் போய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்களாம். அந்த ஆசாமி லக்ஷக் கணக்கில் பேசிக் கொண்டிருப்பாராம். அதுசமயம் 'வேர்க்கடலை, பட்டாணிக் கடலை' விற்கிறவன் அந்தப் பக்கம் வருவானும். உடனே,''அவனைக் கூப்பிட்டு அரை அணுவுக்கு வேர்க்கடலை வாங்கு'' என்று கேட்பாராம் 'லக்ஷக்கணக்கில் பேசும்' அந்த ஆசாமி ! பாவம், அப்பாவி அந்த ஸினி காமெடியன் இந்த ஏமாற்று ஆசாமியின் உண்மை சொரூபத்தை அறிந்து கொள்வதற்குள் சுமார் ஆயிரம் ரூபாயைக் கரைத்து விட்டார் அவனுக்காக! இந்த சம்பவத்திற்குப் பிறகாவது ஸினி காமெடியன் உலகத்தைத் தெரிந்து கொண்டாரா என்ருல், அதுதான் இல்லை. இன்னும்கூட மறுபடி அவர் ஏமாந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



லக்ஷ்மி ராஜ்யம், ஸ்ரீ வத்ஸா, துரைசாமி முதலியோர் தோன்றும் இந்தக் காட்சி "வேலைக்காரி மகள்" தமிழ்ப் படத்தில் வருகிறது.

சில வருஷங்களுக்கு முன்பு, மதுரையிலிருந்து மெத்தப் படித்த ஆசாமி சென்னைக்குப் படம் பிடிக்க வந்தார். ஒரு புராணப் படத்தைத் தயாரிக்க ஆரம்பித்து இரண்டாயிரம் அடி எடுத்துவிட்டு, அத்துடன் மூட்டையைக் கட்டிக் கொண்டு மதுரைக்கே திரும்பிப் போய்விட்டார் அவர். பாவம், இந்த ஆசாமி, ஒரு ஆங்கில சினிமா மாதப் பத்திரிகையின் ஆசிரியரை நம்பி படத் தொழிலில் இறங்கி விட்டார். படப் பிடிப்பு ஆரம்பமான இரண்டாவது நாளே, அவர் தம் படத்தில் நடித்து வந்த ஒரு நடிகரிடம், "ஏண்டாப்பா இந்தத் தொழிலுக்கு வந்தோம் என்று ஆகிவிட்டது" என்று அலுத்துக் கொண்டார். அதற்கு அந்த நடிகர் பளிச் சென்று, "இதை நீங்கள் இந்தத் தொழிலுக்கு வருவதற்கு முன்னமேயல்லவா யோசித்திருக்க வேண்டும்" என்று பதிலளித்தார். பாவம், அந்தப் படமுதலாளியின் முகம் வாடிவிட்டது.

கடைசியாக சமீபத்தில் நிகழ்ந்த ஒரு ரஸமான நிகழ்ச்சியைக் கூறிவிட்டு, முடித்து விடுகிறேன். பல வருஷங்களாக சிரஞ்சீவியாகத் தயாராகி வரும் ஒரு பட சம்பந்தமானது இது. படத்தில் கதாநாயகனை நடிப்பவர் தமக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை அடமானமாக ஒரு மார்வாரியிடம் வைத்து பணம்கடன் வாங்கியிருந்தார். படக்கம்பெனிக்கு பணத்திற்குப் பல முறை அலைந்து அலுத்துப் போனார் அவர். சென்ற மாத மத்தியில் அந்த நடிகர், சில அடியாட்களையும் (ரௌடிகள்) அழைத்துக் கொண்டு கம்பெனிக்குள் வந்து கலாட்டாப் பண்ணினார். கம்பெனி மானேஜர், கதாசிரியர் அனைவரும் கதிகலங்கித் தவித்தார்கள். அந்த சமயம், தமது பாக்கிக்காக அங்கு வந்து உட்கார்ந்திருந்த ஸினி காமெடியனை அந்த ஹீரோவை சமாதானம் செய்து அனுப்பும்படி கெஞ்சினார்கள். அவரும், அவர்கள் மீது இரக்கப்பட்டு, அங்கு விஜயம்செய்த குமாரரை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்.

# பொதுஜனம் பேசுகிறார்

★ 'பராசக்தி' படம் பார்க்கும்போது 'பராசக்தி, என் தாயே! இம் மாதிரிப் படங்கள் பட முதலாளிகள் எடுக்கும்பொழுது பாராமுகமாக இருந்தது சரிதானா?'' என்று நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டியது தான். பொது ஜனங்களின் ஆதரவு தான் பட முதலாளிகளுக்கு இம் மாதிரியான படங்களை எடுக்க தைரியத்தை அளிக்கிறது. பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு படம் தயாரிக்கிறார்களே தவிர, இம்மாதிரியான படத்தைப் பார்ப்பதால் பொதுஜனங்கள் மனம் துன்பமடைகிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை. அவர்களுக்குத் தேவையானது பணம்தான். இந்த மகத்தான படத்திற்கு எவ்வளவு கூட்டம்! கண்ணிருந்தும் குருடர்களாகவும், காதிருந்தும் செவிடர்களாகவுமா இருந்தார்கள் ஸென்ஸார்? இம்மாதிரிப் படங்களை எடுப்பதும், ஆவலுடன் பொது ஜனங்கள் அதைப் பார்ப்பதற்கு செல்வதுமாக நம் நாட்டில் சினிமா இவ்வளவு கேவலமாகவா இருக்கிறது என்று வருந்துவதைக் காட்டிலும் ''சினிமாப் பார்க்கவே வேண்டாம்'' என்று ராஜாஜி அவர்கள் சொல்வதில் தவறு என்ன? என்று எண்ணத் தோன்றுகிறது. நம் ஜனங்கள் இம்மாதிரிப் படங்களைப் பார்க்கக் கூடாது என்று ஒருமுகமாக ஸ்ட்ரைக் செய்தால், இனியாவது இம்மாதிரிப் படங்கள் எடுக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

ஏ. வி. மஹேஸ்வரி,
கடலூர், என். டி.

★ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர் :

ஏ. வி. மஹேஸ்வரி,
கடலூர் என். டி.

## ஏன் தடை செய்யவில்லை?

நேஷனல் பிக்சர்ஸாரின் ''பராசக்தி'' யிலே, ஜாதித் துவேஷத்தையும், அரசாங்க, தெய்வ நிந்தனைகளையும் அளவு மீறிக் கையாண்டிருக்கிறார்கள். இந்தப் படத்திலே, மக்கள் மனம் புண்படும் படியாக உள்ள கீழ்க்கண்ட காட்சிகளை 'சென்ஸார் போர்டு' ஏன் தடை செய்யவில்லை? ஆண்டவனுக்கு வேண்டுதலையின் பேரில் பால், பஞ்சாமிர்தம் இன்னும் சில காவடிகளைத் தவிர இதுவரையிலும் யாரும் பாடைக் காவடி எடுத்ததில்லை; அப்படியிருக்க, பாடைக் காவடியை அனுமதித்து, மக்கள் மனம் வேதனை செய்வதை ஏன் சென்ஸார் தடை செய்யவில்லை?

இந்தக் கதை 1942ம் ஆண்டிலே நடந்ததை ஆதாரமாகக் கூறுகிறது. அப்பொழுது இந்த நாட்டை ஆண்டது ஆங்கிலேயர்கள். அப்படியிருக்க கல்யாணியும், குணசேகரனும் யாரைத் திட்டுகிறார்கள்? இன்றைய அரசாங்கத்தை அல்லவா? பரவாயில்லை, திட்டட்டும்! ஆனால், படம் நாற்பத்தி இரண்டில் நடந்ததை ஆதாரமாக வைத்து எடுக்கப்பட்டு 52ல் நடப்பதைக் கயிறு திரித்துக் கூறுவதை ஏன் தணிக்கையினர் தடை செய்யவில்லை?

''நம்நாட்டில் சினிமாப் பார்ப்பவர்களில் பெரும்பாலோர் கல்வி அறிவற்றவர்கள்; அவர்கள் ஆபாஸப் படங்களைப் பார்த்து மனம் மழுங்கி கெட்ட வழிகளில் போகாமல் தடுப்பது சர்க்கார் கடமை.'' இதை கடந்த ஆண்டு ஜுலை மாதம், பம்பாயில் நடந்த அகில இந்திய சினிமாப் பட மகாநாட்டில் மத்திய சர்க்காரின் செய்தி, விளம்பர இலாகா மந்திரி கேஸ்கர் கூறியிருக்கிறாரே; ஆஸ்திகர்களின் மனம் மழுங்க வைக்கும், தெய்வ நிந்தனை, அரசாங்கத் தூற்றல், ஜாதித் துவேஷம் இவற்றை ''பராசக்தி''யிலிருந்து சென்ஸார் போர்டு ஏன் தடை செய்யவில்லை?

''துணைவன்'', பழனி.

## படத் தயாரிப்பாளர்களின் கடமை

படவுலகின் தற்போதைய மந்த நிலை யாவரும் அறிந்ததே. இதற்கு முக்கிய காரணம், படம் பார்ப்போரின் மன நிலை

யில் ஏற்பட்டிருக்கும் பெரும் மாறுதலே யாகும். மக்கள் மனதை வெகுவாகக் கவருபவை என்று பட முதலாளிகள் (இன்றும்!) கருதும் ஆபாச ஆடை யலங்காரங்களோ, மட்ட ரகமான ஹாஸ்யங்களோ உண்மையில் இன்று ரஸிகர்களால் வெறுக்கப் படுகின்றன. படத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நன்கு ஆராய்ந்தறிந்து மகிழவே மக்கள் முற்பட்டுள்ளனர்.

இந் நிலையில் மேற்கூறிய பழைய அபிப்பிராயங்களுடன் எடுக்கப்பட்ட அனேக படங்கள் படு தோல்வி யுற்றதில் ஆச்சரியமேயில்லை. அதே சமயம், புது மனப்பான்மையோடு எடுக்கப்பட்ட "ஏழை படும் பாடு" "காஞ்சனா" போன்ற படங்கள் வெற்றி பெற்றமையிலும் வியப்பில்லை. எனினும், சமீபத்தில் திரையிடப்பட்ட பல படங்கள், பழைய நோக்கங்களை இன்னமும் கைவிடாமையால் தான், தோல்வியுற்று, பட வுலகில் நஷ்டத்தையும் மந்த நிலையையும் உண்டாக்கி யுள்ளன.

ஆகவே, படத் தயாரிப்பாளர்கள் ஒன்று கூடி, சர்க்காரைக் குறை கூறுவதோடு நின்றுவிடாமல், தங்களுக்குள் ஒரு குழுவை அமைத்து ரஸிகர் உள்ளங்களைத் திருப்தி செய்யும் வகைகளை ஆராய்ந்து அறிந்து அவைகளைத் தாங்கள் எடுக்கும் படங்களில் புகுத்த முயற்சி செய்யவேண்டியது அவசியமாகும். இச் சிரிய முயற்சிக்கு ரஸிகர்கள் ஆதரவும், 'குண்டூசி' போன்ற உயர்தர சினிமாப் பத்திரிகைகளின் ஆதரவும் கிடைக்கும் என்பது உறுதி. தமிழ்ப் படங்களின் எதிர்கால சுபிக்ஷ நிலைக்கு இம் முயற்சி அடிகோலும் என்பதிலும் ஐயமில்லை.

எஸ். கிருஷ்ணசுவாமி,
கடலூர் என்.டி.



டைரேக்டர்:—வள்ளி திருமணம், கந்த லீலா, சிவ லீலா, மீனாக்ஷி கல்யாணம்—இத்தனை படங்களில் நடித்திருப்பதாகச் சொல்கிறீர். ஆனால் நான் உங்கள் முகத்தைப் பார்த்ததாகவே ஞாபகத்திற்கு வரவில்லையே.

நடிகர்:—நிச்சயமாய் நடித்திருக்கிறேன். ஸார். பிள்ளையார் வேஷத்தில் நடித்திருப்பது நான்தான்.

## நடிகர்கள் உணரவேண்டும்

நவம்பர் இதழ் 'குண்டூசி'யில் 'வெட்டுக் கிளி'யார் எழுதியதைப் படித்த பொழுது சந்தோஷமே என் மனதில் நிரம்பியது. 'நுனிப்புல்'லில் குறிப்பிட்ட நக்ஷத்திரம் யாரைக் குறித்து என்பது, நேயர்களால் சுலபமாய் ஊகித்து அறிந்து கொள்ளக் கூடிய விஷயம். தற்சமயம், பொதுவாக சில நடிகர்களின் மனதில் ஒரு குருட்டுத் தனமான எண்ணம் பரவியிருக்கிறது. அந்த நடிகர்கள், தங்களுடைய சொந்தப் படம் என்ற காரணத்தில் தங்கள் மனம் போன போக்கில் நடிக்கிறார்கள். அதனால் அவர்கள் காணும் பலன், படம் படுதோல்வி அடைவதே தான். இத் தோல்வியைக் குறித்து அந்த நடிகர்கள் மீது நாம் அநுதாபம் கொள்வது ஒருபுற மிருக்க, ரஸிகர்கள் மனத்திலும் அந்த நடிகரைப் பற்றி ஒரு தாழ்வான அபிப்பிராயத்தையே தோற்றுவிக்கிறது. சுருங்கச் சொன்னால், அந்த நடிகர் விளம்பரப் படுத்தும், தம் சொந்



பிரபல டைரெக்டர் எம். வி. ராமன் ''ஸ்வாகன்'' ஹிந்திப் பட சம்பந்தமாக பம்பாய்க்குச் சென்றிருந்த போது ''பில்ம் ஏஜ்'' என்ற பத்திரிகாசிரியர் ஸ்ரீ. கே. எம். முல்டானி ஒரு வரவேற்பளித்தார். படத்தில் மாலை மரியாதை பெறுபவர்தான் எம். வி. ராமன்.

தப்படத்தில் நடிப்பு என்ற பெயரில் சர்க்கஸ் வேலைகள் பல செய்து 'பல்டி' அடிப்பது ரஸிகர்களின் ரஸிகத் தன்மையை இழக்கச் செய்கிறது.

ஆனால் மேனாட்டில் ஒரு நடிகரையோ, விளையாட்டுக்காரரையோ உதாரணமாய் எடுத்துக் கொண்டால், அவர்களே விமர்சகர்களை நேரில் பேட்டி கண்டு தங்களைப் பற்றிய அவர்களது அபிப்பிராயங்களைக் கேட்டு அதற்கேற்ப தம் வழிகளை சீர்படுத்திக் கொள்வது வழக்கம். ஆனால், நான் நமது நடிகர்கள் விமர்சகர்களைத் தேடிப் பிடிக்குமாறு சொல்லவில்லை. அதற்கு அந்த நடிகருக்குசம் தைரியம் இராது. நான் குறிப்பிடுவது இதுதான்:—ரஸிகர்களிடம் என்றும் மாறாத அபிப்பிராயமும், சினிமா உலகில் பெயருடனும் புகழுடனும் விளங்க வேண்டும் என்றால் நடிகர்கள் விமர்சகர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

கே. நாராயணன், கும்பகோணம்.

**புரியாத விளக்கம்**

'தூண்டூசி' நவம்பர் இதழில் 'ஏன் யோ சிக்கவில்லை!' என்ற தலைப்பில், சென்னை சகோதரி ஒருவர் எழுதியிருந்த கடிதத்தைக் கவனித்தேன்......'கல்லூரிக் கல்வி பயிலும் நங்கையர் ஊதாரித்தனமான வாழ்க்கை நடத்துவதாகவும், கணவன்—பெற்றோரின் சொல்லை அலட்சியம் செய்யும் ஒழுக்கக் கேடு உடையவர்களாகவும் படங்களில் சித்திரிக்கப் படுவது தவிர்க்கப்பட வேண்டும்' என்பதைக் தான் நான் ஆகஸ்ட் இதழில் 'பெண்மைக்கு அவமானம்' என்ற கடிதத்தில் வற்புறுத்தியிருந்தேன். ஏனெனில் படித்த பெண்கள் தான் தோன்றித்தனமாக சுய சிந்தனையின்றி வாழ்வைப் பாழ்படுத்திக் கொள்வதாகக் காண்பித்தால் அதைப் பார்க்கும் பாமர மக்கள், ''இதற்கெல்லாம் காரணம் பெண்களைப் படிக்கவைப்பது தான்'' என்று ஒரே வரியில் கூறிவிடுவார்கள். "கல்லூரியில் படிக்கும் பெண்கள் எல்லோருமே கெட்டுப் போவதில்லை...ஒரு சிலர் அப்படியிருக்கலாம்'' —என்று சகோதரி கூறுகிறார். ஒப்புக்கொள்கிறேன். எனின், குறிப்பிட்ட சில பெண்களுக்காகப் படங்களில் படித்த பெண்களை இழிவு செய்யும் வகையில் காட்சிகளைச் சேர்ப்பது—அதன் மூலம்

தீய வழியில் செல்லும் பெண்களைத் திருத்த வேண்டும்' என்று கூறுவதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. பெண்கள் படித்து சமுதாயத்தை உயர்த்தும் பணியில் பங்கு கொள்வதாகப் படங்களில் காண்பிக்கவேண்டுமே தவிர, "படித்தும் பயனற்றவர்களாகி விடுகிறார்கள்" என்று உபதேசம் செய்தால் அதை ஏற்றுக் கொள்ள முடியுமா! "பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்த கதை போல" பெண்களுக்கு ஒரு படிப்பினை என்று கூறி, கல்லூரிப் பெண்களின் சீர்கெட்ட வாழ்க்கையைக் காட்டி, படித்த பெண் இனத்தைப் பரிகாசம் செய்வதுடன், பாமரரிடம் "பெண் கல்வி கூடாது" என்ற கருத்தையும் பரப்புதல் நாட்டின் நிலையை சீர்குலையச் செய்து விடும். இது கூடப் புரியவில்லையா?

**மு. புரட்சிப் பித்தன், மதுரை.**


### கவனிக்க வேண்டுகிறேன்!

**ச**மீப காலமாக, வெளியாகும் சில படங்கள் சமுதாய கலாசாரத்தையும், பண்பாட்டையும் கெடுக்கும் வகையில் அமைந்திருப்பது வருந்தத் தக்கது; கண்டனத்திற்கு உரியது. படங்களைத் தணிக்கை செய்வதற்கென்று "தணிக்கை போர்டு" என்று ஒன்று இருக்கிறது. ஒரு படத்தைத் தணிக்கை செய்து, அதை திரையிடுவதற்கு உத்தரவளித்த பிறகும் தடை உத்தரவு போடுகிறது. இப்படிச் செய்வதால் பலருக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால், அப்படி படம் **பிடித்த பிறகு தணிக்கை போர்டார் உத்தரவு போடுவதை விட பிடிக்கப் போகும் படத்தின் கதை, வசனங்களை முன்னதாகவே ஒரு முறை தணிக்கையிட வேண்டும்.** இதனால் பட முதலாளிகளுக்கும், சர்க்காருக்கும், ஏற்படக்கூடிய நஷ்டத்தை தவிர்த்துக் கொள்ளலாம். படங்களும் நல்ல முறையில் வெளிவரும். மேற்கூறிய யோசனையை தணிக்கை போர்டார் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

"காடோடி", திருவாரூர்.

### இதுவா சீர்திருத்தம்!

**ந**வம்பர் மாத 'குண்டூசி'யில் வெளிவந்துள்ள 'பராசக்தி'யைப் பற்றிய விமர்சனம் இம்மி அளவும் நேர்மையினின்று பிறழாது இருக்கிறது. 'பராசக்தி' படத்தை நானும் பார்த்தேன். 'குண்டூசி'யின் 'நஞ்சு கலந்த பால் அன்னம்' என்ற பட்டத்தையே நானும் 'பராசக்தி'க்கு சூட்ட விரும்புகிறேன். 'பராசக்தி'யில் மு. கருணாநிதி துவேஷபிரசாரத்தை அள்ளித் தெளித்திருப்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை! பரையோடிப் போன சமுதாயத்திற்கு சீர்திருத்தம் தேவைதான்! ஆனால் சீர்திருத்தம் என்ற பெயரில், இன வெறியைக் கிளப்புவதும், மேனாட்டினரே உணரும் ஆண்டவனை—மனிதன் பகுத்தறிவிற்கும் அப்பாற்பட்டதொரு சக்தியை—படத்தில் நையாண்டி செய்வதும் சீர்திருத்தமா? விஞ்ஞானிகளே 'மனிதனுக்கு பிரார்த்தனை தேவைதான்' என்று கூறுகின்றனர். அப்படிப்பட்ட பிரார்த்தனைகள் கிண்டல் செய்யப்படுகின்றன. இன்னும் அதே போன்ற—அநேக தணிக்கை போர்டின் விதிகளுக்குப் புறம்பான எத்தனையோ காட்சிகள் உள்ள "பராசக்தி" போன்ற படங்களை தணிக்கை போர்டு அனுமதி செய்திருப்பது "நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த நிலை கெட்ட தணிக்கை போர்டை—ஒரு சில பட முதலாளிகளை—வசன கர்த்தாக்களை—பாடல் இயற்றுபவர்களை—



ஒரு சர்க்கார் அதிகாரியின் புத்திரியான இந்தப் புதுமுகம் வஸந்தா 'வேலைக்காரி மகள்" தமிழ் படத்தில் நடிக்கிறார்.



சிலோன் ஷண்முகா பிலிம் கம்பெனியார் தயாரித்து வரும் ''அனாதை'' தமிழ்ப் படத்தில் டி. கே. சம்பங்கியும், சரஸ்வதியும் தோன்றும் நெருக்கடியான கட்டம் இது.

---

டைரெக்டர்களை நினைந்து விட்டால்...' என்று பாடத் தான் தோன்றுகிறது!

'கலாராஜன்', மதுரை.

### படப் பெயர்கள்

நமது தமிழ் சினிமா உலகம் எத்தனையோ விதங்களில் வியக்கத் தக்க முன்னேற்றம் அடைந்து வருவது கண்கூடு. பல மேனாட்டுப் படங்களோடு ஒப்பிடும் அளவுக்கு தமிழ்ப் படங்கள் கலை நுணுக்கங்களில் மிகவும் சிறந்து விளங்குகின்றன. ஆனால், நம் படத் தயாரிப்பாளர்கள் ஒரு முக்கியமான விஷயத்தில் அவர்களைப் பின்பற்றத் தவறி விடுகிறார்கள். அது தான் படங்களுக்குக் கவர்ச்சிகரமான பெயர்கள் கொடுப்பது! நமது தமிழ்ப் படங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து படங்கள் மிகச் சாதாரணமான பெயர்களோடு தான் வெளி வந்திருக்கின்றன; வருகின்றன. நமது படத் தயாரிப்பாளரில் பலர் இந்த முக்கியமான விஷயத்தில் போதிய அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு சில படத் தயாரிப்பாளர்கள் மட்டும் சிறந்த பெயர்கள் கொடுப்பதின் அவசியத்தை உணர்ந்து, தமது படங்களுக்குப் புதுமையான, கலைச் செறிவோடு கூடிய பெயர்களைச் சூட்டி நல்ல வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அந்த விதத்தில் ''ஏழை படும் பாடு'', ''வாழ்க்கை'', ''கன்னியின் காதலி'', ''கல்யாணம் பண்ணிப் பார்'', ''ஏழை உழவன்'' ஆகிய படங்களைக் குறிப்பிடலாம். மேலும், இக் காலத்தில் குடும்ப அங்கத்தினர்களின் பெயர்களைத் தாங்கிக் கொண்டு வெளி வரும் தமிழ்ப் படங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இம் மாதிரிப் பெயர்களோடு படங்கள் தயாரிக்கும் படத் தயாரிப்பாளர்கள் பட உலகில் ஏராளமாகப் பெருகி விட்டார்கள். ஒரு தயாரிப்பாளர் ''அம்மா'' என்று தம் படத்திற்குப் பெயர் வைத்தால், இன்னொருவர் ''தாய் உள்ளம்'' என்பதாக தமது படத்திற்குப் பெயர் சூட்டுகிறார். இன்னும் ''என் கணவர்'', ''என் மனைவி'', ''என் தங்கை'', ''அண்ணி'', ''மாப்பிள்ளை'' போன்ற குடும்பப் பெயர்களில் ஏற்கெனவே பல படங்கள் வெளி வந்திருக்கின்றன. ''மாமியார்'' விரைவில் வெளி வரப் போகிறாள். அதைத் தொடர்ந்து ''மாமனா''ரும் வந்து விட்டால் ஆச்சரியப் படுவதற்கில்லை! புதுமையான பெயர்களில் என்ன இருக்கிறது என்று அவர்கள் நினைக்கலாம். ஒரு சேலையின் பார்டர் போன்றது ஒரு படத்தின் பெயர். பார்டர் திருப்தியில்லை என்றால், எவ்வளவு உயர்ந்த ரக சேலையாக இருந்தாலும் விலை போவது கடினம் தான். நல்ல நூதனமான பெயர்களைப் பார்த்தவுடன், மேற்படிப் படங்களைப் பற்றி பல விதமான எண்ணங்கள் ரஸிகர்கள் மனதில் தோன்றி, அப் படங்களை எப்படியாவது பார்த்து விட வேண்டும் என்ற துடிப்பு ஏற்படுகிறது. ஆகவே நம் படத் தயாரிப்பாளர்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் புதுமையான பெயர்களோடு இனி படங்களை தயாரித்து வெளியிடுவார்களா?

எம். பி. சௌந்தரராஜன்,
வடக்கன்குளம்.

> குறிப்பு :—இப் பகுதிக்குக் கடிதம் எழுதுபவர்கள் தங்கள் முழு விலாஸத்துடன் எழுத வேண்டும்.



# காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

# கீதா பலி

"ரஸிகர்கள் அவருடைய பேட்டியைக் கேட்க விரும்புகிறார்கள் என்பதை நம் நாட்டின் சிறந்த நக்ஷத்திரமான கீதா பலியிடம் நான் தெரிவித்த போது, அவர் மனமுவந்து, பேட்டி அளிக்க ஒப்புக் கொண்டார். கீதா பலியைப் பற்றி நான் புகழ்ந்து கூறுவது, சூரியனுக்கு முன்னால் விளக்கைப் பிடித்த மாதிரித்தான் என்றாலும், அவருடைய விசேஷத் திறமைகளைக் கூறாமல் இருக்க முடியவில்லை. அவர் சிறந்த நடனத் திறமை பெற்றவர். அவரது வருகையினால் சினிமாத் தொழிலே ஒரு நன்மை பெற்றிருக்கிறது. காரணம், நடனத் திறமை பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் ஒரு சிலரே உள்ளனர். "சோஹக் ராத்" என்ற படம் அவரைப் புகழேணியின் படிகளை அடையச் செய்தது. "பாஜி" உன்னதமான வெற்றியாக இருந்தது. இவ்வளவு இருந்தும் கீதா பலி மிகவும் அடக்கமாக, எளிய முறையில் இருக்கிறார். அவர் தமக்கு ஏற்பட்டுள்ள புகழினால் தற்பெருமையோ, கர்வமோ அடைந்துவிடவில்லை. அவரது கவர்ச்சிகரமான குணாதிசயங்களினால் யாரையும் எளிதில் கவர்ந்து விடுகிறார். அவருடன் சில நிமிஷங்கள் பழகியதுமே, பல காலமாக அவரைத் தெரிந்தவர் போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது." இவ்வாறு பேட்டியாளர் பால் ராஜ் ரஸிகர்களுக்கு நடிகையை அறிமுகம் செய்து வைத்து, பின்னர் தம்முடைய பேட்டியை ஆரம்பித்தார்.

பால் :—கீதாஜி ! நானும், ரஸிகர்களும் உங்களையும் உங்களது கலைத் திறமையையும் நன்கு அறிவோம். ஆனாலும் இந்த நிகழ்ச்சி மூலம் உங்களைப் பற்றித் தெளிவாக அறிய விரும்புகிறோம். முதன் முதலில், தாங்கள் எப்படி இந்தத் துறையில் பிரவேசித்தீர்கள் ; அதற்கு முன் எங்கே, என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.

கீதா :—அடேயப்பா ! நீங்கள் ஒரேயடியாகப் புகழ்ந்து எனக்குப் பேசக்கூடச் சந்தர்ப்பம் அளிக்க வில்லையே ! சரி, நான் பேசலாம் அல்லவா !

பால் :—என்னைக் குற்றம் சாட்டாதீர்கள். என் பேச்சை யார் கேட்கக் காத்திருக்கிறார்கள் ? ரஸிகர்கள் உங்களுடைய பேச்சைக் கேட்கத்தான் வெகு ஆவலாகக் காத்திருக்கிறார்கள் ?

கீதா :—நான் இந்தத் துறையில் புகுந்ததே பெரிய கதை; அதைக் கூடியமட்டிலும் சுருக்கமாகக் கூறுகிறேன். நான் 1930ம் வருஷம் நவம்பர் மாதம் 15ம் தேதி அமிருதசரஸில் பிறந்தேன். என் தந்தை பண்டிட் கந்தன் சிங், பக்தி மார்க்





கஜானன புரடக்ஷன்ஸார் தயாரித்து வரும் ''மாமியார்'' என்ற தமிழ்ப் படத்தில் எஸ். வரலக்ஷ்மி கைக் குழந்தையுடன் தவிப்பதைக் காணலாம்.

கப்பிரசாரகராக, தமது வாழ்க்கையை அந்தப் பணிக்கு அர்பபணித்திருந்தார்.

**பால்** :—இது பெருமைப்பட வேண்டிய விஷயம்தான்.

**கீதா** :—எனக்கு, இரு சகோதரிகள் உள்ளனர். எங்களுக்கெல்லாம் மூத்தவர் எங்கள் சகோதரர். என் மூத்த சகோதரி ஹர் தர்ஷன் கவுர், பஞ்சாபில் ஒரு சிறந்த நடனக்காரியாக இருந்தார். எனக்கு இந்தக் கலையில் தெரிந்ததற்கெல்லாம் அவருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**பால்** :—ஆகவே, நடனம் உங்களுக்கு இயற்கையாகவே வந்திருக்கவேண்டும்.

**கீதா** :—ஆம்! அப்படித்தான் சொல்ல வேண்டும். எனது குழந்தைப் பிராயம் முதலே எனக்கு நடனத்தில் அபிலாஷை உண்டு; எங்காவது சங்கீதம் கேட்டால் போதும், நான் ஆடத் தொடங்கிவிடுவேன். எனது பன்னிரண்டாவது வயதில, அகில இந்திய ரேடியோவில் சிறுவர் நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ள ஆரம்பித்தேன். தவிர, ஹாஸ்யப் படங்களைப் பார்ப்பேன். லாரல் – ஹார்டி ஜோடி நடித்தபடம் ஒன்றைக்கூட பார்க்காது விடமாட்டேன். கடைசியாக மேடையில் நடிக்க நான் திட்டமிட்டேன். ஆனால், எங்கள் குலாச்சாரம் அதற்குக் குறுக்கே நின்றது. நான் அப்படிச் செய்வது எங்கள் குலத்துப் பெண்களுக்கே ஒரு வழி காட்டியாக இருந்து விடுமென ஏக எதிர்ப்பு இருந்தது. அவர்கள் என்னைத் திட்டஆரம்பித்தனர். இதையெல்லாம் என் தந்தை சமாளிக்க வேண்டி யிருந்தது. என் தந்தை அவர்கள் குற்றச் சாட்டுகளை பொருட் படுத்தவில்லை. அவருக்கு எங்கள்மீது அதிதமான நம்பிக்கை உண்டு. ஆகவே, அவர் எங்கள் இஷ்டத்திற்குக் குறுக்கே நிற்க வில்லை. எனக்கு எதிரிடையாகச் செய்யப்பட்ட பிரசாரம் அவரிடம் ஒன்றும் பலிக்கவில்லை.

**பால்** :—அப்படியானல் மிகக் கடுமையான எதிர்ப்புகளுக்கு நீங்கள் ஆ( ாகியிருக்கக் கூடும்.

**கீதா** :—ஆம் ; அதை வார்த்தைகளால் சொல்லிமுடியாது. எங்கள் குலத்தவர் மேலும் மேலும் குறை கூறிக் கொண்டே யிருந்தார்கள். நாங்கள் அவர்களின் பேச்சை லட்சியம் செய்யாமல், நடிப்பிலும், நாட்டியத்திலும் அதிக சிரத்தை காட்டலானேம். மேடையில் எனக்கு நல்ல வெற்றியே கிடைத்தது. ரூப் ஷோரே என் நடனத்தைப் பார்த்து திருப்தி அடைந்தார். தாம் இரண்டு ரீல்களில் தயாரித்த "சக்கிலிய மன்னன்'' (''தி காப்ளர் கிங்'') என்ற படத்தில் எனக்கு ஒரு நடனம் கொடுத்தார். அதற்காக எனக்கு இருநூற்றி எழுபத்தி ஐந்து ரூபாய்கள் கொடுத்தார். இப்படியாக நான் பல படங்களில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் போதுதான், காலஞ்சென்ற மஸார்கான் லாகூருக்கு வந்தார். ''பத்ஜஹார்'' என்ற படப் பிடிப்பின் போது என்னைப் பார்த்த அவர் என்னைத் தேர்ந்தெடுத்தார். பிறகு நான் பம்பாய்க்கு வந்து, கேதார் ஷர்மாவைச் சந்தித்தேன். அவர் "ஸோஹாக் ராத்'' என்ற

படத்தில் கதாநாயகியாக நடிக்கும் சந்தர்ப்பத்தை அளித்தார். இந்தப் படத்தின் மூலம் தான் நான் ஒரு நக்ஷத்திரமானேன். அதிலிருந்துதான் எனக்குப் பல படங்களில் நடிக்க அழைப்புகள் வந்தன. ஒப்பந்தமும் ஆயின. இதுதான் நான் பட உலகில் புகுந்த வரலாறு. இனி எனக்கு உத்தரவு கொடுங்கள்.

**பால்** :—இவ்வளவு சீக்கிரமாகவா! அது எப்படி முடியும்? வாழ்க்கையில் உங்களை நேரில் சந்தித்து சில கேள்விகள் கேட்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதற்குள் உங்களுக்கு அலுப்புத் தட்டிவிட்டதா? உங்களைக் கேட்கவேண்டிய விஷயம் இன்னும் எவ்வளவோ இருக்கிறதே.

**கீதா** :—ரொம்ப சரி; கேளுங்கள்.

**பால்** :—நீங்கள் நடித்த படங்களில் எதில் மிகவும் நன்றாக நடித்திருக்கிறீர்கள்?

**கீதா** :—நான் எல்லாப் படங்களிலுமே சிரமப்பட்டு சிரத்தையுடன்தான் நடித்திருக்கிறேன். என்றாலும், "ஸோஹாக் ராத்", "பாவ்ரே நைன்", "பாஜி", "அல்ஹெப்" ஆகியவைகளே எனது வெற்றிப் படங்கள் என்று நான் நினைக்கிறேன்.



ரோஹிணி பிக்சர்ஸார் தயாரித்து வரும் "வஞ்சம்" என்ற தமிழ்ப் படத்தில் நடிக்கிறார் இந்த மது.

**பால்** :—நீங்கள் நடித்த, அடுத்து வரப் போகும் படங்கள் யாவை? அவைகளில் எவை சிறப்பாக இருக்கும் என்பது உங்கள் அபிப்பிராயம்?

**கீதா** :—நான் நடித்த படங்கள் பல வெளிவரப் போகின்றன. அவைகளில் குறிப்பிடத் தக்கவை. "ஆனந்த மடம்", "ஜால்", "பரர்" ஆகியவை. "ஜாலா"விலும், "பரரி"லும் நான் கிருஸ்துவப் பெண்ணாக நடித்திருக்கிறேன். "ஆனந்த மடம்" நம் சுதந்திரப் போராட்டம் பற்றிய கதை. அதில் எனக்கு என் பாகம் மிகவும் பிடித்தமாக இருக்கிறது. நீங்களும் விரும்புவீர்களென நம்புகிறேன்.

**பால்** :—நீங்கள் டைரெக்டர் போன்ற பொறுப்பான வேலைகளை ஏற்க விரும்புகிறீர்களா?

**கீதா** :—இல்லை; அந்த மாதிரி ஆசை எனக்குக் கிடையாது. இந்தக் கலையில் நடிகையாகவே சேவை செய்ய விரும்புகிறேன். சினிமாத் தொழிலிலேயே ஒரு தனியான உதாரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு, என்னுடைய சிரத்தையினாலும், முயற்சியினாலும் நடிப்பில் ஒரு உயர்ந்த ஸ்தானத்தை அடைய விரும்புகிறேன். ஆகவே, நான் நடிகையாக இருப்பதுடன் திருப்தியடைகிறேன்.

**பால்** :—ஏன், நீங்கள் 'பாலி ஸிஸ்டர்ஸ்' என்ற பெயரில் கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு படக் கம்பெனியை ஆரம்பித்து, "ராக் ரங்" என்ற படத்தைத் தயாரிக்கவில்லையா! அதில்கூட நீங்கள் அசோக் குமாருடன் நடித்திருக்கிறீர்களே!

**கீதா** :—"ராக் ரங்" எங்கள் படம் என்பது உண்மைதான்; ஆனால் அது விஷயமாக நான் கவலைப்பட்டது கிடையாது. என் சகோதரியும், சகோதரரும் அதை கவனித்துக் கொள்ளுகின்றனர்.

**பால்** :—நீங்கள் எப்பொழுதாவது

அயல் நாடுகளுக்குப் போயிருக்கிறீர்களா ?

கீதா :—போயிருக்கிறேன். என் தந்தை தமது மதப் பிரசார வேலையாக மேல் நாடுகளுக்குப் போயிருக்கிறார். நாங்கள் இருவரும் அவருடன் போயிருக்கிறோம். நான் அப்பொழுது மிகவும் சிறியவள்; அது நான் சினிமாத்தொழிலில் பிரவேசிக்காத சமயம். நான் அப்பொழுது மலேயா, பர்மா, போன்ற பெரிய நகரங்களைப் பார்த்தேன். இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தேன். பிறகு இலங்கைக்கும் சென்று பார்த்தேன்.

பால் :—உங்கள் சிறு பிராயத்தில் நீங்கள் ஊர் சுற்றுவதிலேயே கழித்ததாகச் சொல்கிறீர்கள். அப்படியானால் நீங்கள் கல்வி கற்றது எங்கே?

கீதா :—என் தமக்கை ஹர் தர்ஷனின் பள்ளிக்கூடத்தில்.

பால் :—உங்களது தமக்கை ஏதாவது பள்ளியில் உபாத்தியாயினியாக இருந்தாரா, என்ன?

கீதா :—இல்லை. பள்ளிக்கூடத்திலோ, புஸ்தகங்களிலோ எனக்கு விருப்பம் இருக்கவில்லை. ஆகவே, நான் எந்தப் பள்ளிக்கூடத்திற்கும் போகவில்லை. நான் கற்றுக்கொண்டிருப்பதெல்லாம் என் தமக்கையிடம் தான். ஆகவே, நான் கல்வி கற்றது என் தமக்கையின் பள்ளியில் என்று சொல்லலாம் அல்லவா ?

பால் :—குழந்தைப் பிராயத்திலிருந்து உங்களுக்குப் பிடித்த பொழுது போக்குகள் எவை ?

கீதா :— குழந்தைப் பிராயத்திலிருந்து ஆடுவதும் பாடுவதும் எனக்கு மிகவும் பிடித்தமானவை. இன்று கூட நடனம் ஆடக்கூடிய ஒரு படத்தில் நடிக்கவே நான் அதிகம் விரும்புகிறேன். மறந்துவிட்டேனே, சிறு வயதில் பட்டம் விடுவது என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

நவஜோதி ஸ்டுடியோவில் தயாராகிவரும் "அனாதை" தமிழ்ப் படத்தில் தோன்றி நடிக்கும் புதுமுகம் ஈஸ்வர்.



பால் :—உங்களுக்கு சமையல் வேலை தெரியுமா ?

கீதா :—சமைப்பதைவிட எனக்கு சாப்பிடத் தான் அதிகம் தெரியும். எனக்கு முட்டைகள் ரொம்பப் பிடிக்கும். 'முட்டை ஹாம்லெட்' தயாரிப்பது ஒன்றில் தான் எனக்குத் திறமை உண்டு. எனக்குப் பிடித்தமான பானம் டீ. அதை மட்டும் நானே தான் போட்டுக் கொள்வேன். நீங்கள் என் வீட்டுக்கு வந்தால், எப்பொழுதும் ஒரு லீப்டன்ஸ் டீ டின்னை சமையல் அலமாரியில் காணலாம்.

பால் :—உடைகளில் உங்களுக்குப் பிடித்தமான வர்ணம் எது ?

கீதா :—ஆடைகளின் விஷயத்தில் எனக்கு எப்பொழுதுமே அவ்வளவு சிரத்தை கிடையாது; எனினும் இலேசான ஆரஞ்சு நிறம் எனக்குப் பிடித்தது.

பால் :—நீங்கள் அத்தர் போன்ற வாசனைத் திரவியங்கள் உபயோகிப்பது உண்டா?

கீதா :—சில நேரங்களில் உபயோகிப்பது உண்டு. 'மிஸ் சிப்', 'ஸெவன்த் ஹெவன்' என்ற அத்தர்கள் எனக்கு ரொம்பவும் பிடித்தவை.

பால்:—படப் பிடிப்பில்லாத நாட்களில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

கீதா:—அந்த நாட்களில் தான் எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. சில நாட்களில் நண்பர்களின் வீடுகளுக்குப் போய் அரட்டை அடித்துப் பொழுது போக்குவேன். அல்லது படங்கள் பார்க்கப் போவேன்.

பால்:—எந்த மாதிரி

ஆங்கிலப் படங்கள் உங்களுக்குப் பிடிக்கும்?

கீதா:—ஆங்கிலப் படங்களில் சங்கீதப் படங்களையும் ஹாஸ்யப் படங்களையும் நான் மிகவும் விரும்பிப் பார்ப்பேன். அவைகளை நான் பார்க்கத் தவறமாட்டேன்.

பால்:—நீங்கள் நடித்த படங்களை நீங்கள் பார்க்கப் போவது உண்டா?

கீதா:—உண்டு. நான் நம்பிக்கையுடன் அவைகளைப் பார்க்கப் போவேன். ஆனால் என் நடிப்பைப் பார்க்கும் போது எனக்கு அவை திருப்தி அளிப்பதில்லை. நான் ஒவ்வொரு படத்தையும் பார்த்து என் நடிப்பிலுள்ள குறைகளை அடுத்த படங்களில் நீக்கிக் கொள்ள முயற்சி செய்கிறேன்.

பால்:—எந்த மாதிரி கதா பாத்திரமாக நடிக்க உங்களுக்கு விருப்பம்?

கீதா:—நான் ஒரு நடிகை. நடிகை என்கிறவள் எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நடிக்கும் திறமை பெற்றிருக்க வேண்டும். ஆகவே, எந்தக் கதா பாத்திரமும் எனக்கு ஒன்று தான். தனிப்பட நான் விரும்பும் கதா பாத்திரம் என்று ஒன்றும் கிடையாது. பலதரப்பட்ட கதா பாத்திரங்களாக நடிப்பதையே நான் விரும்புகிறேன். அது எனது அறிவை விருத்தி செய்ய உதவுகிறது.

பால்:—உங்களுக்குக் கார் ஓட்டுவதில் ரொம்பப் பிரியம் என்று கேள்விப் படுகிறேனே!

கீதா:—வாஸ்தவம் தான். கார் ஓட்டுவது என்பது எனக்குப் பிடித்தமான பொழுது போக்காகி விட்டது. நீண்ட தூரம் கார் ஓட்டிப் போவதை நான் விரும்புகிறேன்.

பால்:—இருக்கும். பம்பாயிலிருந்து புனாவுக்கு நீண்ட தூரம் காரில் நீங்களும் நடிகர் தேவ் ஆனந்தும் போகும் போது தானே உங்கள் இருவருக்கும் விபத்தில் காயம் பட்டது.

கீதா:—காரை அப்பொழுது ஓட்டிச் சென்றது நான் அல்ல; தேவ் ஆனந்த் என்பதை உங்களுக்குக் கூறுகிறேன்.



முக்கமாலாவும், ஜி. வரலக்ஷ்மியும் குதூகலமாயிருக்கும்படி விட்டுவிட்டு நாம் அப்புறம் செல்வது உண்மையில் பெரிய "பரோபகாரம்" அல்லவா?

பால்:—நீங்கள் ஏதாவது விளையாட்டுகளில் கலந்து கொள்வதுண்டா?

கீதா:—உண்டு. ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் நான் பாட்மிண்டன் ஆட்டம் விளையாடுவது உண்டு.

பால்:—உங்கள் சொந்த விஷயம் பற்றி உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?

கீதா:—நீங்கள் ஏற்கெனவே பல அப்படிப் பட்ட கேள்விகளைத் தானே கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே தயக்கம் என்ன?

பால்:—அது உங்கள் விவாகம் பற்றியது.

கீதா:—என்ன!

பால்:—நீங்கள் ஏன் விவாகம் செய்து கொள்ளக் கூடாது?

கீதா:—ஏன் கூடாது? ஒவ்வொரு மங்கையும் மணக்க வேண்டுமென்றுதான் நான் நினைக்கிறேன். நானும் கூட கல்யாணம் செய்து கொள்ளத் தான் போகிறேன்.

பால்:—யாரை?



**மனைவி** :—என்னாங்க, நம்ம பையனுக்கு ஹிந்தியே வரமாட்டேங்குதே, அதற்கு நீங்க ஏதாவது ஏற்பாடு செய்யுங்களேன்.

**டைரெக்டர்** :—(ஞாபக மறதியாக) இதற்கேன் கவலைப்படுகிறாய். ஹிந்தி வரலேன்னா 'டப்' செய்துட்டால் போறது...

**கீதா** :—என்ன கேள்வி இது! ஒரு ஆடவனைத் தான்—ஒரு மனிதப் பிறவியைத் தான்!

**பால்** :—எப்படிப் பட்ட கணவனை நீங்கள் அடைய விரும்புகிறீர்கள்?

**கீதா** :—நான் ஒன்றும் அப்படிப்பட்ட பிரமாத அழகி என்று சொல்லிக்கொள்ள முடியாது; ஆகவே ரொம்ப அழகான ஒருவனை நான் விரும்ப முடியாது. நாங்கள் ஊதாரித் தனமாக செலவு செய்யாவிட்டாலும், தாராளமாகச் செலவு செய்து வாழ்க்கையை நடத்தும் அளவுக்கு பணமுள்ளவனாக இருக்க வேண்டும் எனக்கு வரும் கணவன்.

**பால்** :—நீங்கள் எப்பொழுது மணந்து கொள்ளப் போகிறீர்கள்?

**கீதா** :—அதைப் பற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. ஆனால் ஒரு விஷயம். என் திருமணத்திற்கு நிச்சயம் உங்களுக்கு அழைப்பு வரும். தயவு செய்து, இனிமேலும் கல்யாண சம்பந்தமான கேள்விகள் கேட்காதீர்கள்.

**பால்** :—ரொம்ப வந்தனம்; நான் நிச்சயம் வருகிறேன். உங்களுக்கு நடனம் என்றால் ரொம்பப் பிடிக்கும் என்று சொன்னீர்கள் இல்லையா?

**கீதா**:—ஆமாம்; அதற்கென்ன?

**பால்** :—உங்களுக்கு மிகவும் பிடித்தமான நடனம் எது?

**கீதா** :—எனக்கு எல்லா தினுசு நடனங்களுமே பிடிக்கும். என்றாலும் கதகளி மிகவும் பிடிக்கும். நான் அதைத் தான் இடைவிடாது நிறையக் கற்று வருகிறேன்.

**பால்** :—இங்கே பல வாத்தியக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள். இந்த பேட்டியை உங்களது கதகளி நடனத்துடன் முடிக்க வேண்டுகிறேன்.

**கீதா** :—அதை இன்னொரு சமயம் வைத்துக் கொள்ளலாம்.

**பால்**:—மறுபடி இப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிடைப்பது துர்லபம். ஆகவே, தயவு செய்து மறுக்காதீர்கள்.

**கீதா** :—சரி, ஆடித் தான் ஆக வேண்டுமென்றால் ஆடுகிறேன்.

[பின்னணி வாத்தியங்கள் இசைக்கப் படுகின்றன. கீதாபலி கதகளி நடனம் ஆடினார்.]

**பால்** :—உங்கள் நடனம் அற்புதம். சிறந்த நிகழ்ச்சி. நீங்கள் ஒரு காலத்தில் நடன டைரெக்டராகலாம்!

**கீதா**:—உங்கள் புகழ்ச்சி அளவு கடந்து விட்டது.

**பால்** :—உங்களை அதிக நேரம் தாமதிக்க வைத்துவிட்டேன். இந்த பேட்டிக்காக நான் உங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். என் ரஸிகர்களின் பாராட்டுகளை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**கீதா** :—நமஸ்தே!

**[பிரபல லிப்டன்ஸ் டீ கம்பெனியார் ஏற்பாட்டில் ஒலிபரப்பப் பட்ட பேட்டி இது.]**




134141

## முதல் அத்தியாயம்

டைரெக்டர் ரவிசங்தர், அந்த ஒரு காட்சி படமாக்கப் படுவதற்குள் தமது கைக் கெடியாரத்தைப் பதினோராவது தடவை உற்றுப் பார்த்துக் கொண்டார். பதினோராவது தடவையாக அவர் தொடர்ந்தார்ப்போல் விட்ட பெருமூச்சிற்கு எதிரொலி செய்வதுபோல் காமிராமேன் கங்காதரன் சலிப்புடன் தமது தோள்களைக் குலுக்கினார். கடுமையாக வீசிக்கொண்டிருந்த கோடை கால சூரியக் கிரணங்கள் தன் மேல் கொடுமையாக வீச, காமிராவிற்கு முன்வந்து பதினோராவது முறையாக நின்ற காமினியின் மெல்லிய புருவங்களும் அலுப்பினால் ஒன்றோடொன்று நெரிந்தன. உதவி வசன கர்த்தா, அந்தக் காட்சி முடிவதற்குள் தமது பேனாவையே சாப்பிட்டு விடுகிறவர்போல் அதை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டு சிந்தனையிலேயே மூழ்கிக் கிடந்தார். ஸ்டுடியோவிலே வெளிக் காட்சிக்காக ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டிருந்த சித்திரான்னங்களின் ருசியை முன் கூட்டியே கற்பனை செய்து பார்த்து நாக்கைத் திட்டிக் கொண்டிருந்த கதையின் ஆசிரியருக்கு ஞாபகம் எல்லாம் வேறு ஒரு உலகிலே இருந்தது. காமிராவையும், கதாநாயகியையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாரே ஒழிய அவரது சிந்தனை, சிறுவனாக இருக்கையிலே ஆடிப் புது வெள்ளப் பெருக்கின்போது, காவிரி நதிக்கரை மீது, தன் அன்னை, அக்கா, தம்பிகளுடன் உண்டு களித்த பலவித சித்திரான்ன வகைகளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தது. முந்திய ஒரு படத்தின் வெள்ளி விழாவுக்குத் தமது அபிமானிகள் சிலர் பரிசாக அளித்திருந்த வெள்ளி சிகரெட் டப்பாவை எடுத்து, கடைசியாக அதிலிருந்த சிகரெட்டை உருவிப் பற்ற வைத்தார் பட முதலாளி.

தனது சூழ்நிலை உற்சாகமின்றி மந்தமாகி விட்டதின் காரணத்தை நொடியில் ஊகித்துக் கொண்டு விட்டார். மேலே தொடர்ந்து காட்சியைப் பிடிப்பதில் பயன் இல்லை என்று உணர்ந்த அவர் "இத்துடன் நிறுத்திக் கொண்டு, டிபனுக்குப் பிறகு மற்றதை ஆரம்பிக்கலாமே" என்றார்.

இந்தச் சில வார்த்தைகளை அவர் கூறி முடித்த மறு வினாடி, சூழ்நிலையிலே திடீரென்று புது மாற்றம் ஏற்பட்டது. நடிகை காமினியின் சாயம் பூசப் பெற்ற சிவந்த அதரங்களில் ஒரு குறுநகை மின்னலைப் போல் தோன்றி மறைந்தது. நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்ட டைரெக்டர், தமது ஆசனத்தை விட்டு எழுந்தார். தனியானதொரு சிந்தனை உலகிலே உலவித் திரிந்து கொண்டிருந்த கதாசிரியர் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு, நிமிர்ந்து உட்கார்ந்தார். சோர்வினால் எல்லோரிடமும் வியாபித்திருந்த அலுப்பு வினாடிப் பொழுதில் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடி விட்டது.

வெளிப்படக் காட்சி எடுத்துக் கொண்டிருந்த இடத்திற்குச் சில கஜ தூரத்திலே காணப்பட்ட இடிந்த ஒரு பழங்காலத்துக் கட்டடத்தின் முன்பு அவர்கள் வந்தார்கள். கட்டடத்தின் முன்பு வானத்தை நோக்கி வளர்ந்திருந்த ஒரு பெரிய வேப்பமரத்து நிழலிலே, வேலையாட்கள், ஜமக்காளத்தை

லக்ஷ்மி

விரித்து, தட்டுகளில் உணவு வகைகளை அவசரமாகப் பரிமா றத் தொடங்கினார்கள். உணவின்மீது கருத்தாக இருந்த அவர் கள் அனைவரும் சில நிமிஷங்கள் ஒன்றுமே பேசவில்லை. சுத்த மான பசும் நெய் வழிந்தோடும்படி தயாரிக்கப் பட்டிருந்த சர்க்கரைப் பொங்கலை, ஸ்பூனால் நாசூக்காக எடுத்து வாய்க் குள் திணித்துக் கொண்டாள் காமினி. பொங்கலின் இனிப்பு நாவினின்றும் உடல் முழுவதும் பரவி விட்டதுபோன்று அவளுக்கு ஒரு பிரமை யும் ஏற்பட்டது. "அதிகமாக இனிப்புப்



கதாசிரியர் வீரத் தேவன் கதையைத் தொடங்குகிறார்.

பண்டங்களைச் சாப்பிடாதீர்கள்" என்று தனது வைத்தியர் செய்திருந்த எச்சரிக்கையைக்கூட அவள் அது சமயம் மறந்து போனாள். தேவ அமிர்தம்போல் இனித்த பொங்கலைத் தாராளமாக இன்னொரு ஸ்பூன் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு, தனக்கு முன் தெரிந்த இடிந்த மதில் சுவர்மீது தன் பார்வையைச் சுழற்றினாள்.

"தூரத்திலே இருந்து பார்த்தபோது ஏதோ ஒரு இடிஞ்ச குட்டிச் சுவர்னு நினைச்சேன். கிட்டத்திலே பார்க்கிறபோது பாழடைந்த கோட்டை மாதிரின்னு இருக்கு. இது என்ன கட்டடமோ? கேட்பாரத்து இப்படிப் பாழாக் கிடக்குது'' என்றாள் காமினி.

தயிர் சாதத்தை விழுங்கிவிட்டுக் குளிர்ந்த நீரையும் திருப்தியாகப் பருகி முடித்த கதாசிரியர் உள்ளமும் வயிறும் ஒருங்காகக் குளிர்ந்திருந்தன. "இதைத்தான் 'வீரத்தேவன் கோட்டை'ன்னு சொல்வாங்க'' என்றார் அவர்.

"வீரத்தேவன் கோட்டையா! நான் அப்படி ஒரு பேரைக் கேள்விப்பட்டதேயில்லையே. ஏதோ இடிஞ்ச குட்டிச் சுவர்னு இதைப் பார்த்ததும் நினைச்சேன்'' என்றார் வியப்புடன் கங்காதரன்.

"காமிரா எல்லைக்கு அப்பால்பட்ட விஷயங்கள் உங்கள் கண்களில் படாது. அப்படிப் பட்டாலும், அது உங்கள் கருத்திலே பதியாது. இந்த அழகிய கோட்டையைக் குட்டிச் சுவர்னு சொல்றதை அந்த வீரத்தேவன் மட்டும் இப்போது கேட்டானானால்........'' என்று கதாசிரியர் முடிக்காது அதட்டலாக நிறுத்தினார்.


"கேட்டால் என்ன செய்து விடுவானும்?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தார் டைரக்டர் ரவிசந்தர்.

"தன்னைத் துச்சமாகப் பேசின மனிதனது தலையைத் திருகிக் கொள்ளிடத்து மணலிலே புதைத்து விடுவான். அவ்வளவுதான்'' என்றார் கதாசிரியர். பேனா முனையின் வழியாகப் பல கொலைகளைக் கூசாது வினாடிப் பொழுதில் செய்து முடித்திருந்த அவரால் அவ்வாறு அலட்சியமாகப் பேச முடிந்தது. ஆனால், இதைக் கேட்டதும காமனியின் உடல் பயத்தினால் ஒரு முறை சிலிர்த்தது.

"வீரத்தேவன் என்பவன் ரொம்பப் பொல்லாதவனோ? நீங்கள் சொல்கிறதைப் பார்த்தால், நாம் இங்கே உட்கார்ந்திருக்கிற இடத்தில் கூட ஏதாவது பிணம் கிணம் புதைக்கப்பட்டிருக்குமோ என்னவோ என்று எனக்குப் பயமாய் இருக்கிறதே'' என்றாள்.

"வீரத்தேவன் பல கொலைகள் செய்தானோ என்னவோ? ஆனால், அவன் பேரைச் சொன்னாலும் இந்த சுற்று வட்டாரத்திலே அழுத பிள்ளைகூட வாய் மூடும்






"அடடா! 'பிசாசுத் தீவு' கதா நாயகன்னுடா இவர்! அவருடைய நடிப்பைப் பார்த்துட்டு அவரே பயந்து மூர்ச்சையாகி விட்டாருடா!"

என்பார்கள். அவ்வளவு செல்வாக்கு அவனுக்கு இருந்தது'' என்றார் கதாசிரியர்.

''பேரைக் கேட்டால் என்னவோ பழைய காலத்துக் கதைகளில் வரும் தீவட்டிக் கொள்ளைக்காரன் பெயர் போலிருக்கிறது'' என்றார் உதவி வசன கர்த்தா சிரித்துக் கொண்டு.

"சில கிராமங்களிலே மிராசுதார்கள் தங்களைப் பண்ணையார்கள் என்று பட்டப் பெயரிட்டு அழைத்துக் கொள்கிறார்கள் அல்லவா! அது போல, சில நூறு வருஷங்களுக்கு முன்பு பெரிய மிராசுதார்கள் தங்களை ராஜாக்கள் என்று அழைத்துக் கொள்ளுவதுண்டு. அந்த மாதிரியான ராஜ குடும்பங்கள் ஒன்றைச் சேர்ந்தவனே இந்த வீரத்தேவன். வீர ரத்தம் ஒடிய தமிழர் குடும்பத்திலே பிறந்த இவன், ஒருவிதத்தில் பெரும் கொள்ளைக்காரனாகத் தான் இருந்தான். அழகிய இளம் பெண் ஒருத்தியின் இதயத்தை ஒரே பார்வையிலே கொள்ளை கொண்டு விட்டிருந்தான். அந்த வகையிலே இவனைப் பெரும் கொள்ளைக்காரன் என்று கூடச் சொல்லலாம்'' என்று கூறி நிறுத்தினார் கதாசிரியர்.

"கேட்க ரொம்ப ஸ்வாரஸ்யமாக இருக்கிறதே' என்று கண்களை அகலமாக விரித்த காமினி, "இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள் வியப்புடன்.

"சமீபத்திலே ஏதாவது ஓலைச் சுவடிகளை ஆராய்ச்சி செய்திருப்பார்?'' என்று கேலியாகக் கூறிய ரவிசந்தர் கண்களைச் சிமிட்டினார்.

"இதற்குக் கோட்டை யென்று ஏன் பெயர் ஏற்பட்டது. அரண்மனைன்னு பெயர் கொடுத்திருந்தால் பொருத்தமாய் இருக்கும். ஒரு சமயம் இங்கே ஏதாவது பெரிய யுத்தம் நடந்ததோ?'' என்று வினவினாள் காமினி.

"ஆமாம், அம்மா! ஒரு வகையில் ஒரு பெரும் போர் நடந்தது. அன்பை வெல்ல இருவர் மிகவும் போராடினார்கள். அந்தக் கதையானது மிகவும் அழகானதொரு கதை. அதைக் கேட்டால் நீங்கள்...'' என்று நிறுத்தினார் ஆசிரியர்.

"சொல்லுங்களேன். கேட்கலாம்'' என்று குழைவான குரலில் வேண்டிக் கொண்ட காமினி, பொங்கல் தட்டைக்

ஊமே வைத்து விட்டுக் கதை கேட்பதற்குத் தயாரானாள்.

கதாசிரியர் தமது தொண்டையைப் பலமாகக் கனைத்துக்கொண்டார். பெரிய கதை ஒன்றை ஆரம்பிக்கப் போவது போல் அவர் செய்த முன்னேற்பாடுகளைக் கண்ணுற்ற படமுதலாளிக்கு உள்ளூற நடுக்கம் ஏற்பட்டது. 'பொங்கலுக்கு வெளியிட வேண்டும்' என்று தீர்மானித்திருந்த அவரது படம் அப்பொழுது கால்வாசி கூடத் தயாராகவில்லை. சீக்கிரம் படத்தை முடிக்க வேண்டும். என்ற அவசரத்தில் அவருக்குப் பசி, தூக்கம் இவையெல்லாம் போய்,இரவும் பகலும் படத்தைச் சுட்டுத் தள்ளிவிட வேண்டும் என்று ஆத்திரம்தான் இருந்தது. அவரது மனோவேகத்திற்குத் தக்கவாறு ஒத்துழைக்க முடியாதபடி பசியும், தூக்கமும் இடையே வந்து படப்பிடிப்பைத் தடை செய்தன. இவையெல்லாம் போதாதென்று,இப்பொழுது கதாசிரியர் வேறு ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்துப் பொழுதை வீணாக்கி விட்டால்......என்ற அச்சம் அவர் மனதை ஒரு உலுக்கு உலுக்கியது.

"கதை இருக்கட்டும், ஐயா! காரியத்தை முதலில் பார்ப்போம்" என்று அதட்டிப் பேச அவருக்கு முடியும் என்றாலும், பல காரணங்கள் கொண்டு அவர் தமது நாவை அடக்கிக் கொள்ள வேண்டிய தாயிற்று.

"ஒரு படத்தைத் திறமையாக எடுத்து முடிக்கப் பணம் ஒன்றின் உதவி மட்டுமே போதாது. எல்லோருடைய பூரணமான ஒத்துழைப்பும் தேவை" என்பது அவர் அனுபவத்தினால் அறிந்த உண்மை. உணர்ச்சி மிக்க காட்சிகளைத் திறமையாகச் சித்தரிக்க விரும்பினால், அதில் ஈடுபட்டு உழைப்பவர்களின் மனநிலையை சின்னாபின்னப் படுத்தக்கூடாது என்ற ரகசியத்தை அவர் அறிவார். எனவே, எல்லையற்ற ஒரு பொறுமையை வரவழைத்துக் கொண்டு, "ஏன், ஐயா, ஆசிரியரே! இது என்ன 'போக்லோரா', புராணமா? சமூகச் சித்திரமா? சரித்திரக் கதையா? எதைச் சேர்ந்தது?" என்று கேட்டுவிட்டுப் புன்முறுவல் செய்தார்.

"உங்கள் விருப்பப்படி இதை எந்த வகையில் வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம். வாழ்க்கையிலேயே அடிப்படை யானதொரு உணர்ச்சி; ஒரு போராட்டம்; இவைகளைக் கருத்தாகக் கொண்ட கதை. இந்தக் கருத்தைப் புராணத்திலும் காண முடியும். நீங்கள் இப்போது பிடித்துக் கொண்டிருக்கும் சமூகச் சுருவளியிலும் காணலாம். ஆகவே, இதை எந்த வகையில் சேர்ப்பது என்று சொல்ல முடியவில்லை" என்றார் கதாசிரியர் பதிலுக்கு.

"சரித்திரக் கதை என்றே எடுத்துக் கொள்வோம். ஏனெனில், இதிலே ராஜா, கோட்டை இவைகள் வருகின்றன. ஆமாம்! இந்தக் கதை சுமார் எத்தனை வருஷங்களுக்கு முன்பு நடந்தது என்று கூற முடியுமா?" என்று உதவி வசன கர்த்தா ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

'சில நூறு வருஷங்களுக்கு முன்பு என்று மட்டுந்தான் சொல்ல முடியும். ஏதாவது செப்புத் தகட்டை ஆராய்ந்து விட்டு, நான் கூறுவதில் தப்புகள் கண்டு பிடிக்கப் போவதாக இருந்தால் நான்



ரோஹிணியின் "வஞ்சம்" தமிழ்ப் படத்தில் துரைசாமி சூரியகாந்தம் தோன்றும் இக் காட்சி வருகிறது.

ஆரம்பிக்காமலேயே நிறுத்திக் கொள்கிறேன்" என்றார் கதாசிரியர்.

"கொஞ்சம் நீங்கள் எல்லோரும் சும்மா இருங்களேன். அவர் கதை சொல்லட்டும் கேட்கலாம். இப்படிக் குறுக்கே பேசினால்..." என்று காமினி அலுத்துக் கொண்டாள்.

"குறுக்கே பேசவில்லையம்மா! மன்னிக்கவும். ஐயா, கதாசிரியரே! ஆரம்பியுங்கள்" என்றார் டைரெக்டர்.

கதாசிரியர் மீண்டும் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "சுமார் சில நூறு வருஷங்களுக்கு முன்பு, ஒரு நாள் சூரியன் மலை வாயிலில் விழப்போகும் அழகான அந்தி வேளையிலே..." என்று கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

"சில நூறு வருஷங்களுக்கு முன்பா? அப்பொழுது பிராந்தியம் எப்படி இருக்கும்னு, மனசால் கூட நினைச்சுப் பார்க்க முடியலையே? ரொம்பப் பழய காலத்துக் கதையாக இருக்கிறதே!" என்றாள் காமினி, குறும்பாக.

"ஏன் அம்மா நினைத்துப் பார்க்க முடியாது? இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு நடந்ததாக இருக்கும் ஒரு 'போக்லோரி'லே நேற்று நமது கடைகளில் வந்துள்ள நைலான் சில்க் துணியை அணிந்து கொண்டு நீங்கள் கதாநாயகியாகப் படத்திலே தோன்றி நடித்து விடுகிறீர்கள். அதைப் பார்த்து விட்டு நாங்கள் எங்கள் கற்பனையை இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின்னோக்கிப் பறக்கவிட வேண்டும். ஆனால், உங்களால், சில நூற்றாண்டுகளுக்குப் பின்னோக்கிக் கற்பனையைச் செலுத்த முடியாது! தேவலையே இது!" என்றார் கதாசிரியர்.

"விளையாட்டிற்காகக் கேட்டேன். கோபிக்க வேண்டாம், ஸார்! நான் கண்களை மூடிக் கொண்டு நீங்கள் கூறிய காலத்தைக் குறித்து பின்னோக்கி ஓடி விடுகிறேன். நீங்கள் கதையைச் சொல்லுங்கள்" என்றாள் காமினி.

"உங்களுக்கு நான் அவ்வளவு சிரமம் கூடத் தரப் போவதில்லை. இதோ உங்கள் கண்கள் முன்னாலே, வரண்டு ஒரே மணல் வெளியாகக் காட்சி யளிக்கும் கொள்ளிடத்திலே, நொங்கும் நுரையுமாகப் புது வெள்ளம் இரு கரையையும் கிழித்துக் கொண்டு போவதைச் சில விநாடிகளில் காண்பீர்கள்" என்றார் பெருமையுடன். அதற்கு யாரும் குறுக்கே பேசாததினால் கதாசிரியர் ஊக்கமாக மேலே பேசிக் கொண்டே போனார்:

அன்று அஸ்தமிக்க இன்னும் கொஞ்ச நேரமே தான் இருந்தது. கொள்ளிடத்தின் இரு கரைகளையும் தொட்டு விடுவது போல், பொங்கி ஓடிக் கொண்டிருந்த புது வெள்ளத்தின் மீது அந்தி சூரியனின் சிவந்த கிரணம் படிந்த போது, செப்புத் தகட்டை உருக்கி வார்த்தது போல் நீர்ப் பரப்பு சிவந்து காணப்பட்டது. கொள்ளிடக் கரையோரமாக மரங்கள் அடர்ந்த சாலைமீது பெட்டி வண்டி யொன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. இனிமையான அந்த மாலைப் பொழுதிலே, வேகமாக ஓடிக் கொண்டிருந்த அந்த வண்டிக் காளைகளின் கழுத்துச் சலங்கை ஓயாது செய்து கொண்டிருந்த ஒலி, புதுமை செய்து கொண்டு நின்ற கொள்ளிடப் பெண்களின் பேச்சு, இவை ஆனந்த நடனத்தின் தாள ஒலி போல் மிகவும் இனிமையாக இருந்தன.

வண்டியின் திறந்த ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த வாலிபன் ஒருவன், "இந்தக் காட்சியைப் பார்த்தீரா? திருசிரமலை தென் பக்கம் உயர்ந்து காணப்படும் அழகும், இந்த அந்தி வெய்யிலில் மின்னும் கொள்ளிடமும், ஆஹா! அற்புதம்!" என்றான் விம்மிதமாக.

"வசமாக அகப்பட்டுக் கொண்டாய்! அப்படி வா, வழிக்கு! சற்று முன் அரண்மனையிலே என்னுடன் நிகழ்த்திய வாதத்தின் படி இப்போது நீ தோற்று விட்டாய். 'பாண்டிய நாடுதான் இயற்கை வளம் பெற்றது என்றும், சோழ மண்டலம் இயற்கை அழகிலே குறைந்தது' என்றும் ஒரே யடியாக விவாதித்த நீயே, எங்கள் கொள்ளிடத்தின் அழகிலே சொக்கி விட்டாய்! நண்பா! நீ தோற்று விட்டதை ஒப்புக்கொள்" என்று கூறி விட்டுக் கையைக் கொட்டி நகைத்தான், வண்டியிலிருந்த இன்னொரு வாலிபன்.

"உங்கள் நாட்டிலும் இயற்கை அழகு பொலிந்து கிடக்கிறது. ஒப்புக் கொள்கிறேன். ஆனால், நான் செய்த விவாதத்திலே நான் முற்றிலும் தோற்று விடவில்லை. சோழ நாடு, பாண்டிய நாட்டை விட உயர்ந்தது என்பதை எடுத்துக் காட்ட இன்னும் சில சான்றுகள் தேவை

# டிஸம்பர் 25உ முதல்

## தமிழ் விளக்கவுரையுடன்கூடிய

# யூகிவாரிசு

## நான்கு வயதுச் சிறுவனைப்பற்றிய நளினமான சித்திரம்....

## சர்வ தேசத்திற்கும் உகந்த ஜப்பானியப் படம்...



சென்னை

## கிரௌன் & காமதேனு

| | | |
|---|---|---|
| மதுரை | - | ஸென்ட்ரல் சினிமா |
| கோயமுத்தூர் | - | தியேட்டர் ராயல் |
| சேலம் | - | நியூ சினிமா |
| திருச்சி | - | ஸ்டார் டாக்கீஸ் |
| வேலூர் | - | தாஜ் தியேட்டர் |
| காரைக்குடி | - | நடராஜா டாக்கீஸ் |
| திருநெல்வேலி | - | பாலஸ்-டி-வேல்ஸ் |
| திண்டுக்கல் | - | ஸென்ட்ரல் சினிமா |
| ஈரோடு | - | ராஜாராம் தியேட்டர் |
| பாண்டிச்சேரி | - | கமர்ஷியல் திரூடோன் |

கிரௌன், காமதேனு: தினசரி 3 காட்சிகள் 3-30, 6-30, 9-30.

என்பது நினைவிலிருக்கட்டும்'' என்றான் முதலில் பேசினவன்.

"அத்தகைய சில சான்றுகளையும் இன்னும் சற்று நேரத்திலேயே கண்ணால் கண்டு, உன் தோல்வியை முழுவதும் ஒப்புக் கொள்ளப்போகிறாய்'' என்று இரண்டாவதாகப் பேசிய வாலிபன் மெல்ல நகைத்தான்.

வண்டி கொள்ளிடத்தின் கரையிலே வளர்ந்திருந்த பெரிய, புளிய மரத்தடியில் நிறுத்தப் பட்டது. சிவந்த மேனியும், நல்ல உயரமும், செழிப்பான தேகக் கட்டும், அழகு பொருந்திய முகமும், ஆடம்பரமான ஆடைகளும் உடுத்திய வாலிபன் ஒருவன் முன்னால் இறங்கினான். அவனைத் தொடர்ந்தாற் போல் பின்னால் இறங்கிய வாலிபன் ஏறக்குறைய அதே உயர முடையவனாக இருந்த போதிலும், நல்ல கருத்த மேனியும், கட்டுமஸ்தானத் தோற்றமும் கொண்டவனாக இருந்தான். அவன் அணிந்திருந்த ஆடைகளிலே ஆடம்பரம் அதிகம் காணப்படவில்லை.

பேச்சிலும், பாவனையிலும் நெருங்கிய நண்பர்கள் போல் தோன்றிய அவர்கள் இருவரும், கொள்ளிடக் கரை மீது,புதுப் புனலிலே ஆடி மகிழத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தனர். நானா விதமான பட்டாடைகளை உடுத்திய ஆடவரும், பெண்களும், சிறுவர்களும், சிறுமியரும் கொள்ளிடக் கரை முழுவதும் கூடியிருந்த காட்சி, அந்த அந்தி வேளையில் பார்க்க மிக அழகாக இருந்தது.

திருவிழாவிற்காக அருகிலிருந்த ஊர்களிலிருந்து, வந்திருந்த பல கடைகளும், கொள்ளிடத்தின் சாலையைப் பெரிதும் வியாபித்துக் கொண்டிருந்தன. வளையல் கடைகளிலும், தின்பண்டங்கள் குவிந்திருக்கும் கடைகளிலும் கூடியிருந்த இளம் பெண்களின் கூட்டத்தின் பக்கமே அந்த இரு நண்பர்களின் கண்களும், அடிக்கொரு தடவை வட்ட மிட்டுக் கொண்டிருந்தன.

நகைக் கடை யொன்றிலே பேரம் பேசிக் கொண்டு நின்ற சில பெண்களைக் கடைக் கண்ணால் கூர்ந்து பார்த்து விட்டு, மிகவும் சலிப்புடன் திரும்பினான் நண்பர்களில உயரமாக இருந்தவன். சிறிது தொலைவிலிருந்த மகிழ மரத்தின் நிழலிலே, மணல் தரைமீது உட்கார்ந்திருந்த ஒரு வயதான கிழவியிடம் பேசிக் கொண்டிருந்த இரு பெண்கள் மீது அவன் கவனம் சட்டென்று சென்று லயித்தது.

கோடை காலத்திலே மணலை அரித்துக் கொண்டு ஓடும் தண்மையான கொள்ளிடத்து நீரிலே குதித்து நீந்தி விளையாடும் பொழுது ஏற்படும் ஒருவித மகிழ்ச்சி அவன் உடல் முழுதும் அது சமயம் மின்னலைப் போல் பாய்ந்து பரவியோடியது.

"இருளப்பா! இதோ பார்! இப்பொழுது நீ உன் தோல்வியைக் கட்டாயம் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். அதோ தெரிகிற மகிழ மரத்தின் பக்கம், மெல்ல உன் கண்களை ஓட விட்டுக் கவனி. என்ன காண்கிறாய்? சோழ நாட்டின் அழகே ஒன்றாய்த் திரண்டு பெண் உருவில் வந்து நிற்பதைப் போன்றிருப்பதைப் பார்! உங்கள் நாடு எங்களது நாட்டைவிட இயற்கை வளத்திலெ மிக்கதாக இருக்கலாம். ஆனால், இப்படிப் பட்ட ஒரு அழகியை உங்கள் நாட்டிலே பார்க்க முடியுமா, சொல்!'' என்று வியப்புடனும், கட்டுக் கடங்காத ஒரு மகிழ்ச்சியுடனும் நண்பனிடம் மெல்லிய குரலில் கூறிப் புன்முறுவல் செய்தான்.

பாண்டிய நாட்டிலே பிறந்து வளர்ந்து சோழ மண்டலத்திற்குப் பிழைப்பிற்காக வந்து தங்கி யிருந்த இருளப்பன், தன் நண்பன் காட்டிய திசையைப் பாராதவன் போல் பார்த்தான்.

பதினெட்டு அல்லது இருபது வயதிற்குள் மதிப்பிடத்தக்க ஒரு இளம் பெண், தனது மலர்க் கரத்தை முன்னால் நீட்டிய படி மணல் தரை மீது உட்கார்ந்திருந்தாள். அவளது தோளைத் தழுவியபடி இன்னொரு பெண் வெகு அருகிலே வீற்றிருந்தாள். கையை நீட்டிக் கிழவியிடம் குறி கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்ணைத் தான் தன் நண்பன் சோழ மண்டலத்து அழகு அணங்கு என்று குறிப்பிட்டான் என விரைவில் ஊகித்துக்கொண்ட இருளப்பன், சிறிது நேரம் மகிழ மரத்திலிருந்தும் மறு பக்கம் திரும்பாது திகைத்து நின்றான்.

இந்த இரு வாலிபர்களின் கருத்தை ஒரே யடியாகக் கவர்ந்து விட்டதைச் சிறிதும் அறியாத அந்தப் பெண், தன் சிறிய முத்துப் பற்கள் தெரியச் சிரித்து,

அந்தக் கிழவியிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

இந்த இடத்தில் கதாசிரியர் மேலே கூறுவதை நிறுத்திவிட்டுக் காமினியின் பக்கம் திரும்பினார்.

"ஒரு பெண் மிகவும் அழகாக இருந்தாள் என்று சொன்னவுடன் உங்களுக்கு என்ன தோன்றுகிறது சொல்லுங்கள்" என்று வினவினார்.

காமினி சங்கோஜத்துடன், முகத்தை ஒரு முறை குலுக்கி விட்டு, "தாழம் பூப் போன்ற மேனியும், கருமையான கூந்தலும், அகன்ற விழிகளும், எடுப்பான மூக்குமாக, செதுக்கி வைத்த தந்த பொம்மை போன்ற ஒரு உருவம் மனக் கண் முன் தோன்றுகிறது" என்றாள்.

"அதைத் தான் சொல்ல வந்தேன் அம்மா! அழகு என்பதைப் பற்றிய பெண்களின் ரஸிகத் தன்மைக்கும், ஆண்களின் ரஸிகத் தன்மைக்கும் அதிக வேற்றுமை இருக்கின்றது. மேலும் நீங்கள் பெண்களிலே கருப்பான அழகிகளைப் பார்த்ததில்லை போலிருக்கிறது. மகிழ மரத்தடியிலே இருளப்பன் பார்த்து மயங்கிய அந்தப் பெண் கன்னங் கரேலென்ற மேனி படைத்தவள். ஆனால், அந்தக் கறுப்பு கண்களை உறுத்தும் கரிய நிறம் அல்ல. சந்திர ஒளியிலே காணும் தண்மையை வீசிக் கொண்டிருந்த, மினுமினுப்பு நிறைந்த அழகிய கார் முகில் நிறம். சற்று நீண்ட வட்ட வடிவமான முகத்திலே, ரோஜா மலர்களைப் போன்ற வெளிர்ந்த சிவந்த அதரங்கள். இலேசாக அவைகள் பிரிந்து காணும் போதெல்லாம் முத்துச் சரத்தைப் போன்ற ஒளி வீசும் வெண்ணிறப் பற்கள். செவ்வரி படர்ந்த அகன்ற இரு விழிகள். இவையனைத்தும் அந்தக் கரிய மேனியின் அழகுக்கு அழகு செய்து கொண்டிருந்தன" என்றார் கதாசிரியர்.

காமினி, பதில் பேசாது நீண்டதொரு பெருமூச்சு விடவே, கதாசிரியர் மேலே தொடர்ந்தார்:

அந்தக் கறுப்பழகியை ஏற இறங்கப் பார்த்த இருளப்பன் தன் நண்பன் பக்கம் திரும்பி, "வீரத்தேவா! நான் இன்னமும் தோற்று விடவில்லை. மகிழ மரத்


# பி. எஸ். கந்தசாமி சா சன்ஸ்

ஸ்தாபிதம் 1904

(டெலிபோன்: 86135)

சேலைகள், வேஷ்டிகள் முதலிய எல்லா விதமான ஜவுளிகளும் நூதன தினுசுகளில், நயமான விலைக்கு எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

**கறார் விலை! மெத்தைக் கடை!**

13, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை—2.

தலைமை ஆபீஸ்: செக்குப் பேட்டை, காஞ்சீவரம்.



**விரைவில் வெளிவர விருக்கும் ஏவி.எம்.மின் ''செல்லப் பிள்ளை'' தமிழ்ப் படத்தில் சகஸ்ரநாமம் இப்படியாக ''தூக்குத் தண்டனை''யை அநுபவிக்கிறார்!**

தடியிலே காணப்படும் பேரழகி பாண்டிய நாட்டுப் பைங்கிளி'' என்று கூறிவிட்டுக் குறும்புத்தனமாய் சிரித்தான்.

அதைக் கேட்ட வீரத்தேவன், ''இருளப்பா! உன் கூற்று உண்மையானது என்பதற்குச் சான்றுகள் என்னவோ?'' என மெதுவாக வினவினான்.

''பாண்டி நாட்டிலே பிறந்து வளர்ந்த எனக்கு எங்கள் நாட்டுப் பெண்களையா அடையாளம் கண்டு கொள்ள முடியாது? மீண்டும் ஒரு முறை பார்! அவள் காதிலே அணிந்திருக்கும் மகர குண்டலம் பாண்டிய நாட்டுத் தட்டார்கள் செய்யும் வேலைப்பாடுடன் விளங்குகிறது. அப்படிப்பட்ட வேலைப்பாட்டை இந்த் நாட்டிலே காண முடியாது. அவள் தலையிலே அணிந்திருக்கும் தலைக் கோல முத்தும் எங்கள் பாண்டிய நாட்டின் தனித் தன்மை பெற்ற முத்துச் சரங்கள் தாம். அவள் உடுத்தி யிருக்கும் மஞ்சள் நிறப் பட்டுச் சேலையும் எங்கள் நாட்டிலே நெய்யப் பெற்றது தான். வீரத்தேவா! பெண்களின் அழகை ருசிக்கத் தெரிந்த எனக்கு அவர்கள் அணியும் ஆடை ஆபரணங்கள் பற்றியும் நன்கு தெரியும். உன்னோடு வேண்டுமானால் ஒரு பந்தயம் வைக்கிறேன். அவள் பாண்டிய நாட்டுப் பெண் திலகமே தான். கனவில்கூட சோழ மண்டலம் அவளிடம் உறவு கொண்டாட முடியாது'' என்று சிரித்தான் இருளப்பன்.

வீரத் தேவன் தன் நண்பன் பக்கம் திரும்பி மிகவும் அமைதியுடன், ''இருளப்பா! கடைசியாக நீ கூறியதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அவள் எந்த ஊரைச் சேர்ந்தவள் என்று அறியு முன்பே என் உள்ளம் அவளது உறவை நாடி ஓடிச் சென்று விட்டதே!'' என்று கூறிவிட்டுச் சிரித்தான். பதிலுக்கு இருளப்பன் வானமே இடிந்து விழும்படி உரத்து நகைக்கவே, அதைக் கேட்டுத் திடுக்கிட்ட மகிழ மரத்தடியில் இருந்த பாண்டிய நாட்டு மோகினி திரும்பிப் பார்த்தாள். கொள்ளிடத்து மீன்களைப் போல் அவளது விழிகள், மருட்சியும் வியப்பும் மாறி மாறிப் பிரதிபலிக்க, வீரத் தேவன் பக்கம் சஞ்சரித்தன.

**கைக்** கெடியாரத்தை உற்றுப் பார்த்த கங்காதரன் வானத்தை வெறித்துப் பார்த்தார். படத்திற்கு உகந்த நல்ல வெளிச்சம் பாழாகிப் போகின்றதே என்று அவர் உள்ளத்திலே தோன்றிய சிந்தனையை ஊகித்துக் கொண்ட பட முதலாளி, ''மேலே படப் பிடிப்பை ஆரம்பிக்கலாமே'' என்றார்.

காமினியின் சாம்பிய வதனத்தைக் கண்ணுற்ற கதாசிரியர், ''அம்மா! கவலைப் படாதீர்கள். கதை, நாளைக்குப் படப்பிடிப்பின் இடை வேளையில் தொடரும்!'' என்று கூறிவிட்டு எழுந்தார்.

(தொடரும்)

# சென்னையில் கோலாகலம்

## கண்ணுக்கும் காதுக்கும் கனஜோரான விருந்துகள்

டிஸம்பர் மாதம் 15ம் தேதிக்கு மேல் ஜனவரி மாதம் முடிய வருஷா வருஷம், சென்னை ஒரே கோலாகலமாகத் தான் இருக்கும். தமிழ் நாட்டின் பல பாகங்களி லிருந்தும் கிருஸ்துமஸ் வேடிக்கை பார்க்க ஜனங்கள் சென்னைக்கு வந்து கூடுவது வழக்கம். அப்படி வருகிறவர்களுக்கு நேத்திரானந்தம் அளிக்க கண்காட்சிகளும், செவிக்கு விருந்தளிக்க சங்கீதக் கச்சேரிகளும் நிறைந்திருக்கும். இந்த வருஷமும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளமாக உள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, சில அசௌகரியங்களால் நடைபெறுது நின்று போயிருந்த அகில இந்திய காங்கிரஸ் சுதேசி கைத்தொழில் பொருட்காட்சி இவ் வருஷம் மீண்டும் ஆரம்பமாகி யுள்ளது. அதே பெயரில், தேனும்பேட்டையில் அதே இடத்தில் தான் நடை பெறுகிறது. ஆனால், இவ் வருஷம் அதை நடத்துபவர்கள் காங்கிரஸ் கமிட்டியார் அல்ல. அனுபவம் மிக்க என். என். ராமபத்ரன் என்பவர் அதை எடுத்து நடத்துகிறார்.

சென்ற மாதம் 18ம் தேதி இந்தப் பொருட் காட்சியை மைசூர் முதல் மந்திரி ஸ்ரீ. ஹனுமந்தய்யா திறந்து வைத்தார். அவர் "சுதேசி பொருள்களையே வாங்க வேண்டும் என்று நாம் உறுதி கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்.

பொருட் காட்சி அழகாகவும், கவர்ச்சிகரமாகவும் அமைக்கப் பட்டிருக்கிறது. நிர்வாகிகள் இவ் வருஷம் பல புது அம்சங்களைச் சேர்த்திருக்கின்றனர். சுதேசிக் கைத்தொழில் காட்சிகள் நிறைய இடம் பெற்றுள்ளன. மைசூர் கைத்தொழில் இலாகாவும் பிரதான இடம் பெற்றிருக்கிறது. பலவித ராட்டினங்களும், பாதாள சைக்கிள் கிணறு போன்றவை இவ் வருஷம் புதிதாக வந்துள்ளன. "கலா மண்டப"மும் பொருட் காட்சியில் இடம் பெற்றிருக்கிறது.

இவை தவிர, பல கலை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்துள்ளனர். சென்ற மாதம் 27ம் தேதி முதல் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியின் நாடகங்கள் கண் காட்சியில் அமைக்கப் பட்டுள்ள கொட்டகையில் நடைபெற்று வருகின்றன. ராஜமாணிக்கத்தின் நாடகங்களின் உயர்வைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் அவர் சென்னை வந்திருக்கிறார். அவரது நாடகங்களுக்கு நல்ல கூட்டம் கூடி வருகிறது. இது தவிர, இக் கண்காட்சியுடன் இணைந்த கலை நிகழ்ச்சிகள், தனியாக திருவல்லிக்கேணி 'கலா மண்டப'த்தில் நடைபெற்று வருகின்றன. பல நடனங்களும், நாடகங்களும் அதில் இடம் பெற்று வருகின்றன.

கண்களுக்கு ஒரு புறம் விருந்தென்றால் செவிகளுக்கு விருந்தான கச்சேரிகளும் நடந்து வருகின்றன. வழக்கம் போலவே இந்த வருஷமும் மியூஸிக் அகாடமியினர் சங்கீத விழாவை ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் இந்த வருஷம் ஒரு விசேஷம் உண்டு. இது அகாடமியின் வெள்ளி விழாவும் ஆகும். வழக்கம்போல் சங்கீத விழாவின் காலை, பிற்பகல் நிகழ்ச்சிகள்; மயிலை பி. எஸ். ஹைஸ்கூலிலும் மாலை, இரவு நிகழ்ச்சிகள் மயிலை ரஸிக ரஞ்சனி ஸபா ஹாலிலும் நடந்தன.

சென்ற மாதம் 19ம் தேதி, சென்னை கவர்னர் கனம் ஸ்ரீபிரகாசா இந்த சங்கீத விழாவை ஆரம்பித்து வைத்தார். வீணை வித்வான் காரைக்குடி சாம்பசிவ ஐயர் மகாநாட்டின் தலைவராக இருந்து, அருமையான சொற்பொழி வொன்று செய்தார். அவரது பேச்சின் சாராம்சம் சங்கீத உலகிலேயே ஒரு பிரமிப்பை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

சென்ற மாதம் 20ம் தேதி முதல், இம் மாதம் முதல் தேதி முடிய, ஐம்பது கச்சேரிகள் நடந்தன. ஒன்றிரண்டு நடனக் கச்சேரிகள் தவிர மற்றவை பூராவும் சங்கீதக் கச்சேரிகளே. உண்மையில் திறமை மிக்க இளம் வித்வான்களுக் கெல்லாம் சந்தர்ப்பம் கொடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கடைசி நாளன்று 'ஹிந்து' ஆசிரியர் கே. ஸ்ரீநிவாஸனின் தலைமையில் சதஸ் நடைபெற்றது. வீணை சாம்பசிவ அய்யருக்கு சங்கீத கலாநிதி பிருது அளிக்கப் பட்டதோடு, பல சங்கீத வித்வான்க

# சென்னை வீதிகளில் சினிமா நக்ஷத்திரங்கள்

## புயல் நிவாரணத்திற்காக நிதி திரட்டுகிறார்கள்!

கடந்த ஆண்டு நவம்பர் மாத இறுதியில் அடித்த புயலினால் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் ஏற்பட்ட நஷ்டம் மகத்தானது. அதற்கு ஆளாகி வருந்தும் பல ஆயிரக் கணக்கான மக்களுக்கு நிவாரண மளிக்க நமது பிரதமர் ராஜாஜி ஒரு நிவாரண நிதி ஆரம்பித்திருக்கிறார். சினிமாத் தொழிலிலுள்ளோர் நிவாரண நிதிக்கு நிதி திரட்டி அளிக்க முன் வந்திருக்கிறார்கள். இது பற்றி அவர்கள் மிகவும் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

சினிமா உலகப் பிரமுகர்கள் இந்த நிதிக்கு எந்த விதத்தில் பொருள் சேர்ப்பது என்பது குறித்து விவாதிக்க சென்ற மாதம் 10ம் தேதி, சென்னை பிலிம் வர்த்தக சபையில், டைரெக்டர் கே. சுப்ரமண்யம் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. நக்ஷத்திரங்கள் தெருத் தெருவாக, வீடு வீடாக, கடை கடையாகச் சென்று பொருள் வசூலிப்பது என்றும், சினிமாக்களில் ஒரு காட்சியில் வசூலாகும் தொகையை நிவாரண நிதிக்கு அளிக்க படத் தயாரிப்பாளர்களையும் விநியோகஸ்தர்களையும் கேட்டுக் கொள்வதென்றும், வீடிழந்தவர்களுக்கு வீடு கட்டிக் தர மலபார் படப் பிரமுகர்களிடம் ஓலை, கயிறு முதலியன கேட்பதென்றும் முடிவு செய்தார்கள். இந்தக் கமிட்டிக்கென பலர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். கமிட்டியில், எஸ். எஸ். வாஸன், ஏவி. எம்., போன்ற படத் தயாரிப்பாளர்களும், கே. சாரங்கபாணி, ஜி. வரலக்ஷ்மி, டி. ஆர். ராஜகுமாரி, டி. கே. ஷண்முகம் போன்ற நக்ஷத்திரங்களும் இடம் பெற்றுள்ளனர்.

ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸன், பிரதமர் ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு ரூ 10,000 கொடுத்து உதவி இருக்கிறார். சினிமாப் பிரமுகர்கள் ஆரம்பித்துள்ள வசூல்நிதி மூலம் சிவாஜி கணேசன், டி. ஆர். ராஜகுமாரி இருவரும் தலா ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். பிரபல நாட்டிய மணிகளான லலிதா–பத்மினி–ராகினி சகோதரியர் ஆயிரம் ரூபாய் பெறுமான முள்ள ஆடைகளைக் கொடுத்து உதவி யிருக்கின்றனர். மற்ற பலரும் சிறு சிறு தொகைகளைக் கொடுத்துள்ளனர்.

சென்ற மாதம் 12ம் தேதி முதல் மூன்று நாட்களுக்கு பின்கண்ட நக்ஷத்திரங்கள் கடை வீதிகளிலும், வீடுகளிலும், பீச்சிலும் சென்று நிதி வசூலித்தார்கள். ஜி. வரலக்ஷ்மி, டி. சூர்யகுமாரி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், ஸஹஸ்ரநாமம், டி. என். சிவதாணு, ஆர். எம். சோமசுந்தரம் ஆகிய இவர்களுடன், டைரெக்டர் கே. சுப்ரமண்யம், கெம்ப்ராஜ் ஆகியோரும் சேர்ந்துகொண்டனர்.

இது தவிர, சென்ற மாதம் 14ம் தேதி கிண்டி, குதிரைப்பந்தய மைதானத்திலும் வசூல் நடைபெற்றது. எம். கே. ராதா, டி. எஸ். பாலய்யா, டி. கே. ராமச்சந்திரன், வி. கே. ராமசாமி, எம். என். நம்பியார், ஹொன்னப்ப பாகவதர் ஆகியோர் குதிரைப் பந்தய மைதான வாசலில் நின்று பணம் வசூலித்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட கக்ஷியின் பெயரால் ஒரு நிதி திரட்ட இந்த நிவாரண நிதிக்கு உதவவும் சில பட உலகப் பிரமுகர்கள் முன் வந்திருக்கிறார்கள். டைரெக்டர் கே. சுப்ரமண்யம் இந்த நிதிக்கு பொருள் திரட்டவென, சென்னையில் ஒரு நக்ஷத்திர அணி வகுப்பை ஏற்பாடு செய்யவும் முயற்சிகள் செய்து வருகிறார்.

**புயல் நிவாரண நிதிக்கு நீங்களும் உதவுங்கள்!**

---

...ளுக்கு விசேஷ மரியாதைகள் செய்யப்பட்டன.

பிரதி வருஷமும் போல இந்த வருஷமும் இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியினர் சங்கீத விழா ஒன்றை நடத்தினார்கள். இந்த விழாவை சென்ற மாதம் 24ம் தேதி, தொழில் மந்திரி கனம் யூ. கிருஷ்ண ராவ் ஆரம்பித்து வைத்தார். வேணுகான வித்வான் டி. என். சுவாமிநாதப் பிள்ளை விழாவுக்குத் தலைமை வகித்தார். 24ம் தேதி முதல் இம் மாதம் 2ம் தேதி முடிய பல சங்கீத, நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



வினோதா
பிக்சர்ஸின்
தேவதாஸ்;
தமிழ்ப் படத்தில்
சாவித்திரியும்
நாகேஸ்வர ராவும்



பிரபல வடநாட்டுப் பாடகி—லதா மங்கேஷ்கர்

# அமெரிக்க சினிமாத் தொழில்

## டைரெக்டர் கே.சுப்ரமண்யம் . . .

[சில மாதங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஒரு சினிமா தூதுகோஷ்டி விஜயம் செய்துவிட்டுத் திரும்பியதும், தென்னாட்டுப் பிரதிநிதியாக பிரபல டைரெக்டர் கே. சுப்ரமண்யம் அமெரிக்கா சென்று வந்ததும், நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. இந்தியா திரும்பியதும், ஸ்ரீ. சுப்ரமண்யத்தை அகில இந்திய ரேடியோ (சென்னை) நிலைய நிருபர் பேட்டி கண்டது, சென்ற நவம்பர் 2ந் தேதியன்று ஒலிபரப்பப்பட்டது. அப் பேட்டியை கீழே நீங்கள் வாசிக்கலாம்.—ஆசிரியர்]

கேள்வி :—நீங்கள் அமெரிக்காவில் எத்தனை நாட்கள் தங்கியிருந்தீர்கள் ? அங்கு எந்த எந்த இடங்களுக்குப் போயிருந்தீர்கள் ?

பதில்:—நாங்கள் அமெரிக்காவில் நான்கு வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்தோம். முக்கியமாக நியூயார்க், வாஷிங்டன், நார்த்வேல்ஸ், டென்னஸி பள்ளத்தாக்கு, சிகாகோ, கொலராடோ, சால்ட் லேக் சிடி, லாஸ் எஞ்செல்ஸ், ஹாலிவுட், ஹானலொல்லோ இந்த இடங்களுக்கு நாங்கள் நேரில் விஜயம் செய்தோம். அந்தந்த ஊர்களில் முக்கிய ஸ்தாபனங்களுக்கும் சென்று பார்வை யிட்டோம்.

கே :—ஹாலிவுட்டில் தாங்கள் அதிக நாட்கள் தங்கி யிருந்தீர்களா ?

ப:—ஆம். ஹாலிவுட்டில் பன்னிரண்டு நாட்கள் தங்கியிருந்தோம். நாங்கள் அவ்விடம் அதிக நாட்கள் தாமதித்தது சகஜம்தானே ? இனம் இனத்தைச் சேரும் அல்லவா ?

கே:—சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் உங்களை யெல்லாம் அங்கு அமெரிக்காவுக்கு அழைத்ததன் நோக்கம் என்ன?

ப :—பட்டவர்த்தனமாக அவர்களின் நோக்கத்தை அவர்கள் வெளியிடவில்லை. ஆரம்பத்தில் அவர்கள் சொல்லிக்கொண்டது, இந்திய சினிமாத் தொழிலுக்கும், அமெரிக்க சினிமாத் தொழிலுக்கும் நல்லுறவு ஏற்பட வேண்டும். அந் நல்லுறவினால் லாபகரமாய் உள்ள முறைகளில் வியாபார சம்பந்தமாய் புதிய வழிகளில் ஒருவருக் கொருவர் உடன்படிக்கைகள் செய்து கொள்ள வேண்டும். முக்கியமாக இந்திய மக்களிடம் அமெரிக்க மக்களுக்கு எந்தவிதமான நல்ல உணர்ச்சி இருக்கிறது என்பதைக் காண்பிக்க வேண்டும் என்ற நோக்கங்கள். ஆனால், பல சினிமா பிரமுகர்களுடனும், முக்கியஸ்தர்களுடனும் பேசியதி லிருந்தும், ஸ்டுடியோக்களிலும் மற்ற இடங்களில் நடந்த விருந்துகள் பிரசங்கங்களிலிருந்தும் நல்லுறவு மாத்திரம் அல்ல, கூட்டுறவு உடன்படிக்கை மூலம் கூட்டாளியாக சினிமா வியாபாரத்தில் ஈடுபட்டு இரு தேசத்தவர்களும் புதிய படங்கள் உற்பத்தி செய்து அதை ஒரு ஆரம்ப சாதனமாகக் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு அவா இருந்தது என்பதைத் தெரிந்து கொண்டோம்.

கே :—இப்பொழுது திரையிடப்படும் அமெரிக்கப் படங்களைத் தவிர வேறு படங்களைப் பிடிப்பதற்காக இந்தியப் பட முதலாளிகள், நடிகர்கள், தொழிலாளர்கள் ஆகியோர்களை உபயோகித்துக் கொள்ள அவர்கள் விரும்புகிறார்களா !

ப :—நம் நாட்டிலிருந்து நல்ல பண்பு ததும்பும் கதைகளையும், உயர்தர நடிகர் நடிகைகளையும், சிற்சில திறமை வாய்ந்த டெக்னீஷயன்களையும் உபயோகித்துக் கொண்டு சர்வ தேசங்களுக்கும் பிடிக்கும்படியான சில படங்களைத் தயாரிக்க வேண்டும் என்று அவர்களுக்கு அவா இருக்கிறது. அதற்கு ஒரு முக்கியமான காரணம் என்ன வென்றால் சமீப காலத்தில் அமெரிக்காவில் டெலிவிஷன் வந்தது முதல் அனேகமாக ஒவ்வொரு வீட்டிலும் ஒரு டெலிவிஷன் கருவி இல்



ரோஹிணியின் ''வஞ்சம்'' தமிழ்ப் படத்தில் மார் வாரியாக நடிக்கிருர் ஆந்திர நடிகர் வெங்கடராவ்.

லாமல் இருப்பதில்லை. அதுவும் ஆறு கம்பெனிகள் போட்டி போட்டுக்கொண்டு டெலிவிஷனில் பற்பல ரஸமான நிகழ்ச்சிகளை, முக்கியமாக நடனங்கள், நாடகங்கள், விளையாட்டுப் பந்தயங்கள், முக்கியஸ்தர்களுடைய பேச்சுக்கள் இவைகளை யெல்லாம் காண்பிக்கின்றன. வீட்டிலே சௌகரியமாக குடும்பத்துடன் இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்க ஹேது ஏற்பட்ட பிறகு, சினிமா தியேட்டர்களுக்கு அமெரிக்காவில் முன் போல் அவ்வளவு கிராக்கி இல்லை. அதனல் சினிமா உற்பத்தியாளர்கள் புதிய நவீன முறையில் ஏதாவது செய்து, மறுபடியும் சினிமா கொட்டகைகளுக்கு பழைய விதம்போல் பொதுஜனங்கள் ஆதரவு அளிக்கச் செய்ய வேண்டுமானல், ஏதாவது புது முறைகள் செய்யவேண்டி இருக்கிறது. இந்தியாவிலிருந்து சமீபத்தில் கொண்டு போய் காண்பிக்கப் படுகின்ற ''ரிவர்'' என்ற படம் அமெரிக்காவில் சமீப காலத்தில் நான்கு வருஷங்களுக்குள் காண்பிக்கப்பட்ட எல்லாப் படங்களைக் காட்டிலும் நான்கு ஐந்து பங்கு அதிகமான அமோக வெற்றி யடைந்தது. இதைக் கண்டு சினிமா உற்பத்தியாளர்கள் இது மாதிரியாக இந்தியாவின் கலாசாரப் பண்பு, இந்தியாவின் இயற்கை அழகு, இந்தியாவின் நடிகர், நடிகைகள் இவைகளைக் கொண்டு படம் தயாரித்தால் டெலிவிஷனின் உத்ஸாகத்தைக் காட்டிலும், அப் படத்தைக் காண்பிக்கும் தியேட்டர்களிலும் உத்ஸாகத்துடன் கூடி பழைய மாதிரி தியேட்டர்களுக்கு ஆதரவு கிடைக்கும் என்று அவர்கள் கருதுகிருர்கள்.

கே:—அமெரிக்காவில் இந்தியாவிலேயே நம்மவர்களால் தயாரிக்கப்பட்ட படங்கள் ஏதாவது ஓடிக் கொண்டிருக்கிறதா?

ப:—உதயசங்கர் தயாரித்த ''கல்பனு'', டைரெக்டர் சாந்தாராம் தயாரித்த ''டாக்டர் கோட்னிஸ்'', ''சாகுந்தலம்'' இது மாதிரி சில படங்கள் அவ்விடத்தில் திரையிடப் பட்டிருக்கின்றன. ஆனல், பெருமிதமான அமோக வெற்றி என்று சொல்ல முடியாது. அதற்குக் காரணம் அப்படங்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பு டப் செய்து அப் படங்கள் காண்பிக்கப் படவில்லை.

கே:—தற்போது இந்தியாவில் தயாரிக்கப்படும் படங்களில் எத்தகைய படங்கள் அங்கு வரவேற்கப்படும் என்று நினைக்கிறீர்கள்?

ப:—நான் அவ்விடம் போயிருக்கும் போது ''ஆன்'' என்ற வர்ணப் படம் சில முக்கிய பட விநியோகஸ்தர்களுக்குப் போட்டுக் காண்பிக்கப் பட்டது. அப் படம் வெற்றிகரமாக ஓடும் என்று அவர்கள் கருதுகிருர்கள். சில பட டைரெக்டர்கள் என்னிடம் சொன்னது என்னவென்ருல், மேல்நாட்டு பழக்க வழக்கங்களை ஒதுக்கி, இந்தியாவின் சுய கலாசாரத்தை, இந்தியாவின் புராதனப் பண்புகளை, இந்தியாவின் கவர்ச்சிமிக்க இயற்கை வனப்பையும் அடிப்படையா

கக் கொண்டு தயாரிக்கப்படும் கதை ஆங்கிலத்திலும் எடுக்கப்பட்டு அல்லது ஆங்கிலத்தில் டப் செய்யப்பட்டு அனுப்பப்பட்டால் அப்படங்கள் நிச்சயமாக வெற்றி பெறும் என்று அவர்கள் கருதுகிறார்கள். வாயுவேகம் மனோவேகம் என்று விஸ்தரித்துச் சொல்லக்கூடிய விதத்தில் வாழ்க்கை நடத்தும் அமெரிக்க மக்களுக்கு சாந்தி நிலவவும், மன உத்ஸாகம் ஏற்படவும் அந்த வேகத்திலும் ஒரு புதுமையான இன்பம் உண்டாகவும், நமது நாட்டை யொட்டி கதைகளை அமைத்து கலையை வளர்த்து அதனால் கல்வி அறிவை வளர்க்கவும் உத்ஸாகம், ஊக்கம் இவைகள் தங்களுக்கு உண்டாக வேண்டுமென்று அவர்கள் கருதுவதாகவே நான் நம்புகிறேன்.

கே :—இந்தியப் பட முதலாளிகளும், அமெரிக்கப் பட முதலாளிகளும் கூட்டுறவு முறையில் படங்கள் எடுக்க ஏதாவது ஏற்பாடுகள், முயற்சிகள் இருக்கின்றனவா ? அப்படி இருந்தால், நம் நாட்டுப் படத்தொழிலுக்கு அது சாதகமாயிருக்குமா அல்லது பாதகமாயிருக்குமா?

ப :—இந்திய பிலிம் தூது கோஷ்டியில் சென்ற நாங்கள் அனைவரும் இது சம்பந்தமாக பல்வேறு பிரபல அமெரிக்க தொழிலாளிகளிடமும் முதலாளிகளிடமும் பேசியிருக்கிறோம். எனக்குத் தெரிந்த வரையில் இக்கூட்டுறவு முறையில் கூடிய சீக்கிரத்தில் சிற்சில படங்கள் எடுக்க ஏற்பாடுகள் நடக்கும் என்றே எண்ணுகிறேன். அப்படி நடந்தால் இது நமது நாட்டுக்கு சாதகமாக இருக்குமா அல்லது பாதகமாக இருக்குமா என்பது நம் நாட்டைப் பொறுத்திருக்கிறதே யொழிய, அவர்கள் நாட்டைப் பொறுத்தது அல்ல. அதுமாதிரியான ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்போது நம் நாட்டிலுள்ள நம் தொழிலாளிகளும் முதலாளிகளும் இக்கூட்டுறவை நல்ல முறையில் பயன்படுத்தி நமது நாட்டுக் கலாசாரத்தை, பண்பை மேல்நாட்டு நாகரீக சாதனங்களுடன் இணைத்து பழைய தங்கத்திற்கு மெருகு போடுவது போல போட்டு, நமது கலையையும் நமது நாட்டுக் கீர்த்தியையும் பிரகாசிக்கச் செய்யலாம். நமது முதலாளிகளின் மனப்



போக்குட மனப்பான்மையும் நாட்டுப் பற்ருேடு, கடமையைச் செய்தால் கண்டிப்பாக அந்த முயற்சியில் நம் நாட்டுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே ஒரு தனிப் பட்ட லாபம் ஏற்படும் என்பதில் எனக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

கே:—அமெரிக்கப் பட முதலாளிகள் இந்தியக் கதைகள், நடிகர்கள், காட்சிகள் இன்னும் மற்ற சாதனங்களைக் கொண்டு இந்திய பாஷைகளில் படம் எடுத்து நம் நாட்டில் விநியோகித்தால் அது நம்முடைய படத் தொழிலைப் பாதிக்கும் அல்லவா?



பானியின் "சண்டிராணி" படத்தின் ஷூட்டிங்கின்போது எடுக்கப்பட்ட படம் மேலே உள்ளது.

ப:—அமெரிக்கப் பட முதலாளிகள் தனிப்பட்ட முறையில் நம் நாட்டிலுள்ள முதலாளிகளை கூட்டுறவாக சேர்த்துக் கொள்ளாமல் அது மாதிரியான படங்களை எடுத்து நம் நாட்டில் விநியோகித்தால் கண்டிப்பாக நமது நாட்டிலுள்ள பணம் அவர்களுக்கு லாபம் ஏற்படுவதின் மூலம் அவர்கள் நாட்டுக்குப் போய்ச் சேர ஏதுவாகும்.

ஆனல், நமது நாட்டிலுள்ள முக்கியஸ்தர்களுடன் அவர்கள் கூட்டுறவில் செய்தால் நம்முடைய முதலாளிகளுக்கு, அகில உலக மார்க்கெட்டிலும் வியாபாரம் நடப்பதால், அந்த வியாபாரத்திலுள்ள லாபத்தில் பங்கு இருப்பதாலும், இந்தியாவில் மாத்திரம் அடையும் லாபத்தைக் காட்டிலும் பெருமிதமான லாபம் வரக்கூடு மானதாலும் அந்த லாபம் நமது தேசத்துக்கே வந்து சேருவதாலும் நம்முடைய தேசத்தின் பொருளாதாரத்துக்கும் நன்மையுண்டு. அதனல் அதில் ஈடுபட்ட தொழிலாளிகளுக்கும் பல்வேறு வகையிலும் உயர்வும் உண்டு.

கே:—இன்னென்று, நடிகர்களிலும் மற்ற தொழிலாளிகளிலும் பொதுவாக தொழிலிலே ஒரு விரும்பத்தகாத முறையில் போட்டி மனப்பான்மை ஏற்படாதா?

ப:—சினிமவோ ஒரு கலை. இக்கலையின் மூலம் பொது ஜனங்களுக்கு வாழ்வில் ஒரு உற்சாகமும் வாழ்க்கையில் ஒரு சந்துஷ்டியும் மனச் சாந்தியும் உண்டாக்குவதற்காகவே இக்கலையை அபிவிருத்தி செய்ய, தொழிலாளிகளும் முதலாளிகளும் பாடுபடுகிருர்கள். இதில் போட்டியிருப்பதால் கலைக்கு சாதகமே யொழிய பாதகமாகாது. ஆனல், கலைஞர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பொருமை ஏற்படக் கூடாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இந்த இரண்டு குணமும் சாதாரணமாக எல்லாத் துறைகளிலும் மனிதர்களுக்குள் இயற்கையாக இருப்பதுண்டு. இது அமெரிக்கர்கள் நம்முடன் சேர்ந்து படம் எடுப்பதனல் அதிகமாகிவிடுமென்ருே அல்லது குறைந்துவிடுமென்ருே நாம் எதிர்பார்க்க முடியாது. ஒரு சிலருக்குள் மனவேற்றுமை ஏற்படும்



"செல்லப்பிள்ளை"யில் சாவித்திரி

என்பதற்காக பொதுவாக மக்களுக்கு அதிகமாக ஏற்படப் போகும் நன்மையைத் தடுப்பது தவறு. எனக்குத் தோன்றுவது: போட்டியினால் பலவிதத்திலும் லாபமே தவிர, நஷ்டம் இல்லையென்றே கருதுகிறேன்.

கே :—அங்கு படத் தொழில் நாடகக் கலை வளர்ச்சிக்கு பாதகமில்லாமல் இருப்பதாகச் சொல்லுகிறார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன ?

ப :—வாஸ்தவம். நாடகக் கலையே படத் தொழிலுக்கு ஒரு அஸ்திவாரமாக இருக்க வேண்டுமென்று படத் தொழிலில் உள்ளவர்கள் கருதுகிறார்கள். பல நாடகக் கலைஞர்களுக்கு படத் தொழிலில் இடம் கொடுக்கப்படுகிறது. நாடக மேடையில் நடித்துக் காண்பிக்கப்பட்ட அரிய நாடகங்களை படங்களாக உற்பத்தி செய்யவும் செய்கிறார்கள். நாடகக் கலையும் நாடகத் தொழிலும் வெகு செழிப்பாக வளர்ந்தோங்கி பிரகாசித்து வருகின்றன.

கே :—நம் நாட்டைப்போல் ஒரே சமயத்தில் நடிக நட்சத்திரங்கள் பல படங்களில் நடிக்கிறார்களா ?

ப :—அமெரிக்காவில், 'ஆர்டிஸ்ட் கில்ட்' என்று சொல்லப்படும் சங்கங்கள் இருக்கின்றன. அவ்வப்போது தினசரி சம்பளத்தில் வேலை செய்யும் எக்ஸ்ட்ரா நடிகர்களுக்கும் 'எக்ஸ்ட்ரா ஆர்டிஸ்ட் கில்ட்' என்று சங்கங்கள் இருக்கின்றன. இச்சங்கங்களை மீறி நடிகர்களோ அல்லது முதலாளிகளோ எக்காரியங்களையும் செய்ய முடிவதில்லை. சாதாரணமாக உடன்படிக்கைகள்முதற் கொண்டு இச்சங்கங்களால் அனுமதிக்கப்பட்ட உடன்படிக்கைப் பத்திரங்களே உபயோகிக்கப்படுகின்றன. ஒரு நட்சத்திரமோ அல்லது முக்கிய நடிகையோ ஒருவரிடம் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கும்போது மற்றொருவருடன் உடன்படிக்கை செய்து கொள்ளுவது முடியாது. சாதாரணமாக ஒரு படத்திற்கு மேல் ஒரு சமயத்தில் நடிப்பது இல்லை. ஒவ்வொரு படமும் முடிந்தவுடன் அவர்களுக்கும் ஓய்வுக்கு என்று இரண்டு மூன்று மாதம் தரப்படுகிறது. அந்த ஓய்வு நாட்களுக்குள் வேறொரு முதலாளியிடம் அந்த நட்சத்திரம் வேண்டுமானால் நடிக்கலாம். ஆனால், அதற்குள் நடித்து முடிக்கவேண்


அகில இந்திய காதி, சுதேசி பொருட்காட்சியில்


மின்சார இலாக்கா அருகில் அமைந்துள்ள

எங்கள்

**276-277**

**ஸ்டால்களுக்கு**

விஜயம் செய்யுங்கள்




உங்கள் குடும்பங்களுக்கு அவசியமான பர்த் ஸ்டேபிரைட் பாத்திரங்கள் எங்களிடம் ஏராளமாய் கிடைக்கும்.

**எம். ஏ. எதிராஜுலு நாயுடு**

7-A சவினிங் பஸார் :: சென்னை-1.

டும். அதற்கும் எழுத்து மூலம் முதலாளிகளுக்கு தகவல் கொடுத்துத்தான் செய்ய வேண்டும். நமது நாட்டைப் போல் ஒரே சமயத்தில் எட்டு படங்கள், பத்து படங்கள் என்று நடிகர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு இங்கு இரண்டு நாள் அங்கு மூன்று நாள், இங்கு ஒரு கால் அங்கு ஒரு கால் என்ற சிக்கலை அந்நாட்டில் நாம் பார்க்க முடியாது.

கே:—படப் பிடிப்பில் ஈடுபட்டுள்ள பல்வேறு ஸ்தாபனங்களிடையே ஒன்றுபட்ட நோக்கமும் ஒத்துழைப்பும இருப்பதாகக் கருதுகிறீர்களா? இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப:—படப் பிடிப்பில் ஈடுபட்டுள்ள மிகவும் பிராபல்யம் அடைந்த முக்கிய தயாரிப்பாளர்களின் ஒன்பது ஸ்டுடியோக்கள் அமெரிக்காவில் இருக்கின்றன. இவர்களுக்குள் பொதுவாக வியாபார சம்பந்தமாக உள்ள பல பிரச்னைகளிலும் ஒற்றுமையான வகையில் காரியங்கள் ஒற்றுமையான மனப்பான்மையுடன் மொத்தமாக தொழிலுக்கே ஒரு லாபம் ஏற்படும்படியான வகையில் காரியங்கள் சாதிக்க 'மோஷன் பிக்சர்ஸ் சங்கம்' என்ற சங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டு. அந்த ஸ்தாபனத்தில் மிகவும் கைதேர்ந்த செயலாளர்களுக்கு தக்க ஊதியம் கொடுத்து, அச்சங்க மூலம் மிகவும் லாபகரமாக பல்வேறு துறைகளில் தொழிலை அபிவிருத்தி செய்து வருகிறார்கள். உதாரணமாக, 'இண்டர் நேஷனல் செக்ஷன்' என்று சொல்லப்படும் அந்த சங்கத்தில் ஒரு சாரார் வெளி நாடுகளுக்குப் படம் அனுப்பும் விதம், கஸ்டம் சட்டங்கள், கோட்டா, வெளி நாடுகளிலிருந்து எவ்விதம் படத்தை வரவழைப்பது, வெளி நாடுகளில் எந்தெந்தவிதமான வரிகள் கொடுக்கவேண்டும் என்றவிதமான புது விஷயங்கள் எல்லாவற்றையும் கவனித்து வருகின்றன. இதே மாதிரி உள்நாட்டு இலாகாவில் நட்சத்திரங்களுடன் எவ்வித உடன்படிக்கை செய்துகொள்வது, எக்ஸ்ட்ராக்களுக்கு தினசரி சம்பளம் எவ்விதம் பராமரிப்பது, தமாஷா வரி எவ்விதம் கட்டுவது, வருமானவரி எவ்விதம் கட்டுவது, இதுமாதிரி விஷயங்களில் பொதுவாக எல்லோருக்கும் நன்மை ஏற்படும் வகையில் அலுவல்களை கவனித்துக் கொள்ளுகிறது. படப் பிடிப்பிலும், படக் கலையை அவரவர்கள் அறிவுக்கு எட்டினவாறு மிகவும் உன்னதமாகவும், அழகாகவும் வெளிக் காட்டுவதிலும் போட்டி இருக்குமேயொழிய, பொது விஷயத்தில் ஒருவருக்கொருவர் மிகவும் ஆழ்ந்த ஒத்துழைப்புடன் இருக்கிறார்கள்.

கே:—பொதுவாக அமெரிக்கப் படத் தொழிலில் உங்களைக் கவர்ந்த சிறந்த அம்சம் என்ன?

ப:—முக்கியமாக சில சிறந்த அம்சங்கள் என் மனதைக் கவர்ந்தன. அவரவர்களுடைய கடமைகளை சரியான நேரத்தில் சரியான விதத்தில் செய்யும் திறமை. இரண்டாவது படப்பிடிப்பின் போது முதலாளியும் சரி, ப்ரொட்யூசரும் சரி, டைரெக்டரும் சரி படப்பிடிப்பு அன்று நிதானமாக ஆணித்தரமான முறையில், அவர்கள் ஏற்கெனவே எண்ணித் தீர்மானித்ததை நிறைவேற்றும் விதம் எனக்கு மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. நம் நாட்டில் சாதாரணமாக படப்பிடிப்பின் போது திடீரென்று ஒரு படப்பிடிப்பு, திடீரென்று இரண்டு நாள் ஆவேசமான வேகம், பிறகு பல நாள் தூக்கம், ஓரிரு காட்சிகளில் பிரமாதமான ஊக்கம், மற்ற சில காட்சிகளில் ஆமை போன்ற ஊர்ந்து செல்லும் மனோபாவம், திடீரென்று ஒரு நடிகர், நடிகைக்கு பராமரிப்பு—இதுமாதிரி யெல்லாம் இல்லாமல் ஒரு ஆழ்ந்த ஆணித்தரமான மனப்பான்மையுடன் கொஞ்சங் கொஞ்சமாக, குயவன் கையில் மண்ணைப் பிடித்து சாவதானமாகப் பாண்டம் செய்து முடிப்பதைப் போல், படத்தை அவர்கள் முடிப்பது மிகவும் கவர்ச்சிகரமான முறை. மற்றும் முக்கியமான அம்சம் என் மனதைக் கவர்ந்தது என்னவென்றால், சாதாரணமாக நம் நாட்டில் ஷூட்டிங் நடக்கும் - செட்டில் போய் நின்றால் ஒவ்வொரு முக்கியஸ்தரும் தன்னுடைய இலாகாவில் இதர சிப்பந்திகளிடம் கூச்சலிட்டு அவர்களுக்கு வேலை ஏவுவதை நிதர்சனமாகப் பார்க்கலாம். வேறு பலவித கூச்சல்கள் சேர்ந்தாற் போல் ஒலித்துக் கொண்டு இருக்கும் நேரங்களும் உண்டு. அதுசமயம், நடிகர், நடிகைகள் ஊர் விஷயம், உற்றார் விஷயம் பேசிக்கொண்டிருக்கும் காட்சியும் உண்டு. இது எல்லாம் சேர்ந்து ஒரு மார்க்கெட் மாதிரி இருக்கும். அமெரிக்காவில் முக்கியமாக ஒரு ஸ்டுடியோவின்

உட்புறத்தில் பாரிஸ் நகரத் தெருக் காட்சி ஒன்று சுமார் நூற்று ஐம்பது நடிகர்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஷாட்டை நான் பார்க்கும்போது கொஞ் சமும் கூச்சலில்லாமல் அவரவர்கள் அவரவர்களின் வேலையைப் பார்த்த போது எனக்கு அது மிகவும் கவர்ச்சி கரமான முறையாகத் தோன்றியது.

கே:—சில நாட்களுக்கு முன் ரஷ்யா வுக்குச் சென்றிருந்தீர்களே, அவ்விரு நாடுகளிலும், படத் தொழிலில் நீங்கள் காணும் ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

ப:—இது விஷயத்தில் மிகவும் விஸ் தாரமாகச் சொன்னால் அதிக நேரம் வேண்டியிருக்கும். வேண்டுமானால் முக்கிய அம்சங்களை மட்டும் சொல்லி விடுகிறேன். ரஷ்யாவில் சினிமா ஒரு வியாபாரம் அல்ல. அங்கே, நமது நாட் டில் கல்வி இலாகா, போலீஸ் இலாகா, சர்க்கார் இலாகாக்கள் இருப்பதுபோல் சினிமாவும் ஒரு தனி இலாகா வாக சர்க்காரால் நடத்தப்படு கிறது. சர்க்காருடைய முக்கிய நோக்கம், சினிமா உற்சாகத்தை ஊட்டுவதுடன், சினிமா படத்தி னால் பொதுமக்களுக்கு அடிப் படையாக ஒரு நல்ல அறிவும், பெருந்தன மனப்பான்மையும் உயர்ந்த பண்பும் பெருகவேண்டு மென்ற நோக்கத்துடன் படம் தயாரிக்கப்படுகின்றன. அதனால் படத்தினால் வருமானம் வர வேண்டும், லாபம் எடுக்கவேண் டும் என்ற முதல் நோக்கம் அல் லது முக்கிய நோக்கம் அவர்க ளுக்கு இல்லை. அமெரிக்காவி லோ, சினிமா வியாபார முறை யில் உற்பத்தி செய்யப்படுகிறது. பொது ஜனங்களுக்கு உற்சாக மூட்டுவதையே முக்கிய நோக்க மாகக் கொண்டு அதற்கு வேண் டிய அளவில் உற்பத்து கையா ளப்படுகிறது. ரஷ்யாவிலோ, நடிகர், நடிகைகள் ஐந்து வருஷத் துக்கு அதற்கென்று ஏற்படுத் தப்பட்டிருக்கும் இன்ஸ்டிடியூட் கள், காலேஜ்கள், இவைகளில் பயிற்சி பெற்றுத்தான் ஒரு நட்சத்திரமாகவோ, டெக்னீஷியனாகவோ ஆக முடியும். அமெ ரிக்காவிலோ அவ்விதமான கட்டுப்பாடு கள் இல்லை.

கே:—அமெரிக்காவில் சினிமாக் கொட் டகைகள், திறந்த வெளி அரங்கங்கள், நாடக மேடைகள், கச்சேரி மண்டபங் கள், இவைகளையெல்லாம் பற்றி உங் கள் அபிப்பிராயம் என்ன?

ப:—அமெரிக்காவில் சினிமாக் கொட் டகைகள் நம் நாட்டைக் காட்டிலும் அதிக செலவில் கட்டப்பட்டு இருக்கின் றன. அனேகமாக எல்லாக் கொட்டகை களிலும்—ஏர் கண்டிஷனிங்—அதாவது நிரந்தர குளிர்ந்த காற்று வீசும் யந்திரம் அமைக்கப் பட்டிருக்கிறது. 'டிரைவிங் தியேட்டர்' என்று பல நூதன சினிமாக் கள் இருக்கின்றன. அதாவது திறந்த வெளியில் சுமார் ஆறு நூறு மோட்டார் கார்கள் திரைக்கு முன்னால் அணியாக



ராமசர்மா பிடில் வாசிக்கும் காட்சியை "என் வீடு" படத் தில் நிறையப் பார்க்கலாமாம்.

நின்று காருக்குள் உட்கார்ந்தவாறே பொது ஜனங்கள் படங்களைப் பார்ப்பதற்கு இந்த தியேட்டர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக காரிலுள்ள வயதானவர்களுக்கு மாத்திரம் டிக்கட் வசூலிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது. ஒரு கார் வந்து நின்றவுடன் அதற்கு தனி 'லௌட் ஸ்பீக்கர்' கொடுக்கப்படுகிறது. சப்தத்தை உயர்த்தியோ, தாழ்த்தியோ கொள்ள காரில் இருப்பவர்களால் முடியும். திரை சுமார் அறுபது அடி நீளம், ஐம்பத்தைந்து அடி அகலம், பதினறு அடி உயரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கழுத்து நோகாமல், உடல் சிரமம் அடையாமல், காரில் உட்கார்ந்தபடியே படத்தை அனுபவிக்கலாம். எச்சமயம் வேண்டு மானாலும் கார் வெளியில் போகும்படியாக சௌவுகரியமான நடைபாதைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. 'ஹாலிவுட் பவுல்' என்ற ஒரு பிரம்மாண்டமான திறந்த வெளி அரங்கம் ஒன்று நாடகங்களுக்காகவும், பாலே நடனம் முதலிய நிகழ்ச்சிகளுக்காகவும் கட்டப் பட்டிருக்கிறது. ஒரே சமயத்தில் முப்பதாயிரம் ஜனங்கள் மிகவும் சௌகரியமாக ஆசனங்களில் அமர்ந்து பார்க்க வசதி செய்திருக்கிறார்கள். ஒரு மலையடிவாரத்தில் மேல் உச்சியை நோக்கி மேடையை அமைத்திருக்கிறார்கள். மலைச்சரிவை அழகாக செதுக்கி, அதை ஒரு காலரிபோல் உபயோகித்து ஆசனங்களைக் கட்டியிருக்கிறார்கள். இது மிகவும் அழகாக இருக்கிறது. எல்லா ஊர்களிலும், முக்கிய ஸ்தலங்களிலும், நாடகத்துக்கு என்றும், நாட்டியத்துக்கு என்றும், பாட்டுக் கச்சேரிக் கென்றும் தனித் தனி அரங்கங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; இந்த அரங்கங்கள் எல்லாவற்றிற்குமே பொது ஜனங்கள் அமோக ஆதரவளித்து வருகிறார்கள். சிற்சில இடங்களில்—'ஐஸ் ஷோஸ்'— என்று இரு நூறு அடி நீளம், நூற்றி ஐம்பது அடி அகலத்தில் ஐஸ் கட்டியிலேயே மேடை போட்டு, அதன்பேரில் நூற்றுக்கணக்கான பெண்கள் ஸ்கேட்டிங் நடனம், பலவித வர்ண உடைகளை அணிந்து வெகு அழகாகவும், உத்ஸாகமாகவும் ஆடிக் காண்பிக்கிறார்கள். பத்தாயிரம் அல்லது பதினையாயிரம் ஜனங்கள் காலரியில் உட்கார்ந்து கொண்டு மிகவும் சௌகரியமாக இந்தக் காட்சியைப் பார்க்க ஏதுக்கள் செய்திருக்கிறார்கள். பல மேடைகளில் முக்கியமான அம்சம் என்னவென்றால் கலர் விளக்குகள் எவ்விடத்திலிருந்து பிரகாசிக்கிறது என்பதை நாம் அறிய முடியாத வண்ணம் அழகாக அமைத்து இருக்கிறார்கள். காட்சி ஜோடனைகள் ஒரு விநாடியில் மாறுதல் அடைகின்றன. படுதாக்கள் மின்சார வசதியினால் ஏற்றப்படுகின்றன, இறக்கப் படுகின்றன. மேடைகளில் மைக்ரோ போன்களை உபயோகிக்கும் விதம் நூதனமாக இருக்கிறது. மைக்ரோபோன்கள் பார்ப்போர் கண்களுக்குத் தென்படவே தென்படாது. நாடக மேடை காட்சிகள் மிகவும் தத்ரூபமாக ஜோடித்து காண்பிக்கப் படுகின்றன. உதாரணமாக ஒரு நாடகத்தில் மேடையின் மீதே 'ஸ்விம்மிங் பூல்' அதாவது நீச்சல் கற்றுக் கொள்ளும் இடம் காண்பித்தார்கள். தத்ரூப பெண்கள் நீஞ்சுவது போலவே இருந்தது. பளபள வென்று நீல நிறத்தில் தண்ணீர் தெரிந்தது. நூதன நவீன முறைகள் நாடக மேடையில் கையாளப் படுவதால் நாடகங்களும், நடனங்களும் ஒரு பிரமிக்கத்தக்க, பிரமாத உன்னத நிலையை அடைந்து இருக்கின்றன வென்றே சொல்லலாம்.


நீங்கள்
வாங்கிவிட்டீர்களா?

1953-ம் வருஷத்திய

# குண்டூசி காலண்டர்

●

ஆறு வர்ணப்படங்கள் கொண்டது.

●

விலை 12 அணா

தபால் செலவு உள்பட ரூ. 1.

# கிராம மோஹினி-ரத்னா!



ராஜேஸ்வரி

மாதரு பூகம

**சிறுகதை**

சிவகுமார் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவனாய் அந்த வாய்க்கால் கரையில் உட்கார்ந்து கொண்டு இருந்தான். திடீரென்று தண்ணீர் மொள்ளும் சப்தம் அவன் சிந்தனையைக் கலைக்கவே, திரும்பிப் பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான். வசீகரமான ஒரு முகம் அவன் கண்களை அப்படிக் கவர்ந்தது. அந்த முகத்தின் சொந்தக்காரி விசேஷமாய் ஒன்றும் அலங்கரித்துக் கொண்டிருக்கவில்லை. சாதாரண வாயில் சேலையும், சில அவசியமான ஆபரணங்களுமே அவளால் அழகு பெற்றன. சிவகுமார், பெண்களை விழுங்குங்குவதைப் போல் பார்க்கும் இனத்தைச் சேர்ந்தவனல்ல. அத்துடனில்லாமல் பெண் இனத்தைப் பற்றி அருவருப்பாக நினைப்பவன். காரணம், அவன் ஒரு புகழ் பெற்ற சினிமா நடிகன். ஆச்சரியப் படுகிறீர்களா?

சிவகுமாருக்குச் சிறு பிராயத்திலேயே தந்தை இறந்து விட்டார். அவர் தாயார் மூன்றாவது பாரம் வரை பிள்ளையை சிரமப் பட்டுப் படிக்க வைத்தாள். மேலே படிக்க, சம்பளம் கட்ட முடியாமல் திண்டாடிப் போனாள். சிவகுமார், தாயார் படும் கஷ்டத்தை உணர்ந்தான். மேலே படிக்க முடியாதென்று மறுத்து விட்டு, வேலை தேட ஆரம்பித்தான். அதிர்ஷ்டவசமாய் ஒரு சினிமாக் கம்பெனி முதலாளியின் கண்களில் தென்பட்டான். சிவகுமாரின் பால் வடியும் முகம் டைரெக்டரின் மனதைக் கவரவே, மாஸ்டர் எஸ். குமார் ஆனான். சினிமா உலகில் பிரவேசித்த முகூர்த்தம் நல்லதாயிருந்த காரணமோ, திறமையோ! எஸ். குமாரின் பெயர் பிரபலமடைந்தது. குமார் நடிக்காத படங்களை எண்ணி விடலாம் என்று ஏற்பட்டது. மாஸ்டர் குமார், ஸ்ரீ. எஸ். குமார் ஆனார். கீர்த்தியும் மேலோங்கிற்று. ஆனால் பாவம்! குமாரின் அன்னை மகனின் பிரபாவங்களை அநுபவியாமல் கண்ணால் கண்டதுடன், திருப்தி அடைந்தவளாய் கண்ணை மூடி விட்டாள்.

குமார் நடிகனாக இருந்தும், தூய வாழ்க்கை நடத்தி வந்தான். அழகிய பெண் நடிகைகளுடன், பழகியதாலோ என்னவோ, குமார் பெண்களையே வெறுத்தான். சினிமா உலகில்தான் செயற்கை அழகும், பகட்டான அலங்காரமும் என்றால் வெளி உலக மனிதர்களிடமுமா? அதில் பாதி திட்டம் மேக்கப்புடன் திகழவேண்டுமா? அதிலும் இந்தக் குடும்பப் பெண்களும் சினிமா மோகத்தி லாழ்ந்து, தங்கள் இயற்கை அழகைக் கெடுத்துக் கொண்டு, செயற்கை அழகு செய்து கொள்வது அவனுக்குச் சகிக்கவில்லை. 'ஷூட்டிங்'கின்போது காதலியுடன் ''பவளச் செவ்வாய்'', ''விற்புருவங்கள்'', ''முத்துப் பற்கள்'' என்று கொஞ்சி விட்டு, வேஷம் கலைத்த பிறகு பார்த்தால் பவள உதடுகள் 'லிப்ஸ்டிக்'கின் தயவால் வெடித்துப் பாளமாய் உலர்ந்திருக்கும். முத்துப் பல் வரிசைகள் பெட்டியில் பத்திரமாயிருக்க, விற்புருவங்களோ இருந்த இடமே தெரியாது. உலகமே மாயை என்பார்கள்!

சினிமா உலகம் இருக்கிறதே, அது மாயையிலும் மாயை என்பது குமாரின் எண்ணம். போலி அழகையும், வெளிப் பகட்டையும் கண்டு அலுத்துப் போன குமார் கொஞ்ச காலம் ஒய்வெடுத்துக் கொள்ளப் போவதாய் ரஸிகர்களுக்கு அறிவித்து விட்டுத் தன் தாயாரின் கிராமத்துக்கு வந்தான். அது சிறிய குக்கிராமம். அப்பாடா! நாகரீகமெனும் பூச்சால், தன் குறைகளை நிறைவாய்க் காட்டி மயக்கும் பெண்களையும். பகட்டாகப் பேசும் ஆண்களையும் இங்கே

பார்க்காமலிருக்கலாமென்று சந்தோஷித்தான். பொய்ப் புன்னகையும், வெளிப்பூச்சுமுள்ள நாகரீக நாரீமணிகளைக் கண்டு வெறுத்துப்போன அவன் மனதிற்கு, கபடமற்று, வெகுளியாய், கலகலவெனப் பேசி நகைக்கும் கிராமாந்திரப் பெண்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியாகத் தோற்றமளித்தனர். அவன் தங்கியிருந்தது அவன் தாயின் அத்தை வீடு. அத்தைக் கிழவிக்கு மக்களே யில்லை. பட்டணத்து மருமான் தன்னை மதித்துத் தன் வீட்டுக்கு வந்ததை பாக்கியமாக நினைத்து ஆசார உபசாரங்கள் செய்தாள். அத்தையின் அன்பும், கிராமத்தின் எளிய, இனிய வாழ்க்கையும் சிவகுமாருக்கு மிகவும் பிடித்தன.

வாய்க்காலில் தண்ணீர் எடுக்க வந்த பெண் இந்த பீஷ்மரின் உள்ளத்தை எப்படியோ கவர்ந்து விட்டாள். அவள் அழகைவிட அடக்கமே அவனைக் கவர்ந்தது. ஒவ்வொரு அங்கத்தையும் விலையுயர்ந்த சரக்குகளால் அலங்கரித்துக் கொள்ளும் அப்ஸரஸுகள், இந்த கிராம யோகினியின் காலழகு பெறுவார்களா என்று எண்ணமிட்டான். அத்தையிடம் கேட்டு அப் பெண்ணைப் பற்றிய விவரங்களை மெதுவாய் அறிந்துக் கொண்டான். ரத்னாவுக்கு பெற்றோர்களோ, உறவினரோ கிடையாதென்றும், பணம் மட்டும் ஏராளமாயிருப்பதாயும், சென்னையிலிருந்தவள் கிராம வாசத்தை விரும்பி வந்திருப்பதாயும், டாம்பீகமும், கர்வமுமற்ற பெண் என்றும் அத்தை அறிவித்தாள். நாளா வட்டத்தில் சிவகுமாரும், ரத்னாவும் பரிச்சயமாகி நட்புக் கொண்டனர். குமாருக்கு ரத்னாவிடம் பழகப் பழக, அவள் பாலுள்ள நன்மதிப்பு அதிகரித்தது. ரத்னாவும் சிவகுமாரைக் காதலித்தாள். அவன் குணமும், பண்பும் அவளைக் கவர்ந்தன. குமார்தான் நடிகன் என்பதை அவளிடம் தெரிவிக்க வில்லை. அத்தைக்கும், ரத்னாவிடம் இவ் விஷயத்தைச் சொல்லக் கூடாது என்று உத்தரவு போட்டிருந்தான். இருவர் நட்பும் அதிகரித்து வந்தது. அத்தை பழங்கால மனுஷியானாலும் இங்கிதம் தெரிந்தவள்.

ஒருநாள் குமாரும், ரத்னாவும் பேசிக் கொண்டிருந்த போது அங்கு வந்த அத்தை ரத்னாவின் அருகில் நின்றுகொண்டாள். "சிவகுமார்! பெண் பக்கம் உறவாய்ப் பேச இவளுக்கு யாருமில்லை. அதனால் நான் கேட்கிறேன். தங்கமான குணமும், அழகும் கொண்ட இவளை, விவாகம் செய்து கொள்ள உனக்குச் சம்மதமா !" என்று கேட்டாள் அத்தை. குமார் புன்னகையுடன், நாடக பாணியில்—தவறு—சினிமா பாணியில் "ஆகா ! மனப்பூர்வமாய் சம்மதிக்கிறேன். நீ இத்தனை வர்ணிக்கும் இந்தத் தங்கத்தை அடைய நான் என்ன பாக்கியம் செய்



தேனோ! மேலும், தங்கம் விற்கிற விலையில் வலிய வரும் தங்கத்தை நழுவ விடுவானோ எவனாவது!" என்றான்.

"நாணத்துடன் நின்ற ரத்னாவிடம், "ஏனம்மா இவன் பக்கமும் நானே தான் பேச வேண்டும்! குமாரை உனக்குப் பிடித்திருக்கிறதா? அவனுடன் பழகிய உனக்கு அவன் குணத்தைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. உன் அபிப்ராயம் என்ன" என்று கேட்டாள் அத்தை. ரத்னா, நாணமும், சந்தோஷமும் மேலிட பேச நாவெழாது நின்றாள்.

பிரசித்தி பெற்ற நடிகன் சிவகுமாரின் திருமணம் அக்கிராமத்தில் ஆடம்பரமின்றி நடந்தேறியது. அங்குள்ள ஏழை ஜனங்கள் வயிறார உணவுண்டு, புது ஆடைகள் அளித்த குமாரையும், ரத்னாவையும் மனமாற வாழ்த்தினர். அத்தை, தம்பதியைக் கண்டு பூரித்துப் போனாள். குமார், தான் கனவு கண்டுகொண்டிருந்த எளிய, இன்ப வாழ்க்கையைத் தன் மனதுக்கிசைந்த மனைவியோடு தொடங்கினான்.

ஒரு நாள் ரத்னா வீட்டின் பின்புறத்தில் ஏதோ வேலையாக இருந்தாள். அவளிடம் ஏதோ சாமான் கேட்க வந்த குமார், ரத்னாவை அங்கே காணாமல் தானே எடுத்துக் கொள்ளலாமென்று அவள் பெட்டியைத் திறந்தான். மேலாக வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதம் அவன் கண்களைக் கவரவே, பிரமித்துப் போய் அதைப் படிக்கலானான்.

"அன்புள்ள ரத்னமாலா,

உன் திருமணம் நடந்த செய்தி உன் கடிதம் மூலம் அறிந்தேன். திருமணத்துக்கு நீ அழைக்காதது பற்றி கோபம் வந்தாலும், காரணங்களைப் படித்த பிறகு உன்னை மன்னித்து விட்டேன். பிரபலமடைந்த ரத்னமாலா, குக்கிராமத்தில் வசிப்பதும், எளிய வாழ்க்கை நடத்துவதும் ஆச்சரியமே! மாலா, நீ விசித்திரமானவள். ஆண்களையே வெறுத்த நீ, அதிலும் அதிகமாய் நடிகர்களை வெறுத்த நீ, கடைசியில் பிரபல நடிகர் எஸ். குமாரை மணந்து இன்ப வாழ்க்கை நடத்துவது ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. நீ அவருடன் நடிக்காதிருந்தது நல்லதாயிற்று. இல்லையேல், நீ எழுதியிருந்தபடி, உன்னைப் பார்த்ததும், நீதான் பிரசித்திபெற்ற நடிகை "ரத்னமாலா" என்று அறிந்து உன்னையும் ஒரு மினுக்கும் நக்ஷத்திரமாய்க் கருதி, வெறுத்திருப்பாரென்பது நிச்சயம். ஆனால், அவர் உன்னை யாரென்று தெரிந்து கொள்ளவில்லையென்பது ஆச்சரியமே! பிரசித்தி பெற்ற இரு நடிகர்களின் திருமணம், ரஸிகர்களை ஏமாற்றி விட்டு, குக்கிராமத்தில் எளிய ஜனங்களின் மத்தியில் நடந்தேறி விட்டது. இது உங்கள் ரஸிகர்களால் மன்னிக்க முடியாத குற்றம். நான் உங்கள் அன்பையும், நம் நட்பை






யும் கருதி மன்னிக்கிறேன். வாழ்க ரத்ன குமார்! அன்புள்ள, நளினு."

சிவகுமார் கடிதம் நழுவியதையும் கவனியாமல், திகைத்துப்போய் நின்று கொண்டிருந்தான். அவன் தோள்மேல் மென்மையான கரம் ஒன்று விழுந்தது. "நான் உங்களை ஏமாற்றி விட்டேன் என்று கோபமா?" எனக் கொஞ்சிய படி கேட்டாள் ரத்னா.

"கோபம் மட்டுமா? பொறாமை கூடத் தான். நான் உயர்தர நடிகனென்று பெருமை கொண்டிருந்தேன். ஒரு கள்ளி என்னை யாரென்று தெரிந்து கொண்டதுடன், தன்னைப் பற்றி மட்டும் கூறாமல், நான் கூறிய பொய்யை நம்புவது போலவும் நடித்து, என்னை ஏமாற்றி விட்டாள். என்னைவிட உயர்தர நடிகையான அவளிடம் நான் பொறாமை கொண்டது தவறா?" என்று கேட்டான் குமார்!

புன்னகையுடன் தலை நிமிர்ந்த ரத்னமாலா, சிவகுமார் அன்பும், பெருமையும் கொண்ட பார்வையுடன் தன்னையே நோக்குவதைக் கண்டு வெட்கித் தலை குனிந்தாள்.

---

### "மிஸ்டர் ஸம்பத்"

ஜெமினியின் "மிஸ்டர் ஸம்பத்" ஹிந்திப் படம் சென்ற மாதம் 18ம் தேதி கல்கத்தாவிலும், 25ம் தேதி பம்பாயிலும் திரையிடப்பட்டு அமோக ஆதரவு பெற்று வருகிறது. தமிழில் வந்த "மிஸ் மாலினி"யே ஹிந்தியில் "மிஸ்டர் ஸம்பத்"தாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது. மோதிலால், பத்மினி, வனஜா ஆகியோர் முக்கிய பாகங்களில் நடித்துள்ள படம் இது.

### "யூகிவாரிசு" தமிழ்ப் படம்

சென்ற மாதம் 25ம் தேதி முதல் "யூகிவாரிசு" தமிழ் விளக்க உரையுடன், தமிழ் நாட்டின் பல பாகங்களிலும், சென்னை நகரில் இரு தியேட்டர்களிலும் திரையிடப் பட்டுள்ளது. தமிழ் விளக்க உரை ஜெமினி ஸ்டுடியோவினரால் சேர்க்கப்பட்டு, அவர்களது வெளியீடாக திரையிடப் பட்டிருக்கிறது இந்த ஜப்பானியப் படம். இப் படத்தின் பிரத்தியேகக் காட்சியொன்று ஜெமினி ஸ்டுடியோவில் சென்ற மாதம் 24ந் தேதி பத்திரிகாசிரியர்களுக்கென நடைபெற்றது.

# வாழ்க்கை வர்ணனை

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

பாஷையில். அந்த நாடகங்களுள் 'கௌதம புத்தர்', 'விக்கிரம சசிகலா', 'முதுகள முதுவே' (கிழவன் கல்யாணம்) ஆகிய மூன்றும் மிக நன்ருய் இருந்தமையால் அவை பொதுஜன ஆதரவை அதிகமாகப் பெற்றனவாம்.

அந்த சமயத்தில் தான் பிரபல வயலின் வித்வான் மைசூர் சௌடய்யா தம் சொந்த முயற்சியாக "வாணி" என்ற கன்னடப் படத்தைத் தயாரிக்க முற்பட்டிருந்தார். அவர் மேற்கூறிய நாடகங்களில் ஒன்றையும்—அதில் குறிப்பாக பண்டரி பாயின் நடிப்புத் திறமையையும் அழகிய முகத் தோற்றத்தையும் பார்த்ததும், அவரை தம் படத்தில் நடிக்க வைத்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார்; அதன் படியே அவர் செய்தும் விட்டார். பண்டரி பாய் நாடக உலகிலிருந்து முதல் தடவையாக சினிமா உலகில் புகுந்து, "வாணி" படத்தில் ஒரு சிறு பாத்திர மேற்று — சௌடய்யாவின் குருவினுடைய புத்திரியாக நடித்தார். அது முடிந்ததும், அவர் மேலும் மேலும் படங்களில் நடிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. பேசாமல் தம் வழக்கமான— காலக்ஷேபத் தொழிலேயே மீண்டும் ஏற்றுக் கொண்டார்.



சிறுமி பண்டரிபாய்

இப்படியிருக்கையில், மீண்டும் 1944ம் வருஷத்தில் சினிமாவில் நடிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. அவருக்கு "ஹரிதாஸ்" படத்தில் ஒரு துக்கடா வேஷம் கிடைத்தது. அப்படத்தில் அவருக்குக் கிடைத்த வேஷமானது 'மேலும் படங்களில் நடிக்க வேண்டும்' என்ற உத்ஸாகத்தை ஏற்படுத்துவதற்குப் பதில், 'இனி சினிமாவே வேண்டாம்' என்ற எண்ணத்தை அவர் மனதில் புதிய வைத்து விட்டது. அதனுல் அவர் கதா காலக்ஷேபம் செய்வதிலேயே கவனத்தைச் செலுத்தலானுர். பிரபல கன்னட—தமிழ் நடிகரான ஹொன்னப்ப பாகவதர் 1947ம் வருஷத்தில் சுரபி பிக்சர்ஸை ஆரம்பித்து, "பக்த கும்பரா" என்ற கன்னடப் படத்தைத் தயாரிக்க முற்பட்டார். அவர் பண்டரியைக் கதா காலக்ஷேபங்களில் சந்தித்துவிட்டு, அவரை தம் படத்தில் கதாநாயகி வேஷத்திற்கென அழைத்து வந்தார். ஆனுல் முடிவில், பண்டரிக்கு கிடைத்ததென்னவோ ஒரு சிறு வேஷம்தான்.


"பக்த கும்பரா"வில் அவரது வேஷத்தைப் பற்றி பிரமாதமாகச் சொல்லும்படி இல்லையென்ருலும், "பண்டரி நல்ல முக அழகு உடையவர்; எதிர் காலத்தில் பிரகாசிக்கக் கூடியவர்" என்ற எண்ணத்தை மட்டும் சினிமா உலகில் ஏற்படுத்தி வைத்தது. மற்றவர்கள் இந்த எண்ணத்தை மனதில் மட்டும் வைத்துக் கொண்டனர். ஆனுல் ஏவி. மெய்யப்பன் தைரியமாக பண்டரியை மாதச் சம்பளத்தில் இரண்டு வருஷ காலத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அந்த சமயத்தில், பண்டரிக்கு துளிக் கூட தமிழ் பேசத் தெரியாது. ஏவி. எம். ஒப்பந்தம் அவருக்கு உத்ஸாகமூட்டியதால், பிரபல ஹாஸ்ய நடிகர் பி. டி. சம்பந்தத்தினிடம் அவர் தமிழ் பாஷையைப் பேச மட்டுமன்றி, எழுதப் படிக்கவும் கற்றுக் கொண்டார்.

"வேதாள உலகம்" படத்தில் பண்டரி காளி வேஷத்தில் நடித்தார். "வாழ்க்கை" படத்தில் மீனுக்ஷியாக இவர் தான் நடிப்பதாக இருந்தது. ஆனுல், கடைசி நிமிஷத்தில் அந்த யோசனை மாறிவிட்டது. அத்துடன் அவர் ஏவி. எம்.முடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தமும் முடிந்துவிட்டது. அதன்பிறகு, அவரிடம் புதைந்து கிடந்த திறமையை

அறிந்து, யாரும் அவரை ஒப்பந்தம் செய்து கொள்ளத் துணியவில்லை. பி. புல்லய்யா மட்டும் அவரை "தூக்குத் தூக்கி" தமிழ்ப் படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால், அந்தப் படம் தயாரிக்கப் படவேயில்லை. அதனால் அவர் வாழ்க்கையில் மிகுந்த கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியதாயிற்று.

பண்டரியின் ஜாதகத்தில் கிரஹங்கள் எப்படி அமைந்திருக்கிறதோ எனக்குத் தெரியாது. தெரிந்தாலும், அதைப் பரிசீலனை செய்வதற்கு எனக்கு ஜோதிடம் தெரியாது. இருந்த போதிலும், நான் யூகத்தின் மூலம் ஒன்று சொல்ல முடியும். அதாவது, ஏழரை நாட்டுச் சனி என்பார்களே அந்தச் சனி பகவான் பண்டரியின் வாழ்க்கையில் 1942ம் வருஷம் முதல் தம் கை வரிசையைக் காட்டியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மேலும், பாருங்கள், அவர் 1948ல் "ராஜா விக்கிரமா" கன்னட-தமிழ்ப் படங்களில் நடிக்க முற்பட்டார். இப் படங்கள் சனி பகவான் சம்பந்தப்பட்ட கதையைக் கொண்டவை. 1249ம் வருஷத்தில் அவரை ஜூபிடர் பிக்சர்ஸார் மூன்று வருஷ காலத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டதைப் பார்க்கையில், சனி பகவான் சம்பந்தமான படங்களில் நடிக்க முற்பட்டதுமே அவர் சாந்தி அடைந்து, தம் பார்வையை வாபஸ் பெற்றுக் கொண்ட மாதிரி தோன்றுகிறது அல்லவா!



பண்டரி பாயின் தகப்பனார்

ஜூபிடரில் அவர் முதன் முதலில் நடித்த படம் "மர்ம யோகி". அது முடிந்ததும், ஏவி. எம். அவரை "பஹார்" ஹிந்திப் படத்தில் 'பத்மினி' என்ற பெயருடன் நடிக்கச் செய்து, அவரை ஒரு அகில இந்திய நடிகையாக மாற்றி வைத்தார். இதுவே அவரது எதிர் கால வாழ்விற்கு — ஏவி. எம்.மின் அதிர்ஷ்டக் கையால்— ஆரம்ப விழா நடத்தி வைத்தது போலிருக்கிறது.

"பஹார்" படத்தில் அவரது சிறந்த நடிப்பு, வெளிவந்து வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கும் "பராசக்தி" படத்தில் முக்கிய வேஷத்தை அவருக்கு வாங்கிக் கொடுத்தது. அடுத்து வரும் படங்கள் மூலம் அவர் ஒரு முன்னணி நக்ஷத்திரம் ஆகிவிடுவார் என்ற நம்பிக்கையை இப் படம் உண்டு பண்ணுகிறது.

பண்டரி பாய் தற்போது பனிரண்டு படங்களுக்கு ஒப்பந்தமாகி, நடித்து வருவதே மேற்குறிப்பிட்ட நம்பிக்கையை உறுதிப் படுத்துவதாக உள்ளது. அவர் நடித்துள்ள ஏவி. எம்.மின் "செல்லப் பிள்ளை", (தமிழ்-தெலுங்கு) ஜூபிடரின் "மனிதன்", குப்பியின் "குணஸாகரி", (கன்னடம்) "சோதனை" (தமிழ்) ஆகிய படங்கள் விரைவில் வெளிவர விருக்கின்றன. மற்றும், "குமாஸ்தா" (தமிழ்-தெலுங்கு), "மனோஹரா" (தமிழ், தெலுங்கு), "பூங்கோதை" (தமிழ்), "பரதேசி" (தெலுங்கு) "வாழப் பிறந்தவள்", "கண்கள்" ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

பண்டரிக்கு பாடத் தெரியும்; ஆனால் அவர் நடித்த படம் எதிலும் பாடவில்லை. சில மாதங்களுக்கு முன் எஸ். வி. சகஸ்ரநாமம் தயாரித்து அரங்கேற்றிய "கண்கள்" தமிழ் நாடகத்தில் பண்டரி பாய் நடித்தார். ஆனால், சினிமாப் படங்களில் நடித்து, ஒரு உன்னத நக்ஷத்திரமாக ஆகவேண்டும் என்பதே தற்போது அவரது லக்ஷியமாக இருக்கிறது. "எனது சினிமா வாழ்க்கையில்—மிகவும் கஷ்டப்பட்ட காலத்தில் கைதூக்கிவிட்டு ஆதரவளித்த ஏவி. மெய்யப்பனையும், எச். எல். சிம்ஹாவையும் மறக்கவே முடியாது" என்று அவர் நன்றியுடன் கூறுகிறார்.

பண்டரியின் தாய் பாஷை **கொங்கிணி**. இது தவிர அவருக்கு கன்னடம், தெலுங்கு, தமிழ், ஹிந்தி, மராத்தி ஆகிய பாஷைகள் தெரியும். பல பாஷைப் படங்களைப் பார்ப்பதையே அவர் பொழுது போக்காகக் கொண்டிருக்கிறார். அவருக்கு நன்றாக சமைக்கத் தெரியுமாம். ஆனால், அதற்கெல்லாம் இனிமேல் சினிமா உலகம் அவ

காசம் அளிக்காது என் பது நிச்சயம்.

சுமார் ஐந்தடி உயர மும், பொன்னிற மேனி யும், சுருட்டைத் தலை மயிர் அலங்கரிக்கும்—அழகும் கவர்ச்சியும் கூடிய முகமும் கொண்டவரான பண்டரி பாய் தெய்வ பக்தி மிகுந்தவராய் காணப்படுகிறார். அதோடு அகம்பாவ மின்றி, சகஜமாகப் பேசும் சுபாவத்தையும் அவர் பெற்றிருக்கிறார்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று சொல்லுவார்களல்லவா? அது உண்மை. அடுத்த தை பிறந்தால், பண்டரியின் விட்டுச் சாமான்கள் கோடம்பாக்கத்திலிருந்து— தியாகராய நகரில் அவர் வாங்கியிருக்கும் பங்களாவுக்குச் செல்வதற்கு—வழி பிறக்கப் போகிறது. கிரகப் பிரவேசம் நடந்தால் நான் உங்களுக்கு கட்டாயம் தெரிவிக்கிறேன்.



தமக்கை பண்டரி பாயும், தங்கை மைனாவதியும்

---

## மைலாப்பூரில் புதிய தியேட்டர்

மைலாப்பூரில் (லஸ்) ''காமதேனு' என்ற புதிய சினிமா தியேட்டரை பிரதம நீதிபதி ஸ்ரீ. ராஜமன்னார் சென்ற மாதம் 11ம் தேதி திறந்து வைத்தார். விழாவுக்குத் தொழில் மந்திரி டாக்டர் யு. கிருஷ்ண ராவ் தலைமை வகித்தார். ஹைகோர்ட் நீதிபதிகள், மாஜிஸ்டிரேட்டுகள், அதிகாரிகள், நகர சபை அங்கத்தினர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் முதலியோர் ஏராளமாய் வந்திருந்தனர். தியேட்டரின் அதிபர் ஸ்ரீ. எஎல். ஏஆர். அளகப்ப செட்டியார் எல்லோரையும் வரவேற்றார். 'அதிபருக்கும் ரஸிகர்களுக்கும் இந்தத் தியேட்டர் காமதேனுவாக விளங்கட்டும்' என்று பிரதம நீதிபதி சொன்னார். அவர் மேலும் கூறியதாவது; 'சினிமாவுக்குப் போவது தவறு; கூடாது என்றெல்லாம் இக் காலத்தில் கூறுவது பொருந்தாது. நல்ல படங்கள் மக்களுக்கு அறிவூட்டும். கெட்ட படங்களால் தீமை விளையும். இதைத் தான் ராஜாஜி ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டார் என்று நினைக்கிறேன். மக்களுக்கு அறிவூட்ட சினிமாவை உபயோகிக்க முடியும்.''

ராஜாஜியின் கருத்துக்குச் சரியான விளக்கம் கொடுத்ததற்காக பிரதம நீதிபதியை மந்திரி கிருஷ்ணராவ் பாராட்டினார்: ''தியேட்டர்கள் அல்லது சினிமாவை முதல் மந்திரி எதிர்க்கவில்லை, மோசமான படங்களையே அவர் ஆட்சேபிக்கிறார். நல்ல நீதிகளைப் போதிக்கக் கூடிய படங்களை அவர் ஆதரிக்கிறார். படம் பார்ப்பதால் ஒருவருக்கு மகிழ்ச்சி ஏற்படுவதுடன் ஒழுக்கமும் உயர வேண்டும்'' என்று டாக்டர் கிருஷ்ண ராவ் குறிப்பிட்டார். பிறகு ''சின்னமருமகள்'' என்ற தெலுங்குப் படம் காட்டப் பட்டது.

### பம்பாயில் உதவி நாடகம்

பம்பாய்—மாதுங்காவிலுள்ள ''கலா நிலையம்'' என்ற அமெச்சூர் நாடகக் கழகத்தினர் சென்ற மாதம் 6ம் தேதியன்று மாதுங்கா 'போதார் காலேஜ் ஹாலி'ல் ''ஒரு ரூபாய்'' என்ற நாடகத்தை நடித்தனர். இது, ஒரு பள்ளிக்கூட கட்டட உதவி நிதிக்காக நடத்தப் பட்டது.

நடிகர்கள் யாவரும் திறம்பட நடித்து, நாடகத்தை சிறப்பித்தனராம்.

# இது செய்தி

நடிகர்—டைரெக்டர் ஆர். நாகேந்திர ராவ். தம் சொந்தத்தில் ஸ்ரீ. ஆர். என். ஆர். பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். அவர் ஏவி. எம். ஸ்டுடியோவின் கூட்டுறவில், "ஜாதக பலன்" என்ற படத்தை தமிழ், கன்னடம் ஆகிய இரு பாஷைகளில் தயாரிக்கப் போகிறார். படங்களை அவரே டைரெக்ட் செய்வதுடன் முக்கியமான பாத்திரத்தில் அவர் நடிக்கவும் போகிறார். மற்றும் இப் படத்தில் நடிக்கவென கே. சாரங்கபாணியையும், சூர்யகலா என்ற புது முகத்தையும் அவர் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார். இப் படத்தின் கதை, வசனம், இவற்றை "பதி" என்பவர் எழுதி யிருக்கிறார்.

### ஏடி. எம் புரொடக்ஷன்ஸ்

சென்ற மாதம் 5ம் தேதி, ஏடி.எம் புரொடக்ஷன்ஸ் என்ற புது படக் கம்பெனியார் தங்களது முதல் படத்திற்கான ஆரம்ப பூஜையை நடத்தி வைத்தார்கள். வாஹினியில் நடைபெற்ற இந்த ஆரம்ப விழாவுக்கு ஏராளமான பட உலகப் பிரமுகர்களும் நடிகர்களும் பத்திரிகாசிரியர்களும் விஜயம் செய்திருந்தனர். டிஎஸ். பிஎல். பி. சிதம்பரம் செட்டியார் காமிராவை ஓட விட்டு ஆரம்பித்து வைத்தார். இவர்கள் ஆரம்பித்து நிறுத்திய "விதி" என்ற கதையைப் படமாக்குவார்கள் என்று தெரிகிறது. படத்தில் எம். கே. தியாகராஜ பாகவதர், பி. எஸ். சரோஜா இருவரும் பிரதம பாகங்களில் நடிப்பார்கள். படத்தை கே. சுப்ரமண்யம் டைரெக்ட் செய்வார்.

### பொங்கல் வெளியீடுகள்

இம் மாதம் 14ம் தேதி பொங்கல் திருநாளன்று நிச்சயமாக இரண்டு படங்கள் திரையிடப் படுகின்றன. அவைகளில், அவர் இந்தியா பிலிம்ஸாரது "என் வீடு" ஒன்றாகும். வி. நாகய்யாவின் டைரெக்ஷனில் தயாராகியுள்ள படம் இது. 'சத்தியமே ஜெயம்' என்ற கொள்கையைக் கொண்ட ஒரு பாங்கு மானேஜரது குடும்பத்தைப் பற்றியது படக் கதை. பாங்கு மானேஜராக வி. நாகய்யாவும், அவரது மனைவியாக (தாயாராக) டி. ஆர். ராஜகுமாரி நடித்திருக்கிறார். டி. ஆர். ராஜகுமாரி—நாகய்யா சேர்ந்து நடிக்கும் முதல் படம் இதுதான். குடும்பத்தைப் பல கஷ்டங்களுக்கும் ஆளாக்கும் வில்லனாக பாலய்யாவும், அவரது அபிமானப் பெண்ணாக வித்யாவதி என்ற புது நடிகையும் மற்றும் ராம சர்மா, கிரிஜா, கோபால கிருஷ்ணன் போன்ற பலர் நடிக்கின்றனர். இப் படத்தின் வசனங்களை "சாண்டில்யன்" எழுதி யிருக்கிறார்.

மற்றொரு படம் "பூங்கோதை"யாகும். அஞ்சலி பிக்சர்ஸின் தயாரிப்பான இப் படத்தை நேஷனல் பிக்சர்ஸார் வெளியிடுகின்றனர். "சம்சாரம்"—புகழ் எல். வி. பிரஸாத் இப் படத்தை டைரெக்ட் செய்திருக்கிறார். படத்தின் வசனங்களை 'சக்தி' கிருஷ்ணசாமி எழுதி யிருக்கிறார். இப் படத்தில் அஞ்சலியும்—நாகேஸ்வரராவும் வயதானவர்களாக திறம்பட நடித்திருக்கிறார்கள். சிவாஜி கணேசன், பண்டரி பாய், ரங்க ராவ், இவர்களும் வஸந்தா என்ற புது முகமும் இதில் நடித்திருக்கிறார்கள்.

### கலைக் காட்சி

சென்னையில் நடைபெற்று வரும், காங்கிரஸ் சுதேசி பொருட் காட்சியில், சென்ற மாதம் 25ம் தேதி, கலை—சித்திர பொருட்காட்சி சாலையை சென்னை கவர்னர் ஸ்ரீ. ஸ்ரீபிரகாசா ஆரம்பித்து வைத்தார். இந்த விழாவில் ஏராளமான சைத்ரீகர்களும், பத்திரிகாசிரியர்களும் கலந்து கொண்டார்கள். அனைவரும் காட்சி சாலைக்கு வந்துள்ள சித்திரங்களையும், சிலைகளையும் கண்டு மகிழ்ந்தனர்.

### லதா அறிவிக்கிறார்

இந்திய சங்கீதம் பற்றிய ஒரு படம் தயாரிக்கப்படுகிறது. அதில் பிரபல திரைக்கோகிலம் லதா மங்கேஷ்கர் பாடியிருப்பதுடன், ரஸிகளின் முக்கியமான சில கேள்விகளுக்கும் அப்படத்தின்மூலம் நேரில் பதில் அளிக்கிறார். இந்தப் படம் இம்மாத இறுதியில் பம்பாயில் திரையிடப்படும். ஆரம்ப தினத்தன்று பம்பாய் கவர்னர் தலைமை வகிக்க இசைந்திருக்கிறாராம். இப்படம் இந்தியாவின் எல்லா பாகங்களிலும் திரையிடப்படும்.

இப்படத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பெரும் பகுதியை, உபயோககரமான சங்கங்கள், ஸ்தாபனங்கள் ஆகியவைகளுக்கு அளிக்க லதா மங்கேஷ்கர் தீர்மானித்திருக்கிறார். அப்படி இப் படத்தின் மூலம் பயன் அடைய விரும்புவோர், ஸ்டாம்பு ஒட்டி விலாஸம் எழுதிய கவருடன், "டாபிக், 24, B, ஹமாம் தெரு, போர்ட், பம்பாய்-1" என்ற விலாஸத்திற்கு எழுதலாம்.

**நக்ஷத்திர கிரிக்கெட்**

சென்னை சினிமா நக்ஷத்திரங்களுக்கும் பம்பாய் சினிமா நக்ஷத்திரங்களுக்கும் இடையே இம்மாதம் 11-ந் தேதி சென்னையில் ஒரு கிரிக்கெட் "மாட்ச்" நடைபெறும். கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் இது நடைபெறும். சென்னை சினிமா டெக்னிஷியன்களின் க்ஷேம நிதிக்காகவும், பம்பாய் பிலிம் தொழிலாளருக்காகவும் இந்தப் போட்டியை தென்னிந்திய சினிமா டெக்னிஷியன்கள் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. நிதியில் ஒரு பகுதி தமிழ்நாட்டு புயல் நிவாரண நிதிக்கு வழங்கப்படும். சென்னை கவர்னர் ஸ்ரீ. ஸ்ரீபிரகாசா போஷகராக இருக்க இணங்கியுள்ளார். சென்னை கோஷ்டியில் பின் கண்டவர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது: வைஜயந்தி மாலா, குமாரி கமலா, லலிதா, பத்மினி, சூர்யகுமாரி, அஞ்சலி தேவி, பி. கே. சரஸ்வதி, கிருஷ்ண குமாரி, எஸ். பாலசந்தர், கணேஷ், ஸ்ரீராம், சகஸ்ரநாமம், டி.ஆர். ராமச் சந்திரன், ரங்கராவ், சிவாஜி கணேசன், சாரங்கபாணி, எம். ஜி. ராமசந்திரன், நாகேஸ்வர ராவ், சிவராவ், பம்பாய் கோஷ்டியில் பின்கண்டவர்கள் இருப்பர் எனத் தெரிகிறது:—ராஜ்கபூர், பிரேம்நாத், திலீப் குமார், பீனு ராய், நளினி ஜயவந்த், நிம்மி, நர்கீஸ், பேகம் பாரா, நூதன், யசோதரா கட்ஜு, மோத்திலால், தேவ் ஆனந்த், திவான் ஷாரர், ஜெய்ராஜ், கரன் திவான், ஆகா, ஓம் பிரகாஷ் முதலியோர். கிரிக்கெட் போட்டிக்கு முன்பு பிரபல தென்னிந்திய, வடஇந்திய சினிமா நக்ஷத்திரங்களின் அணிவகுப்பு நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ளும் நக்ஷத்திரங்களோடு, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், ஜி. வரலக்ஷ்மி, சோபனுசமர்த், துர்க்கா கோட்டே முதலியோரும் அணிவகுப்பில் கலந்து கொள்வர். ஸ்டேடியத்தில் மிட்டாய்கள், சாக்லெட்டுகள், முதலியவற்றை பிரபல நக்ஷத்திரங்கள் விற்பனை செய்வர். அதிலிருந்து கிடைக்கும் பணம் புயல் நிதிக்கு ஒதுக்கப்படும்.

**பிருத்விராஜ் நாடக கோஷ்டி**

பிரபல ஹிந்தி நடிகரான பிருத்விராஜும் அவரது நாடக கோஷ்டியும் இம்மாதம் தென் இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்களாம். சென்னையில் பிருத்விராஜ் கோஷ்டியார் தங்கள் நாடகங்களை நடித்துக் காட்ட, சென்னையிலுள்ள பல ஸ்தாபனங்களின் அழைப்புக்கிணங்கவே வருகின்றனர்.

**பணம் திரையிடப் பட்டது**

சென்ற மாதம் 27ம் தேதி முதல் மதராஸ் பிக்சர்ஸின் "பணம்" தமிழ் நாட்டின் முக்கியமான நகரங்களில் திரையிடப் பட்டுள்ளது. பத்மினி, சிவாஜி கணேசன், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், வி. எஸ். சுசீலா, வி. கே. ராமசாமி, பி. ஆர். பந்துலு, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, எம். ஆர். சாமிநாதன், டி. வி. சேதுராமன் ஆகப் பலர் நடித்துள்ளனர். படத்தின் வசனங்களை மு. கருணாநிதி எழுதி யிருக்கிறார். புது மாதிரிக் கருத்து அமைந்த கதையான "பண"த்திற்கு தமிழ் நாட்டில் நல்ல ஆதரவு இருக்குமென எதிர்பார்க்கலாம்.

**சினிமா ரஸிகர் சங்கம்**

சென்ற மாதம், சென்னையில் சமூக சேவா சங்கத்தினர் மகாநாடு நடைபெற்றது. அதில் பல நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். சென்ற மாதம் 16ம் தேதி, மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு "மல்லேஸ்வரி" தெலுங்குப் படத்தின் சில பகுதிகள் திரையிட்டுக் காட்டப் பட்டன. இந்த நிகழ்ச்சி சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப் பட்டதாகும்.

**"ஓவோமால்ட்"**

ஓவோமால்ட் இப்பொழுது பலராலும் விரும்பிப் பருகப்பட்டு வருகிறது. அது ருசியாக இருப்பதுடன், ஆரோக்கியமான ஒரு சத்துள்ள உணவுப் பொருளாகவும் உதவுகிறது. இந்த அரிய பானத்தை சிறந்த முறையில் தயாரிக்க நேர்த்தியான தொழிற் சாலை ஒன்று சேலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, தினசரி ஆயிரக் கணக்கான டின்கள் தயாராகி வருகின்றன.

# பிரம்மலோகம்

ஒரு குமாஸ்தாவின் வாழ்க்கை எப்படிப் பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டதாம் "குமாஸ்தா" படக் கதை. "ராஜாம்பாளை" வெற்றிகரமாய் தயாரித்துத் திரையிட்ட பல அனுபவஸ்தர்களைக் கொண்ட, அருணா பில்ம்ஸாரது இப் படம் தமிழ்-தெலுங்கு இரு மொழிகளிலும் அவர்களது சொந்த ஸ்டுடியோவான பில்ம் ஸெண்டரில் படமாகி வருகிறது. வி. நாகய்யா, ஜெயம்மா, நரசிம்ம பாரதி, மனோஹர், பண்டரி பாய், எம். சரோஜா, அங்கமுத்து, ஸி. கே. சரஸ்வதி, சிவதாணு, கே. ராமசாமி ஆகியோர் நடித்து வரும் இப் படங்களை ஆர். எம். கிருஷ்ணஸ்வாமி டைரெக்ட் செய்து வருகிறார். பெரும் பகுதி படமாகி விட்டமையால் இப் படம் சீக்கிரமே திரைக்கு வந்து விடக் கூடும்.

### இன்ஸ்பெக்டர்

குஷியாகப்பாடியபடியே ஆடிக் கொண்டிருந்தாள் ஒரு நங்கை, நந்தவனம் ஒன்றிலே. காதலன் வருகையைக் குறித்துத் தான் அவளது சந்தோஷமெல்லாம். மறைவில் நின்றபடி இந்த ஆட்ட பாட்டத்தையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான் ஒரு அழகன். இவ்வளவும் நெப்டியூன் ஸ்டுடியோவில் "இன்ஸ்பெக்டர்" படத்திற்காக ஆர்.எஸ். மணி டைரெக்ஷனில் சென்ற மாதம் படமாகியது. அழகியாக பி. கே. சரஸ்வதியும், அழகனை டி. கே. ஷண்முகமும் அந்தக் காட்சியில் நடித்தனர். மற்றும் அஞ்சலி தேவி, பாலச்சந்தர், எஸ். ஏ. நடராஜன் ஆகியோரும் நடித்து வரும் இந்தப் படம் ஜூபிடரின் தயாரிப்பாகும். இப் படம் தமிழ்-தெலுங்கு ஆகிய பாஷைகளிலும் தயாராகி வருகிறது.

### வாழப் பிறந்தவள்

"அப்பா, நீங்கள் செய்வது நியாயமில்லை. ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்கலாமா?" என்று ஒரு பெண் தன் தந்தையிடம் வாதாடுகிறாள். ஆனால், தந்தையின் மனம் தான் கல்லாகவே இருக்கிறது. இந்தக் காட்சி வாஹினி ஸ்டுடியோவில் சென்ற மாதம் படமாக்கப் பட்டது ஆர். ஆர். பிக்சர்ஸாரது "வாழப் பிறந்தவள்" படத்துக்காக. டி. ஆர். ராஜகுமாரியின் சொந்தப் படமான இதை அவரது சகோதரர் ராமண்ணா டைரெக்ட் செய்து வருகிறார். மகளாக பண்டரி பாயும், தந்தையாக கே. சாரங்கபாணியும் நடித்தனர். அதே காட்சியில் மகனாக ஸ்ரீராமும், அவரது நண்பனாக சந்திரபாபுவும், தரகர் அகோர சாஸ்திரியாக டி. வி. சேதுராமனும் நடித்தார்கள். இவர்கள் தவிர டி. எஸ். பாலையாவும், டி. ஆர். ராஜகுமாரியும் முக்கியமான பாகங்களில் நடித்து வருகின்றனர்.

### மனோஹரா

மனோஹர் பிக்சர்ஸாரது "மனோஹரா" மூன்று பாஷைகளில் (தமிழ்-தெலுங்கு-ஹிந்தி) நெப்டியூனில் படமாகி வருகிறது. இப் படத்தில் சத்தியசீலனாக நடிக்க ஜாவர் சீதாராமன் ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறார். எல். வி. பிரஸாத் டைரெக்ட் செய்யும் இப் படத்தில் டி. ஆர். ராஜகுமாரி, கே. ஆர். ராமசாமி, பண்டரி பாய், முஸ்தாபா, முத்துலக்ஷ்மி ஆகியோரும் நடித்து வருகின்றனர். இப் படத்தின் வசனங்களை மு. கருணாநிதி எழுதி யிருக்கிறார்.

### கண்கள்

எஸ். வி. ஸஹஸ்ரநாமம் தமது "கண்கள்" பட விஷயத்தில் இப்பொழுது முனைந்திருக்கிறார். ரேவதி ஸ்டுடியோவில் "கண்கள்" படப் பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. படத்தை கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ட் செய்து வருகின்றனர். படத்தில் எஸ். வி. ஸஹஸ்ரநாமம், 'சிவாஜி' கணேசன், பண்டரி பாய், மைனாவதி ஆகியோர் நடித்து வருகின்றனர்.

### மனிதன்

யுத்தகளத்தில் சேவை செய்யப் போயிருந்த டாக்டர் சுகுமாரன் திரும்பவும் பம்பாய் துறைமுகத்தில் வந்து இறங்குகிறான். நண்பர்கள் அவனை துறைமுகத்தில் வந்து வரவேற்கின்றனர். இந்தக்காட்சி சென்ற மாதத்தில் படமாகியது ஜூபிடர்-லாவண்யாகூட்டுத் தயாரிப்பான "மனிதன்" படத்திற்காக. டாக்டர் சுகுமாரனாக டி.

கே. பகவதி நடித்தார். மற்றும் இப் படத்தில் டி. கே. ஷண்முகம், மாதுரி தேவீ, பண்டரிபாய், கிருஷ்ண குமாரி. கே. ராமசாமி ஆகியோர் நடித்து வருகின்றனர். ராம்னுத் டைரெக்ஷனில் தயாராகிவரும் இப் படம் இன்னும் ஒரே மாதத்திற்குள் திரையிடத் தயாராகி விடுமாம்.

### மருமகள்

பிப்ரவரி மாதத்தில் திரைக்கு வரக்கூடிய படமாக இருக்குமாம் கிருஷ்ணு பிக்சர்ஸாரின் "மருமகள்". இப் படம் தமிழ்–தெலுங்கு இரு பாஷைகளிலும் எல். வி. பிரஸாத் மேற்பார்வையில் தயாராகி வருகின்றன. படம் முக்கால் பகுதி முடிவடைந்து விட்டது. படத்தை என். டி. ராம ராவ், டி. ஆர். ராமச்சந்திரன், பத்மினி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, ஸி. டி. ராஜகாந்தம் ஆகப் பலர் நடித்து வருகின்றனர். படத்தை சீக்கிரமே தயாரித்து விட வேண்டுமென, இப் படம் ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்டுடியோக்களில் படமாக்கி வருகிருர்கள்.

### உலகம் பல விதம்

நேஷனல் புரொடக்ஷன்ஸின் மூன்ருவது தயாரிப்பான "உலகம் பல விதம்" நியூடோன் ஸ்டுடியோவில் தொடர்ந்து படமாகி வருகிறது. முன் இரண்டு படங்களையுப் போலவே இப்படத்தின் வசனங்களையும்வி. என். சம்பந்தம் மிகவும் ஹாஸ்ய முறையில் எழுதி யிருக்கிருராம். ஜன ரஞ்சகமான பல அம்சங்களைப் படத்தில் புகுத்தி வருகிருராம். படத்தின் டைரெக்டர் டி. ஆர். ரகுநாத். பி. கே. சரஸ்வதி, சிவாஜி கணேசன், லக்ஷ்மிப் பிரபா, எம். சரோஜா, வி. கே. ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன் ஆகியோர் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர்.

### அழகி

நெப்டியூன் ஸ்டுடியோவில் "அழகி"யும் ஒரு பக்கம் படமாகி வருகிறது. தமிழ்–தெலுங்கு இரண்டு பாஷைகளில் இது படமாக்கப்பட்டு வருகிறது. ஜூபிடரின் தயாரிப்பான இப் படங்களை சுந்தர் ராவ் நட்கர்ணி டைரெக்ட் செய்துவருகிருர். கிருஷ்ண குமாரி, எஸ். ஏ. நடராஜன், எம். என். நம்பியார், ரேவதி, வீ. கே. ராமசாமி, ஸி. கே. சரஸ்வதி நடிக்கின்றனர். தமிழ்ப் பட வசனங்களை என். சுவாமிநாதன் எழுதி யிருக்கிருர்.

மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பது!




காரம், மணத்தில் நிகரற்றது!

எங்கும் கிடைக்கும்

# குண்டூசி டைரி

13414

## நவம்பர், 1952

21. ஆங்கில விளக்க உரையுடன் கூடிய "பூகிவாரிசு" படம் சென்னை நகரில் திரையிடப் பட்டது.

22. சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கக் கூட்டமென்று நடைபெற்றது.

"யூகிவாரிசு" படம் சிறுவர்களுக்கென பிரத்தியேகமாக திரையிட்டுக் காட்டப் பட்டது.

26. லக்ஷ்மி நாராயண் பிக்சர்ஸார் தங்களது "ஜெயகுமாரி" படத்தின் ஆரம்ப பூஜையை நடத்தினர்கள்.

மொஹிதீன் புரொடன்ஸாரது "ரகஸ்யம்" படத்தின் ஆரம்ப பூஜை நெப்டியூன் ஸ்டுடியோவில் நடைபெற்றது.

28. கே அண்ட் கே புரொடக்ஷன்ஸாரின் "பசியின் கொடுமை" தமிழ்ப் படம் தமிழ் நாட்டில் திரையிடப் பட்டது.

29. யுவா பிக்சர்ஸாரது "சியாமளா" தமிழ்ப் படம் தமிழ் நாட்டில் திரையிடப் பட்டது.

30. தமிழ் நாடு டாக்கீஸாரது "பெண் மனம்" பத்திரிகைக் காட்சி நடைபெற்றது.

## டிஸம்பர், 1952

5. தமிழ் நாடு டாக்கிஸாரின் "பெண் மனம்", கே அண்ட் கே புரொடக்ஷன்ஸின் "பசியின் கொடுமை", மகாத்மா பிக்சர்ஸ் "ஜெகன் மோஹினி" ஆகிய மூன்று படங்களும் சென்னையில் திரையிடப்பட்டன.

ஏடி. எம் புரொடக்ஷன்ஸார் தங்களது முதல் படத்திற்கு பூஜை போட்டார்கள்.

11. சென்னை, மயிலாப்பூரில் காமதேனு என்ற புதிய தியேட்டர் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

14. சென்னை கலாபிமானிகள் கழகத்தினர், கழகத்தின் சங்கீதப் பிரிவை ஆரம்பித்தார்கள்.

16. ஸ்ரீ ராமாஞ்சநேய நாடக மன்றத்தினர் "ஒரு சொல்" என்ற நாடகத்தை நடித்தனர்.

ஆருவது அகில உலக சமூக சேவா சங்க மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தினரின் முயற்சியின் பேரில் "மல்லேஸ்வரி" படத்தின் சில பகுதிகள் திரையிட்டுக் காட்டப் பட்டது.

18. அ. இ. காங்கிரஸ் சுதேசிப் பொருள் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப் பட்டது.

19. மியூஸிக் அகேடமியின் சங்கீத வெள்ளி விழா ஆரம்பமாயிற்று.

---

### இரு புது ரப்பர் பாக்டரிகள்

கல்கத்தாவிலிருந்து 35 மைல்களுக்கு அப்பாலுள்ள சாஹாகஞ்ஜில் இரு புது ரப்பர் பாக்டரிகளை சென்ற மாதம் 12ம் தேதி மேற்கு வங்க கவர்னர் டாக்டர் பி. ஸி. ராய் ஆரம்பித்து வைத்தார். பிரபல "டன்லப் ரப்பர் அண்டு டயர் கம்பெனி"யால் நிறுவப்பட்டுள்ள இந்த இரு கம்பெனிகள் உத்தியோக பூர்வமாக அன்று துவக்கி வைக்கப்பட்ட போதிலும், உற்பத்தி ஏற்கனவே துவக்கியாகி விட்டது. ஜனங்களுக்கு உபயோகமான வஸ்துக்களை ஏராளமாய் உற்பத்தி செய்ய வேண்டிய அவசியத்தை, டாக்டர் பி. ஸி. ராய் வற்புறுத்தினர். மிகவும் உபயோகமான சாமான்களைத் தயாரித்து வரும் டன்லப் ரப்பர் டயர் கம்பெனியை அவர் பாராட்டினர்.

கம்பெனியின் நிர்வாக டைரெக்டர் ஸ்ரீ. சீசில்ஸ் டாக் பேசுகையில், 1936ல் இக் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கச்சா ரப்பர் ஏற்றுமதியில் 83 சதம் குறைந்ததுடன், ரப்பர் தயாரிப்புச் சாமான்களின் இறக்குமதியிலும் 96 சதம் குறைந்திருக்கிறது என்றார். இந்தியாவில் சைக்கிள் டயர்களில் 90 சதமும், மோட்டார் டயர்களில் 70 சதமும், டிராக்டர்கள், லாரிகள் போன்றவைகளுக்கான பெரிய டயர்களில் 60 சதமும் இக் கம்பெனியில் தயாரிக்கப் படுகின்றன என்று அவர் கூறினர். கன்வேயர் பெல்டிங் இயந்திரம் அடுத்த ஆண்டில் நிறுவப்படும் என்று ஸ்ரீ. சீசில் ஸ்டாக் அறிவித்தார்.

---

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras - 1.

# இந்தியாவின் தலைசிறந்த
# பட்டணம் பொடி


காலையில் எழுந்தவுடன் சுறுசுறுப்புடனிருக்க
ஒரு சிட்டிக்கை

உடல் சுத்தி செய்து உண்டி அருந்தி உறுதியுடன்
உழைப்பிலிறங்க ஒரு சிட்டிக்கை

பகல் போஜனத்திற்குப்பின் பரவசமடைய
ஒரு சிட்டிக்கை

மனோகரமான மாலை வேளையில் மனநிம்மதியுட
னிருக்க ஒரு சிட்டிக்கை


பெண்டு பிள்ளைகளுடன் உண்டு களித்து
உறங்கப்போகுமுன் ஒரு சிட்டிக்கை



# T.A.S. ரத்தினம்
# பட்டணம் பொடி

T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால் பெட்டி 1151, வண்ணாரப் பேட்டை, மதராஸ்.

S. R. ஞானம் பட்டணம் பொடியும் எங்கள் தயாரிப்பே.




அகில இந்திய காதி, சுதேசி பொருட்காட்சியில்—எங்கள் 184-ம் நம்பர் ஸ்டாலுக்கு உங்கள் நல்வரவை அன்புடன் எதிர்பார்க்கும்......" அர்ஷா ".